3 973 A

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருநள்ளாற்றுப் புராணம்.

OFFICE OF THE R... 9-FEB 193. MADRAS

இது

திருமலைராயன்பட்டினம்

ஸ்ரீமான்

இ. ரும. சௌரிராஜபிள்ளையவர்களால்

கும்பகோணம் யதார்த்தவசனீ பிரஸில்

அச்சிடப்பட்டது.

(இரண்டாம் பதிப்பு.)

500 காப்பிகள்.

1935.

[ அணா 6.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

9 - FEB 1935
MADRAS.

# திருநள்ளாற்றுப் புராணம்.

இது

திருமலைராயன்பட்டினம்

ஸ்ரீமான்

இ. ருட. சௌரிராஜபிள்ளையவர்களால்

கும்பகோணம் யதார்த்தவசனீ பிரஸில்

அச்சிடப்பட்டது.

---

(இரண்டாம் பதிப்பு.)

500 காப்பிகள்.

1935.

இதன் விலை] [அணா 6.

597
294.5̇35



78148

Q23:38.21193TN
N35

உ

சிவமயம்.


# திருநள்ளாற்றுப்புராணம்.

இப்புராணம் ஒன்பது சருக்கங்களாக வகுக்கப்பட்டு 307 பாட்டுக்களால் பாடப்பட்டிருக்கிறது. இந்நூலைப் பாடிய ஆசிரியரின் பெயர், மரபு, காலம், இடம் முதலிய வற்றுள் ஒன்றும் புலப்படவில்லை. ஆனால் அவ்வாசிரியர் நல்ல தமிழ்ப்புலமையும் சைவாபிமானமும் படைத்த பெரியாராகத்தா னிருக்கவேண்டுமென்பதுமாத்திரம் புலப்படுகிறது. ஆயினும் இப்புராணம் 28 வருஷங்களுக்கு முன் அச்சிடப்பட்டிருக்கிறது. இப்புராணம் சப்தவிடங்கஸ்தலங்களுள் ஒன்றானதும், மூவராலும் பாடப்பட்ட மகிமையுள்ளதும், பிரமன் முதலிய தேவர்களாலும், முனிவர்களாலும், நளன் முதலிய அரசர்களாலும் போற்றப்பட்டதும், சனீஸ்வரபகவான் எழுந்தருளியிருந்து உலகத்தாரது துன்பங்களை நிவர்த்தி செய்தருளும் மகிமை வாய்ந்ததுமாகிய திருநள்ளாறு என்று சொல்லப்படும் க்ஷேத்திர மான்மியமாக இருப்பதுபற்றி ஆஸ்திகர்களின் விருப்பத்தின்படி மீண்டும் அச்சிடலாயிற்று. அச்சிடப்பட்டுள்ள புராணமோ பிழைபட்ட எழுத்துக்களையும் சொற்களையும் மிகுதியாக [illegible] யதாகவும் பொருள்பொருந்தாத தொடர்மொழிகளைப்

பலவிடங்களில் உள்ளதாகவும் காணப்படுகின்றது. மூலப்பிரதி கிடைக்காமையினால் ஆசிரியர்கருதிய சரியான பாடம் இன்னதென்பதைக் கண்டறிவதும் எளிதாகவில்லை. இந்த நிலைமையில் இயன்றவரையில் பொருள் மாறுபாடில்லாமல் திருத்தி யச்சிடவேண்டுவதாயிற்று. மேலும் முன் அச்சிடப்பட்ட நூலிலே சேர்க்கப்பட்டிருந்த இப்புராணத்தின் வசனப்பகுதியும் சாமான்ய படிப்புள்ளவர்களும் இத்தலமான்மியத்தைத் தெரிந்து இன்புறுதற்பொருட்டாக இதனுடன் சேர்த்து அச்சிடப்பட்டிருக்கிறது. மேலும் சரித்திரங்களை விளக்கவல்ல படங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இப்புராணத்தின் மூலப்பிரதி கிடைக்கப்பெற்றுள்ளவர்கள் அப்பிரதியை அன்புகூர்ந்து அனுப்புவார்களானால் அப்பிரதியிற்கண்டபடி திருத்தஞ் செய்துகொண்டு அப்பிரதியை நன்றியறிதலோடு அனுப்பியவர்களுக்கே ஜாக்கிரதையாகத் திருப்பி அனுப்பிவைக்கப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இ. மு. சௌரிராஜப்பிள்ளை,
ரிஜேஜாரியே,
திருநள்ளாறு தேவஸ்தானம்.





உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

FEB. MADRAS OF BOOKS

# சத்த விடங்கத் தலங்கள்.

### நேரிசை வெண்பா.

*சத்தவிடங் கத்தலங்கள் சாற்றுங்கால் நள்ளாறு*
*கத்தனு ரூர்வாய்மூர் காராயில்—நத்து*
*நாகைக்கா ரோணமுடன் நாடுதிருக் கோளிலியும்*
*ஈகைமறைக் காடா மிசை.*

---

## சத்த விடங்கத் தலங்களின் வரலாறு.

---

திருமால் புத்திரப்பேறு வேண்டிச் சிவார்ச்சனை புரிய, அப்போது சிவபெருமான் தேவியாரோடு பிரசன்னராகிப் புத்திரானுக்கிரகஞ் செய்தார். திருமால் உமையம்மை யாரை வழிபடாத நிமித்தம் அவர் அப்பிள்ளை சிவபெரு மானாலே இறக்கக் கடவதெனச் சபித்து மறைந்தார். விஷ்ணுமூர்த்தியானவர் சுவாமி, அம்மை, ஸ்கந்தராகிய சோமாஸ்கந்த வடிவங்கள் அமைத்து அநேகநாள் பூசிப்ப, சிவனும் உமையும் எதிர்தோன்றி, முன் னருளிச்செய்த பிள்ளை இறப்பினும் இறவாதுயிர்த்தெழுந்து சகல உயிர் களிடத்தும் அரசாட்சி செய்வனென வரமருளி மறைந் தார்கள். பின்னர், தாம் பூசித்த சுவாமியைத் தம் மார்பே தொட்டிலாக வமைத்து திருப்பாற்கடலிற் பூசித்துச் சய னித்திருக்கும்பொழுது, அவ்விஷ்ணுவினிடத்துத் தேவேர்

திரன் சென்று, அச்சோமாஸ்கந்த மூர்த்தியைத் தரப் பெற்று பூசித்துவந்தான். வலாசுரன் யுத்தத்தில் துணை செய்த முசுகுந்தச்சக்கிரவர்த்தி, சிவபிரானிசைவுகொண்டு அச்சோமாஸ்கந்த மூர்த்தியைத் தரும்படி கேட்க, இந்திரன் தாலாற்றாதவனாய்த் திருமாலிசைவு வேண்டுமெனக் கூறினன். அவ்வனுமதியும் பெற்றமையுணர்ந்த இந்திரன் பின்னும் தெய்வக்கம்மியனால், அச்சோமாஸ்கந்த மூர்த்தியைப்போல் ஆறு மூர்த்திகளைச் செய்துகொடுத்தும், அவற்றை முசுகுந்தச்சக்கிரவர்த்தி, ஆறு தலத்தின்கண்ணும் பிரதிஷ்டைசெய்து பின்னர், கடைசியாகத் திருமால் பூசித்த தியாகரையே வேண்டிப் பெற்றுத் திருவாரூரின்கண் பிரதிஷ்டை செய்து பூசித்தனரென்பது நூற்பிரமாணம். அங்ஙனமாகிய ஏழுதலங்களும் சத்தவிடங்கத் தலமெனக் கூறப்படும்.



## திருநள்ளாறு.

| | | | |
|---|---|---|---|
| தர்ப்பாரண்யேச்சுரர், போகமார்த்தபூண்முலையம்மை, தர்ப்பை விருட்சம். | நக விடங்கத் தியாகர், உன்மத்த நடனம். | சிவகங்கை முதலிய தீர்த்தங்கள். | சமயாசாரியர் மூவராலும் அருளிய திருப்பதிகங்கள் எ. |

## திருவாரூர்.

| | | | |
|---|---|---|---|
| புற்றிடங் கொண்டார், அல்லியங் கோதையம்மை, கமலவதி யம்மை, | வீதிவிடங்கத் தியாகர், அசபா நடனம். | கமலாலய முதலிய தீர்த்தங்கள். | சமயாசாரியர் மூவராலும் அருளிய திருப்பதிகங்கள் உ௪. |

## திருவாய்மூர்.

| | | | |
|---|---|---|---|
| வாய்மூர் நாதேச்சுரர், பாலினு நன்மொழியம்மை, புன்னை விருட்சம். | நீலவிடங்கத் தியாகர், கமல நடனம். | சண்டமாருதம் முதலிய தீர்த்தங்கள். | திருஞான சம்பந்த சுவாமிகள், அப்பர் சுவாமிகள் அருளிய திருப்பதிகங்கள் க. |

## திருக்காராயில்.

| | | | |
|---|---|---|---|
| கண்ணாயிரநாதேச்சுரர், கயிலாசநாயகி யம்மை, | ஆதிவிடங்கத் தியாகர், குக்குட நடனம். | இந்திர தீர்த்த முதலிய தீர்த்தங்கள். | திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிய திருப்பதிகம் க. |

## திருநாகைக் காரோணம்.

| | | | |
|---|---|---|---|
| ஆதிபுராணேச்சரர், காயாரோகணேச்சரர், நீலாயதாட்சியம்மை, மா விருட்சம். | சுந்தர விடங்கத் தியாகர் பாராவார தரங்க நடனம். தரங்கம் அலை. | சர்வ தீர்த்தம் முதலிய தீர்த்தங்கள். | சமயாசாரியர் மூவராலும் அருளிய திருப்பதிகங்கள் ௭. |


## திருக்கோளிலி.

| | | | |
|---|---|---|---|
| கோளிலி நாதேச்சரர், வண்டமர்பூங்குழலியம்மை. | அவனி விடங்கத் தியாகர், வண்டு நடனம். | திருக்குவளை தீர்த்தம் முதலிய தீர்த்தங்கள். | சமயாசாரியர் மூவராலும் அருளிய திருப்பதிகங்கள் ௬. |

## திருமறைக்காடு.

| | | | |
|---|---|---|---|
| மறைக்காட்டீச்சரர், யாழைப்பழித்த மொழியம்மை, வன்னி விருட்சம். | புவனி விடங்கத் தியாகர், ஹம்ஸ நடனம். | அலைவாய்த் தீர்த்தம் முதலிய தீர்த்தங்கள். | சமயாசாரியர் மூவராலும் அருளிய திருப்பதிகங்கள் ௰. |

திருச்சிற்றம்பலம்.



மதுரை பாண்டியன் சுரநோய் தீர்த்தல். நள்ளாற்றுப்பதிகத்தை தீயிலிடுதல்.
அப்பதிகம் தீயாதிருத்தல். சமணரை கழுவேற்றல்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய

# தேவாரப் பதிகங்கள்.

இது

மதுரையில்

சமணர்கள் வாதின்பொருட்டுத் தீயிலிட்டு வேகாதெடுத்த

## பச்சைத் திருப்பதிகம்.

பண்—பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

போகமார்த்த பூண்முலையாள் தன்னோடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண் வெள்ளேற்றண்ணல் பரமேட்டி
யாகமார்த்த தோலுடையன் கோவண வாடையின்மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே. (க)

தோடுடைய காதுடையன் றோலுடையன் தொலையாப்
பீடுடைய போர்விடையன் பெண்ணுமோர் பாலுடைய
னேடுடைய மேலுலகோ டேழ்கட லுஞ்சூழ்ந்த
காடுடைய நம்பெருமான் மேயது நள்ளாறே. (உ)

ஆன்முறையா லாற்றவெண்ணீ றாடி யணியிழையோர்
பான்முறையால் வைத்தபாதம் பத்தர் பணிந்தேத்த
மான்மறியும் வெண்மழுவுஞ் சூலமும் பற்றியகை
நான்மறையா னம்பெருமான் மேயது நள்ளாறே (ந)

புல்கவல்ல வார்சடைமேற் பூம்புனல் பெய்தயலே
மல்கவல்ல கொன்றைமாலை மதியோ டுடன்சூடிப்
பல்கவல்ல தொண்டர்தம் பொற்பாத நிழற்சேர
நல்கவல்ல நம்பெருமான் மேயது நள்ளாறே. (ச)

ஏறுதாங்கி யூர்திபேணி யேர்கொ ளிளமதிய
மாறுதாங்குஞ் சென்னிமேலோ ராடர வஞ்சூடி
நீறுதாங்கி நூல்கிடந்த மார்பி னிரைகொன்றை
நாறுதாங்கு நம்பெருமான் மேயது நள்ளாறே. (௫)

திங்களுச்சி மேல்விளங்குந் தேவ னிமையோர்க
ளெங்களுச்சி யெம்மிறைவ னென்றடி யேயிறைஞ்சத்
தங்களுச்சி யால்வணங்குந் தன்னடி யார்கட்கெல்லா
நங்களுச்சி நம்பெருமான் மேயது நள்ளாறே. (௬)

வெஞ்சுடர்த்தீ யங்கையேந்தி விண்கொண் முழவதிர
வஞ்சிடத்தோ ராடல்பாடல் பேணுவ தன்றியும்போய்ச்
செஞ்சடைக்கோர் திங்கள்சூடித் திகழ்தரு கண்டத்துள்ளே
நஞ்சடைத்த நம்பெருமான் மேயது நள்ளாறே. (௭)

சிட்டமார்ந்த மும்மதிலுஞ் சிலைவரைத் தீயம்பினாற்
சுட்டுமாட்டிச் சுண்ணவெண்ணீ றாடுவ தன்றியும்போய்ப்
பட்டமார்ந்த சென்னிமேலோர் பான்மதி யஞ்சூடி
நட்டமாடு நம்பெருமான் மேயது நள்ளாறே. (௮)

உண்ணலாகா நஞ்சுகண்டத் துண்டு டனேயொடுக்கி
யண்ணலாகா வண்ணறீழ லாரழல் போலுருவ
மெண்ணலாகா வுள்வினையென் றெள்க வலித்திருவர்
நண்ணலாகா நம்பெருமான் மேயது நள்ளாறே. (௯)

மாசுமெய்யர் மண்டைத்தேரர் குண்டர் குணமிலிகள்
பேசும்பேச்சை மெய்யென்றெண்ணி யந்நெறி செல்லன்மின்
மூசுவண்டார் கொன்றைசூடி மும்மதி லும்முடனே
நாசஞ்செய்த நம்பெருமான் மேயது நள்ளாறே. (௧௦)

தண்புனலும் வெண்பிறையுந் தாங்கிய தாழ்சடையன்
நண்புநல்லார் மல்குகாழி ஞானசம் பந்தனல்ல
பண்புநள்ளா றேத்துபாடல் பத்து மிவைவல்லா
ருண்புரிந்து வானவரோ டுலகி லுறைவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.



திருவிராகம் பண்—சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

தளிரிள வளரொளி தனதெழி றருதிகழ் மலைமகள்
குளிரிள வளரொளி வனமுலை யிணையவை குலவலி
னளிரிள வளரொளி மருவுநள் ளாறர்தம் நாமமே
மிளிரிள வளரெரி யிடிலிவை பழுதிலை மெய்ம்மையே. (௧)

போதமர் தருபுரி குழலெழின் மலைமகள் பூணணி
சீதம தணிதரு முகிழிள வனமுலை செறிதலி
னாதம தெழிலுரு வனையவன் னாறர்தம் நாமமே
மீதம தெரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே. (௨)

இட்டுறு மணியணி யிணர்புணர் வளரொளி யெழில்வடங்
கட்டுறு கதிரிள வனமுலை யிணையொடு கலவலி
னட்டுறு செறிவயன் மருவுநள் ளாறர்தம் நாமமே
யிட்டுறு மெரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே. (௩)

மைச்சணி வரியரி நயனிதொன் மலைமகள் பயனுறு
கச்சணி கதிரிள வனமுலை யவையொடு கலவலி
னச்சணி மிடறுடை யடிகணள் ளாறர்தம் நாமமே
மெச்சணி யெரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே. (௪)

பண்ணியன் மலைமகள் கதிர்விடு பருமணி யணிநிறக்
கண்ணியல் கலசம தனமுலை யிணையொடு கலவலி
னண்ணிய குளிர்புனல் புகுதுநள் ளாறர்தம் நாமமே
விண்ணிய வெரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே. (௫)

போதுறு புரிகுழன் மலைமக ளிளவளர் பொன்னணி
சூதுறு தளிர்நிற வனமுலை யவையொடு துதைதலிற்
றாதுறு நிறமுடை யடிகணள் ளாறர்தம் நாமமே
மீதுறு மெரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே. (௬)

கார்மலி நெறிபுரி சுரிகுழன் மலைமகள் கவினுறு
சீர்மலி தருமணி யணிமுலை திகழ்வொடு செறிதலிற்
றார்மலி நகுதலை யுடையநள் ளாறர்தம் நாமமே
யேர்மலி யெரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே. (௭)

மன்னிய வளரொளி மலைமக டளிர்நிற மதமிகு
பொன்னியல் மணியணி கலசம தனமுலை புணர்தலிற்
றன்னிய றசமுக னெரியநள் ளாறர்தந் நாமமே
மின்னிய லெரியினி லிடுவினை பழுதிலை மெய்ம்மையே. (அ)

கான்முக மயிலியன் மலைமகள் கதிர்விடு கனமிகு
பான்முக மியல்பகை பிணைமுலை துகிலொடு பயிறலி
னான்முக னரியறி வரியநள் ளாறர்தந் நாமமே
மேன்முக வெரியினி லிடுவினை பழுதிலை மெய்ம்மையே. (கூ)

அத்திர நயனிதொன் மலைமகள் பயனுறு மதிசயச்
சித்திர மணியணி திகழ்முலை பிணையொடு செறிதலிற்
புத்தரொ டமணர்பொய் பெயருநள் ளாறர்தந் நாமமே
மெய்த்திர ளெரியினி லிடுவினை பழுதிலை மெய்ம்மையே. (ய)

சிற்றிடை யரிவைதன் வனமுலை பிணையொடு செறிதரு
நற்றிற முறுகழு மலநகர் ஞானசம் பந்தன்
கொற்றவ னெதிரிடை யெரியினி லிடவிவை கூறிய
சொற்றெரி யொருபது மறிபவர் துயரிலர் தூயரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

திருவிராகம்—பண்—இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

ஏடுமலி கொன்றையர விந்துவிள வன்னி
மாடவல செஞ்சடையெ மைந்தனிட மென்பர்
கோடுமலி ஞாழல்குர வேறுசுர புன்னை
நாடுமலி வாசமது வீசியநள் ளாறே. (க)

விண்ணியல் பிறைப்பிள வறைப்புனன் முடித்த
புண்ணிய னிருக்குமிட மென்பர்புவி தன்மேற்
பண்ணிய நடத்தொடிசை பாடுமடி யார்க
ணண்ணிய மனத்தின்வழி பாடுசெய்நள் ளாறே. (உ)



விளங்கிழை மடந்தைமலை மங்கையொரு பாகத்
துளங்கொள விருத்தியவொ ருத்தனிட மென்பர்
வளங்கெழுவு தீபமொடு தூபமலர் தூவி
நளன்கெழுவி நாளும்வழி பாடுசெய்நள் ளாறே. (ங)

கொக்கரவர் கூன்மதியர் கோபர்திரு மேனிச்
செக்கரவர் சேருமிட மென்பர்தட மூழ்கிப்
புக்கரவர் விஞ்சையரும் விண்ணவரு நண்ணி
நக்கரவர் நாமநினை வெய்தியநள் ளாறே. (ச)

நெஞ்சமிது கண்டுகொ ளுனக்கென நினைந்தார்
வஞ்சம தறுத்தருளு மற்றவனை வானோ
ரஞ்சமுது காகியவர் கைதொழவெ ழுந்த
நஞ்சமுது செய்தவனி ருப்பிடநள் ளாறே. (ரு)

பாலனடி பேணவவ னுயிர்கு றைக்குங்
காலனுடன் மாளமு னுதைத்தவர னூராங்
கோலமலர் நீர்க்குடமெ டுத்துமறை யாளர்
நாலின்வழி நின்றுதொழில் பேணியநள் ளாறே. (சு)

நீதியர்நெ டுந்தகையர் நீண்மலையர் பாவை
பாதியர்ப ராபரர்ப ரம்பரரி ருக்கை
வேதியர்கள் வேள்வியொழி யாதுமறை நாளு
மோதியரு மமுமு ணர்த்திடுநள் ளாறே. (எ)

கடுத்துவல ரக்கன்மு னெருக்கிவரை தன்னை
யெடுத்தவன் முடித்தலைகள் பத்துமிகு தோளு
மடர்த்தவர் தமக்கிடம தென்பரளி பாட
நடத்தகலை வைத்திரள்கள் வைகியநள் ளாறே. (அ)

உயர்ந்தவ னுருக்கொடு திரிந்துலக மெல்லாம்
பயந்தவ னினைப்பரிய பண்பனிட மென்பர்
வியந்தமரர் மெச்சமலர் மல்குபொழி லெங்கு
நயந்தரும வேதவொலி யார்திருநள் ளாறே. (கூ)

சிந்தைதிரு கற்சமணர் தேரர்தவ மென்னும்
பந்தனைய றுத்தருள நின்றபர மன்னூர்

மந்தமுழ வந்தருவி ழாவொலியும் வேதச்
சந்தம்விர விப்பொழின் முழங்கியநள் ளாறே (௰)

ஆடலர வார்சடைய னாயிழைத னோடும்
நாடுமலி வெய்திடனி ருந்தவனள் ளாற்றை
மாடமலி காழிவளர் பந்தனது செஞ்சொற்
பாடலுடை யாரையடை யாபழிக ளேயே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## திருநள்ளாறுந் திருவாலவாயும்.

விறவுரை—பண்—நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

பாடக மெல்லடிப் பாவையோடும் படுபிணக் காடிடம் பற்றிநின்று, நாடக மாடுநள் ளாறுடைய நம்பெரு மானிது வென்கொல்சொல்லாய், சூடக முன்கை மடந்தைமார்கள் துணைவரொ டுந்தொழு தேத்திவாழ்த்த, வாடக மாட நெருங்குகூட லாலவா யின்க ணமர்ந்தவாறே. (௧)

திங்களம் போதுஞ் செழும்புனலுஞ் செஞ்சடை மாட்டயல் வைத்துகந்து, நங்கண் மகிழுநள் ளாறுடைய நம்பெரு மானிது வென்கொல்சொல்லாய், பொங்கிள மென்முலை யார்களோடும் புனமயி லாட நிலாமுளைக்கு, மங்கழ கச்சுதை மாடக்கூட லாலவா யின்க ணமர்ந்தவாறே. (௨)

தண்ணறு மத்தமுங் கூவிளமும் வெண்டலை மாலையுர் தாங்கியார்க்கு, நண்ண லரியநள் ளாறுடைய நம்பெரு மானிது வென்கொல்சொல்லாய், புண்ணிய வாணரு மாதவரும் புகுந்துட னேத்தப் புனையிழையா, ரண்ணலின் பாடலெடுக்குங்கூட லாலவா யின்க ணமர்ந்தவாறே. (௩)

பூவினில் வாசம்புனலிற்பொற்புப் புதுவிரைச் சாந்தினி னாற்றத்தோடு, நாவினிற் பாடநள் ளாறுடைய நம்பெரு



மானிது வென்கொல்சொல்லாய், தேவர்கள் தானவர் சித்தர்விச்சா தரர்கணத் தோடுஞ் சிறந்துபொங்கி, யாவினி லைந்துகந் தாட்டுங்கூட லாலவா யின்க ணமர்ந்தவாறே. (௪)

செம்பொன்செய் மாலையும் வாசிகையுந் திருந்து புகையு மவியும்பாட்டு, நம்பும் பெருமைநள் ளாறுடைய நம்பெருமானிது வென்கொல்சொல்லாய், உம்பரு நாக ருலகந்தாமு மொலிகடல் சூழ்ந்த வுலகத்தோரும், அம்புத நால்களா ளீடுங்கூட லாலவா யின்க ணமர்ந்தவாறே. (௫)

பாகமுந் தேவியை வைத்துக்கொண்டு பைவிரி துத்திப் பரியபேழ்வாய், நாகமும் பூண்டநள் ளாறுடைய நம்பெருமானிது வென்கொல்சொல்லாய், போகமு நின்னை மனத்துவைத்துப் புண்ணியர் நண்ணும் புணர்வுபூண்ட, வாகமுடையவர் சேருங்கூட லாலவா யின்க ணமர்ந்தவாறே. (௬)

கோவண வாடையு நீற்றுப்பூச்சுங் கொடுமழு வேந்தலுஞ் செஞ்சடையு, நாவணப் பாட்டு நள்ளாறுடைய நம்பெரு மானிது வென்கொல்சொல்லாய், பூவண மேனியிளையமாதர் பொன்னு மணியுங் கொழித்தெடுத்து, வாவண வீதியி லாடுங்கூட லாலவா யின்க ணமர்ந்தவாறே. (௭)

இலங்கை யிராவணன் வெற்பெடுக்க வெழில்விர லூன்றி யிசைவிரும்பி, நலங்கொளச் சேர்ந்தநள் ளாறுடைய நம்பெரு மானிது வென்கொல்சொல்லாய், புலன்களைச் செற்றுப் பொறியைநீக்கிப் புந்தியி லுந்நினைச் சிந்திசெய்யு, மலங்கனல்லார்க ளமருங்கூட லாலவா யின்க ணமர்ந்தவாறே. (௮)

பணியுடை மாலு மலரினோனும் பன்றியும் வென்றிப் பறவையாயு, நணுக லரியநள் ளாறுடைய நம்பெரு மானிது வென்கொல்சொல்லாய், மணியொலி சங்கொலி யோடுமற்றை மாமுர சின்னொலி யென்றுமோவா, தணிகிளர் வேந்தர் புகுதுங்கூட லாலவா யின்க ணமர்ந்தவாறே. (௯)

தடுக்குடைக் கையருஞ் சாக்கியருஞ் சாதியில் நீங்கிய வத்தவத்தர், நடுக்குற நின்றநள் ளாறுடைய நம்பெரு

மானிது வென்கொல்சொல்லா, யெடுக்கும் விழவுநன் னாள்
விழவு மிரும்பலி யின்பினோ டெத்திசையு, மடுக்கும் பெரு
மைசேர் மாடக்கூட லாலவா யின்க ணமர்ந்தவாறே. (௰)

அன்புடை யானை யரனைக்கூட லாலவாய் மேவிய
தென்கொலென்று, நன்பொனை நாதனை நள்ளாற்றானை நயம்
பெறப் போற்றி நலங்குலாவும், பொன்புடை சூழ்தரு மாடக்
காழிப் பூசுரன் ஞானசம் பந்தனசொன்ன, வின்புடைப்
பாடல்கள் பத்தும்வல்லா ரிமையவ ரேத்த விருப்பர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

---

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய

# தேவாரப் பதிகங்கள்.

## திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

உள்ளா றாததோர் புண்டரி கத்திரள்
தெள்ளா றாச்சிவச் சோதித் திரளினைக்
கள்ளா றாதபொற் கொன்றை கமழ்சடை
நள்ளா றாவென நம்வினை நாசமே. (௧)

ஆர ணப்பொரு ளாமரு ளாளனார்
வார ணத்துரி போர்த்த மணாளனார்
நார ணனண்ணி யேத்துநள் ளாறனார்
கார ணக்கலை ஞானக் கடவுளே. (௨)

மேகம் பூண்டதோர் மேருவிற் கொண்டெயில்
சோகம் பூண்டழல் சோரத்தொட் டானவன்
பாகம் பூண்டமால் பங்கயத் தானொடு
நாகம் பூண்டுகூத் தாடுநள் ளாறனே. (௩)



மலியுஞ் செஞ்சடை வாளர வம்மொடு
பொலியும் பூம்புனல் வைத்தபுனிதனார்
நலியுங் கூற்றை நலிந்தநள் ளாறர்தம்
வலியுங் கண்டிறு மார்ந்து மகிழ்வனே. (௪)

உறவ னாய்நிறைந் துள்ளங் குளிர்ப்பவன்
இறைவ னாகிநின் றெண்ணிறைந் தானவன்
நறவ நாறும் பொழிற்றிரு நள்ளாறன்
மறவ னாய்ப்பன்றிப் பின்சென்ற மாயமே. (௫)

செக்க ரங்கழி செஞ்சுடர்ச் சோதியார்
நக்க ரங்கர வார்த்தநள் ளாறனார்
வக்க ரன்னுயிர் வவ்விய மாயற்குச்
சக்க ரம்மருள் செய்த சதுரரே. (௬)

வஞ்ச நஞ்சிற் பொலிகின்ற கண்டத்தர்
விஞ்சை யிற்செல்வப் பாவைக்கு வேந்தனார்
வஞ்ச நெஞ்சத் தவர்க்கு வழிகொடா
நஞ்ச நெஞ்சர்க் கருளுநள் ளாறரே. (௭)

அல்ல னென்றம லர்க்கரு ளாயின
சொல்ல னென்றுசொல் லாமறைச் சோதியான்
வல்ல னென்றும் வல்லார்வள மிக்கவர்
நல்ல னென்றுநல் லார்க்குநள் ளாறனே. (௮)

பாம்ப ணைப்பள்ளி கொண்ட பரமனும்
பூம்ப ணைப்பொலி கின்ற புராணனும்
தாம்ப ணிந்தளப் பொண்ணாத் தனித்தழல்
நாம்ப ணிந்தடி போற்றுநள் ளாறனே. (௯)

இலங்கை மன்ன னிருபது தோளிற
மலங்க மால்வரை மேல்விரல் வைத்தவர்
நலங்கொ ளீற்றர்நள் ளாறரை நாடொறும்
வலங்கொள் வார்வினை யாயின மாயுமே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஆதிக்க ணான்முகத்தி லொன்று சென்று அல்லாத சொல்லுரைக்கத் தன்கை வாளாற், சேதித்த திருவடியைச் செல்ல நல்ல சிவலோக நெறிவகுத்துக் காட்டு வானை, மாதினை மாதோர்கூ றுபி னானை மாமலர்மே லயனோடு மாலுங் காணா, சாதியை நம்பியை நள்ளாற் றானை நானடியே னினைக் கப்பெற் றுய்ந்த வாறே. (௧)

படையானைப் பாசுபத வேடத் தானைப் பண்டனங்கற் பார்த்தானைப் பாவ மெல்லாம், அடையாமைக் காப்பானை யடியார் தங்க ளருமருந்தை யாவாவென் றருள்செய் வானைச், சடையானைச் சந்திரனைத் தரித்தான் றன்னைச் சங்கத்த முத்தனைய வெள்ளை யேற்றி, னடையானை நம்பியை நள்ளாற் றானை நானடியே னினைக்கப்பெற் றுய்ந்த வாறே. (௨)

படவரவ மொன்றுகொண் டரையி லார்த்த பராபர னைப் பைஞ்ஞீலி மேவி னானை, படலாவம் பற்றிக் கடைந்த நஞ்சை யமுதாக வுண்டானை யாதி யானை, மடலாவ மன்னு பூங் கொன்றை யானை மாமணியை மாணிக்காய்க் காலன் றன்னை, நடலரவஞ் செய்தானை நள்ளாற் றானை நானடியே னினைக்கப்பெற் றுய்ந்த வாறே. (௩)

கட்டங்க மொன்றுதங் கையி லேந்திக் கங்கணமுங் காதில்விடு தோட திட்டுச், சுட்டங்கங் கொண்டு துதை யப் பூசிச் சுந்தரனாய்ச் சூலங்கை யேந்தி னானைப், பட்டங்க மாலை நிறையச் சூடிப் பல்கணமுந் தாமும் பரந்த காட்டில், நட்டங்க மாடியை நள்ளாற் றானை நானடியே னினைக்கப் பெற் றுய்ந்த வாறே. (௪)

உலர்ந்தார்தம் மங்கங்கொண் டுலக மெல்லா மொருநொடியி லுழல்வானை யுலப்பில் செல்வஞ், சிலந்திதனக் கருள்செய்த தேவ தேவைத் திருச்சிராப் பள்ளியெஞ்



சிவலோ கனைக், கலந்தார்தம் மனத்தென்றுங் காத லானைக், கச்சியே கம்பனைக் கமழ்பூங் கொன்றை, நலந்தாங்கு நம்பியை நள்ளாற் றானை நானடியே னினைக்கப்பெற் றுய்ந்த வாறே. (௫)

குலங்கொடுத்துக் கோணிக்க வல்லான் றன்னைக் குலவரையின் மடப்பாவை யிடப்பா லானை, மலங்கெடுத்து மாதீர்த்த மாட்டிக் கொண்ட மறையவனைப் பிறைதவழ்செஞ் சடையி னானைச், சலங்கெடுத்துத் தயாமூல தன்ம மென்னுந் தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க் கெல்லா, நலங்கொடுக்கு நம்பியை நள்ளாற் றானை நானடியே னினைக் கப்பெற் றுய்ந்த வாறே. (௬)

பூவிரியு மலர்க்கொன்றைச் சடையி னானைப் புறம்பயத்தெம் பெருமானைப் புகலூ ரானை, மாவிரியக் களிறுரித்த மைந்தன் றன்னை மறைக்காடும் வலிவலமு மன்னி னானைத், தேவிரியத் திகழ்தக்கன் வேள்வி யெல்லாஞ் சிதைத்தானை யுதைத்தவன்றன் சிரங்கொண் டானை, நாவிரிய மறைநவின்ற நள்ளாற் றானை நானடியே னினைக்கப்பெற் றுய்ந்த வாறே. (௭)

சொல்லானைச் சுடர்ப்பவளச் சோதி யானைத் தொல்லவுணர் புரமூன்று மெரியச் செற்ற, வில்லானை யெல்லார்க்கு மேலா னானை மெல்லியலாள் பாகனை வேத நான்குங், கல்லாலி னீழற்கீ ழறங்கண் டானைக் காளத்தி யானைக் கயிலை மேய, நல்லானை நம்பியை நள்ளாற் றானை நானடியே னினைக்கப் பெற் றுய்ந்த வாறே. (௮)

குன்றாத மாமுனிவன் சாப நீங்கக் குரைகழலாற் கூற் றுவனைக் குமைத்த கோனை, யன்றாக வவுணர்புர மூன்றும் வேவ வாரழல்வா யோட்டி படர்வித் தானைச், சென்றாது வேண்டிற்றொன் றீவான் றன்னைச் சிவனையெம் பெருமா னென் றிருப்பார்க் கென்று, நன்றாகு நம்பியை நள்ளாற் றானை நானடியே னினைக்கப்பெற் றுய்ந்த வாறே. (௯)

இறவாமே வரம்பெற்றே னென்று மிக்க விராவணனை யிருபதுதோ ளெரிய வூன்றி, யுறவாகி யின்னிசைகேட்

டிரக்கி மீண்டே யுற்றபிணி தவிர்த்தருள வல்லான் றன்னை, மறவாதார் மனத்தென்று மன்னி னானை மாமதிய மலர்க் கொன்றை வன்னி மத்த, நறவார்செஞ் சடையானை நள்ளாற் றானை நாயடியே னினைக்கப்பெற் றுய்ந்த வாறே. (௰)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய

# தேவாரப் பதிகம்.

பண்—தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

செம்பொன் மேனிவெண் ணீறணி வானைக் கரிய கண்டனை மாலயன் காணாச், சம்பு வைத்தழ லங்கையி னானைச் சாம வேதனைத் தன்னொப்பி லானைக், குப்ப மாகரி யின்னுரி யானைக் கோவின் மேல்வருங் கோவினை நங்கள், நம்ப னைநள் ளாறனை யமுதை நாயி னேன்மறந் தென்னினைக் கேனே. (க)

விரைசெய் மாமலர்க் கொன்றையி னானை வேத கீதனை மிகச்சிறந் துருகிப், பரசு வார்வினைப் பற்றறுப் பானைப் பாலொ டானஞ்ச மாடவல் லானைக், குரைக டல்வரை யேழுல குடைய கோனை ஞானக் கொழுந்தினைக் கொல்லை, நரைவிடை யுடைநள் ளாறனை யமுதை நாயி னேன்மறந் தென்னி னைக் கேனே. (உ)

பூவில் வாசத்தைப் பொன்னினை மணியைப் புவியைக் காற்றினைப் புனலனல் வெளியைச், சேவின் மேல்வருஞ் செல்வனைச் சிவனைத் தேவ தேவனைத் தித்திக்குந் தேனைக், காவி யங்கண்ணி பங்கனைக் கங்கைச் சடைய னைக்கா மரத் திசை பாட, நாவி லூறுநள் ளாறனை யமுதை நாயி னேன் மறந் தென்னினைக் கேனே. (௩)



தஞ்ச மென்றுதன் றாளது வடைந்த பாலன் மேல்வந்த காலனை யுருள, நெஞ்சி லோருதை கொண்டபி ரானை நினைப்ப வர்மன நீங்ககில் லானை, விஞ்சை வானவர் தானவர் கூடிக் கடைந்த வேலையுண் மிக்கெழுந் தெரியு, நஞ்ச முண்டநள் ளாறனை யமுதை நாயி னேன் மறந் தென்னினைக் கேனே. (௪)

மங்கை பங்கனை மாசிலா மணியை வான நாடனை யேனமோ டன்ன, மெங்கு நாடியுங் காண்பரி யானை யேழை யேற்கெளி வந்த பிரானை, யங்க நான்மறை யானிறை கின்ற வந்த ணாள ரடியது போற்று, நங்கள் கோனைநள் ளாறனை யமுதை நாயி னேன்மறந் தென்னினைக் கேனே. (௫)

கற்ப கத்தினைக் கனகமால் வரையைக் காம கோபனைக் கண்ணுத லானைச், சொற்ப தப்பொரு ளிருளறுத் தருளுந் தூய சோதியை வெண்ணெய்நல் லூரி, லற்பு தப்பழ வாவணங் காட்டி யடிய னாவென்னை யாளது கொண்ட, நற்ப தத்தைநள் ளாறனை யமுதை நாயி னேன்மறந் தென்னினைக் கேனே. (௬)

மறவ னையன்று பன்றிப்பின் சென்ற மாயனை நால்வர்க் காலின்கீ ழுரைத்த, அறவ னையம ரர்க்கரி யானை யமரர் சேனைக்கு நாயக னான், குறவர் மங்கைதன் கேள்வனைப் பெற்ற கோனை நான்செய்த குற்றங்கள் பொறுக்கு, நறைவி ரியுநள் ளாறனை யமுதை நாயி னேன்மறந் தென்னினைக் கேனே. (௭)

மாதி னுக்குடம் பிடங்கொடுத் தானை மணியி னைப்பணி வார்வினை கெடுக்கும், வேதனை வேத வேள்வியுள் வணங்கும் விமல னையடி யேற்கெளி வந்த, தூத னைத்தன்னைத் தோழமை யருளித் தொண்ட னேன்செய்த துரிசுகள் பொறுக்கு, நாத னைநள் ளாறனை யமுதை நாயி னேன்மறந் தென்னினைக் கேனே. (௮)

இலங்கை வேந்த னெழில்திகழ் கயிலை யெடுப்ப வாங்கிம வான்மக ளஞ்சத், துலங்கு நீண்முடி யொருபதுந் தோள்க ளிருப துந்நெரித் தின்னிசை கேட்டு, வலங்கை வாளொடு

நாமமுங் கொடுத்த வள்ளலைப்பிள்ளை மாமதிச் சடைமே, லலங்கொள் சோதிநள் ளாறனை யமுதை நாயி னேன்மறந் தென்னினைக் கேனே. (௯)

செறிந்த சோலைகள் சூழ்ந்தநள் ளாற்றெஞ் சிவனை நாவலூர்ச் சிங்கடி தந்தை, மறந்து நான்மற்று நினைப்பதே தென்று வனப்ப கையப்ப னூரன்வன் றொண்டன், சிறந்த மாலைக ளஞ்சினோ டஞ்சுஞ் சிந்தை யுள்ளுரு கிச்செப்ப வல்லார்க், கிறந்து போக்கில்லை வரவில்லை யாகி யின்ப வெள்ளத்து ளிருப்பார்க ளினிதே. (௰)

திருச்சிற்றம்பலம்.

அருணகிரிநாத சுவாமிகள் அருளிய

# திருப்புகழ்.

[திருநள்ளாறு]

747. பச்சையொண்கிரி போலிருமாதன
முற்றிதம்பொறி சேர்குழல்வாளயில்
பற்றுபுண்டரி காமெனஏய்கயல் விழிஞான-
பத்திவெண்டர ளாமெனும்வாணகை
வித்ருமஞ்சிலை போல்நுதலாரிதழ்
பத்மசெண்பக மாமனுபூதியி னழகாளென்;
றிச்சையந்தரி பார்வதிமோகினி
தத்தைபொன்கவி னாலிலைபோல்வயி
றிற்பசுங்கிளி யானமினாலிடை யபிராமி-
எக்குலங்குடி லோடுலகியாவையு
மிற்பதிந்திரு நாழிநெலாலற
மெய்ப்பொதும்பகிர் வான்குமாரனை வருகேனே;



கச்சையுந்திரு வாளுமிராறுடை
பொற்புயங்களும் வேலுமிராறுள
கட்சிவங்கம லாமுகமாறுள முருகோனே-
கற்பகந்திரு நாடுயர்வாழ்வுற
சித்தர்விஞ்சையர் மாகர்சபாசென
கட்டவெங்கொடு சூர்கிளைவேரற விடும்வேலா;
கச்சுவெண்பட மீதணைவார்முகில்
பச்சைவண்புய னார்கருடாசனர்
நற்கரந்தனு கோல்வளைநேமியர் மருகோனே-
கற்புனந்தனில் வாழ்வளிநாயகி
யிச்சைகொண்டொரு வாரணமாதொடு
நத்திவந்துந ளாறுறைதேவர்கள் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# சிவபுராணச் சிரவணமுறை.

சிவபுராணம் ஓதிப் பயன்பெறக் கருதுகின்றவர்கள் நாடோறும் நளினமலர்விரியும் புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரந்தரித்து நித்தியகருமமுடித்துக்கொண்டு சிவபுராணபோதகரை வணங்கிப் புராணங் கேட்கவேண்டும்.

சிவபுராண போதகரைச் சிவபெருமானாகப் பாவியாது மனிதராகப் பாவிப்போரும், சிவபுராணம் படிக்கும் சபையிலே உயர்ந்த ஆசனத்திருப்போரும், காலைநீட்டிக்கொண்டிருப்போரும், சயனிப்போரும், நித்திரை செய்வோரும், வெற்றிலைப் பாக்குண்போரும், போர்வைபோர்த்துக்கொள்

வோரும், பிறவார்த்தைகளைப் பேசுவோரும், குதர்க்கஞ் செய்வோரும், பொறாமையினாலே வேறுபொருளைக் கற்பிப்போரும், அன்பின்றிக்கேட்போரும், சிரிப்போரும், இடையில் எழுந்து வேறு கருமத்திலே செல்வோரும், புராணத்தைப் பொய்யென்போரும் நெடுங்காலம் நரகங்களிலே கிடந்து துன்பங்களை அநுபவித்து மேன்மேலு மிழிந்த பிறப்புக்களில் பிறந்து வருந்தித்திரிவார்கள்.

உதாரணம்.

உபதேசகாண்டம்.

அறந்த ருஞ்சிவ புராணமோ துறுமவை யகத்துப்
பிறங்கு வெள்ளிலை நுகர்பவர் பிறமொழி பகர்வா
ருறங்கு கின்றவர் நீட்டுறுங் காலின ரிவற்றைத்
திறம்பு பொய்ம்மையென் றுரைப்பவர் களிபடச் சிரிப்போர்.

இழுதை மாக்கண்மற் றீங்குவ ரிறுதியிற் றென்பாற்
செழுக நீடிய நெடுங்குழிச் செலற்கரு நிரயத்
திழிவ ராங்கது விழுங்கிமீண் டெதிரெடுத் துமிழ
வழுவி மற்றது விழுங்குற வருந்துவர் நெடுநாள். (2)

பிரமோத்திர காண்டம்.

கலி விருத்தம்.

எக்கு லத்தவ ராயினு மீர்ஞ்சடை
முக்க ணன்கதை யோதுமு தல்வனை
மக்க ளுள்ளிவ னும்மக னென்பவர்
கக்கு வாய்புழுக் கான்றிடு நோய்கொள்வார். (3)

ஆன்ற காதையின் மேல்விருப் பற்றவர்
தோன்று முற்கதை பொய்யென்று சொல்பவர்
மூன்று கோடி நரகத்தின் மூழ்கியே
நான்ற நாவுடை நாய்ப்பிறப் பெய்துவார். (4)



அன்றிக் கேட்கு மிடத்தழுக் காற்றினாற்
கன்றி வேறோர் பொருளினைக் கற்பிப்பா
ரொன்ற லாத துரைத்தெதிர் வாதிப்பார்
பன்றி யாயிந்தப் பாரி லுதிப்பரே. (5)

சிவபுராணத்தை ஆதிமுதல் அந்தம்வரையும் இடைவிடாது நியமமாய்க் கேட்டல்வேண்டும். நாள்தோறும் ஒவ்வொரு சிவபக்தருக்கு அன்னங்கொடுத்தல் வேண்டும். புராணமுடிந்த தினத்தில் சிவலிங்கத்திற்கு அபிஷேகவாராதனைசெய்து சிவனடியார்களுக்கும், பிராம்மணர்களுக்கும் தங்கள் தங்களால் இயன்றமட்டும் அன்னதானஞ் செய்தல்வேண்டும்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருநள்ளாற்றுப் புராணம்.

## முதலாவது
## பாயிரச்சருக்கம்.

### காப்பு.

வருநள் ளாற்றா லாடிய மாயனை
யொருநள் ளாற்றி லுறங்கிட வுய்த்திடு
திருநள் ளாற்றுறை செம்பொற் களிற்றைநங்
கருநள் ளாற்றைக் கடக்க வணங்குவாம்.

### வாழ்த்து.

பொய்யி லாமறை வாழ்க பொழிகவான்
மெய்யர் சைவம் விளங்குக வேந்தொடுந்
துய்ய வானிரை மல்க சுலவுநீர்
வைய மேழுநள் ளாறு மலிகவே.

### கடவுள் வணக்கம்.

[ஸ்ரீதர்ப்பாரண்யேசர் துதி.]

சீர்கொண்ட வெழுத்தைந்துஞ் சத்தி யைந்துந்
திருமுகங்க ளோரைந்துஞ் செயல்க ளைந்து
மேர்கொண்ட கலையைந்தும் பூத மைந்து
மிமயவரைந் தருவைந்து மியாக மைந்தும்
பார்கொண்ட நிலைஐந்து நிறங்க ளைந்தும்
படைத்தவையு நிறைந்துபரா பரமாய் நின்ற
தார்கொன்றைத் தார்கொண்ட சடைநள் ளாற்று
நள்ளாற்றெம் பெருமானை நயந்து வாழ்வாம். (1)



[போகமார்த்த பூண்முலையம்மை துதி.]

தும்பைச்செஞ் சடைமுடியும் பத்தர் சித்தந்
தொழுதெழுதாட் டாமரையுந் துத்தி பற்றி
வெம்மைக்கஞ் சுகியாவி னணையி னாலும்
விதியுமறி யாதநெறி விமல னார்க்கு
கம்பைக்கு விரண்டுவகைத் தழும்புங் காட்டுங்
கன்னிக்குச் சிவானந்தக் கனிக்கு முத்தக்
கம்பைக்குப் பாடகமெல் லடிக்குப் போக
மார்த்தபூண் முலையாளுக் கன்பு செய்வாம். (2)

[நிர்த்தன விநாயகர் துதி.]

நூபுரத்துப் பதஞ்சிலப்ப மன்றி லாடி
நவனும்வலப் புரத்துமிடப் புரத்தும் வீறு
சோபுரத்து நிறைந்தபரம் பொருளி னோடு
சுரருமருந் தவத்தோருந் தொழுது போற்றி
மாபுரத்துப் போர்கருதி வணக்கஞ் செய்ய
மகிழ்ந்தருள்செய் மணியைவிண் ணோர் வருநள் ளாற்றுக்
கோபுரத்துக் கற்பகத்தைப் பவள மேனிக்
குஞ்சரத்தை நெஞ்சழுத்திக் குறைக டீர்வாம். (3)

[சண்முகக் கடவுள் துதி.]

திரைவயிறு கிழித்தெழுந்த வடவையெனுஞ் சினத்தனைச்
செழுந்த வத்தோ
ரிரைவயிறு கிழித்துசரி யருந்தவமைத் தான்குருவை
யிலங்கு சங்கி
னிரைவயிறு கிழித்துழவ ருழுவளநள் ளாற்றிறையை
நீடு புள்ளாம்
வரைவயிறு கிழித்தானை விரைமலர்தூ விப்பணி
வணக்கஞ் செய்வாம். (4)

[நந்திகேஸ்வரர் துதி.]

இருசாதித் திருவுருவன் வையகத்துத் தாயத்தா
ரெனவே முன்னம்

பொருசாதிச் சராசரு மேனையருஞ் சேவிக்கும்
பொழுது வாசந்
தருசாதி முடியின்மலர் சிதறவடித் திலயத்தே
தள்ளுஞ் செங்கை
யொருசாதி யுடையானைத் தருசாதி யகலாமுன்
னங் கொள்வாம். (5)

[திருஞானசம்பந்தர் துதி.]

கரியிடத்தி லுளத்தமணர் கைதவங்கள் வல்லரெனக்
கலங்கு கின்ற
சரியிடத்திற் கரமலர்மங் கையர்க்கரசி யஞ்சலெனச்
சாற்றி யாங்கே
தெரியிடத்தி னள்ளாற்றி னொருபாடல் வாங்கியே
தென்னன் முன்னே
யெரியிடத்தி லிட்டெடுத்த சம்பந்தப் பிள்ளைபத
மிறைஞ்சல் செய்வாம். (6)

[திருநாவுக்கரசர் துதி.]

யாராதி யமணரொடு புத்தர்செயும் பொய்த்தவங்கள்
பரிந்தே யாழ
வீராயுக் கெடிலநதி யதிகைநங்கோ னருள்பெற்று
நிறைமலர்க்கைக்
கூராதி மால்வணங்க நின்றபிரான் பாடலகற்
கோயில் முன்னர்
காரழி சிலையோடு மிதந்தானைப் பதந்தாழ்ந்து
கவலை தீர்ப்பாம். (7)

[திருநாவலூரர் துதி.]

புள்ளானைத் தாதையெனப் புகல்வானைப் பிரணவத்தின்
பொருள்களேது
முள்ளானைச் சிறையில்வைத்த வொளியானைப் பயந்தானை
யுணரார் நெஞ்சுட்
சொள்ளானைக் கைலைமலை யிடைவணங்கப் போங்காலைக்
குலிச னாரும்



வெள்ளானை யூர்ந்தானை நள்ளானை வளர்சரணம்
விரும்பிச் சார்வாம். (8)

[திருவாதவூரர் துதி.]

முருந்துறையும் வெண்ணகைச்செங் கனிவாய்ப்பைந் தோ
முடிமேல் விண்ணோர் [கையுடன்
மருந்துறையுஞ் சிறுபிறையுஞ் சூழ்ந்திறைத்தே சிகராகி
வந்து வண்பூங்
குருந்துறையு நிழலிருந்து சுவேதநதி திரைபுரட்டிக்
கொழிக்குந் தெண்ணீர்ப்
பெருந்துறையி லாட்கொண்ட வாதவூர் மாதவனைப்
பேசி யுய்வாம். (9)

[சனீஸ்வரர் துதி.]

பெருவாச னளனொடும்வந் தவன்றீர்த்த மாடுதலாற்
பெற்ற பேற்று
லொருவாவர் தெம்பெருமா னருள்பெற்று மிகவுமன
முவகை பூப்பக்
கருவாசல் புக்காரோற் புகுந்தொளிரு நள்ளாற்றுக்
கனக வச்ரத்
திருவாச லிடனின்ற மந்தனிரு செந்தளிர்த்தாள்
சிந்தை செய்வாம். (10)

[தண்டியடிகள் முதலியவர் துதி.]

மண்ணிவெறு நதியின்பாற் சங்கரனைப் பாலாட்டி
வாலா றன்று
னெண்ணியதீ யிற்றுதந்தை சரண்டடிந்து பரனருளா
லயந்து நல்கத்
தண்ணியமா லையும்பூணு மூறும்பெற் றுடையதிருத்
தண்டி யாதிப்
புண்ணியத்தொண் டர்பதந் தொழுதேத்தி நள்ளாற்றுப்
புராணஞ் சொல்வாம். (11)

[புராண வரலாறு.]

முன்னான்கோ டிருமூன்று முதற்புரா ணத்திரண்டு
மூளரி யோர்க்கு
பொன்னாடு மாற்குநான் கிரவியங்கிக் கோரொன்று
போகப் பத்துஞ்
சொன்னாலப் பெருமாற்கா மதிற்பிரம கைவத்தத்
தொல்பு ராணத்
தென்னாடும் வணங்குபொன்னி நன்னாட்டி னள்ளாற்றி
னிசைபு ராணம். (12)

பண்டாரங்கன் மலைமகட்கு மவன்சேய்க்குஞ் சேய்முனிவோர்
பரவு நீற்றுப்
புண்டானுஞ் சனற்குமா ரற்குமவன் வியாதற்கும்
புகல்வி யாத
னெண்டகுசூ தற்குமவ னிருடிகட்கும் நசைதீர
விசைத்த தியார்க்கும்
மண்டலத்தும் விண்டலத்தும் வாழ்வளிக்கும் நள்ளாற்றின்
மாபு ராணம். (13)

[அவையடக்கம்.]

வள்ளைமொழி நள்ளாற்றின் மணிகண்டர் சரிதையினின்
மனத்த ரானோர்
பிள்ளைமொழி யானாலும் பொருள்கொண்டு நயப்பரிந்தப்
பெற்றி யன்றிக்
கிள்ளைமொழி பயிற்றுவித்து மதுபகரு மொழிவிரும்பிக்
கேட்பார் போல
வெள்ளைமொழி யெனுமென்சொ லெமக்குணர்த்தும் புலவ
விரும்பிக் கேட்பார். [ரெலாம் (14)

[சருக்கவிபரம்.]

திருத்தகுபா யிரமிலிங்கோற் பவங்கலிங்கா திபதிளைத்
தெய்வ வேந்த
னருத்திபெறு திருவிழாக்கோக் கொலைநீங்கு நல்லுருசி
யாசன் கானில்



வருத்தியவக் கினிவருணன் றீர்த்தத்தின் சரிதையென
வகுத்துக் கூறும்
பொருத்தமுறு சருக்கமொன்பான் விருத்தமுந்நூற் றே
புகல லுற்றாம். [ரேழாய்ப் (15)

## பாடற்றொகை.

### கலி விருத்தம்.

பாயி ரம்பதி னெட்டிலிங் கோற்பவ
மேயும் பாட லிருபது நற்புவி
யாயுஞ் சீர்க்கலிங் காதிச்ச ருக்கமாம்
நாய கத்தமிழ் நாற்பத்து நான்கரோ. (16)

நளன்ச ருக்கமு மைம்பத் திரண்டுநல்
வளந்த ரும்விழா மன்னுமுப் பத்துமூன்
றளந்த கோக்கொலை யற்றல் பதினெட்டு
தெளிந்த முப்பத்தொன் றுமங்கி சீர்க்கதை. (17)

### வேறு.

நலந்திக ழக்னி வண்ணச் சருக்கமு நாற்பத் தாறுந்
தலம்புகழ் புண்ய தீர்த்தச் சருக்கமு நாற்பத் தைந்தே
கலந்தபே ரின்ப மாகச் சருக்கமொன் பதுவுங் கற்றால்
பலன்றரும் விருத்த முந்நூற் றேழெனப் பகர லாமே. (18)

திருச்சிற்றம்பலம்.

முதலாவது பாயிரச்சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 18.

## இரண்டாவது

# இலிங்கோற்பவச் சருக்கம்.

முன்ன மாதவர் மகஞ்செய்வான் வேதனு முதல்வ
வின்ன பூதலத் தொருதல முரையென விசைப்ப
நன்னர் நேமியொன் றளித்தது நைமிசா ரணிய,
மன்ன தேநிலத் துயர்ந்ததென் றறைந்தனன் பிரமன். (1)

உரைத்த வவ்வழிச் சவுனகா தியமுனி வோர்க
ணிரைத்த சத்திர வேள்வியை நெடும்பக லிழைத்து
வரைத்த மூவறு புராணமும் வினவிய மணிநீர்த்
தரைத்த லத்தயன் புதல்வறங் கியதெனச் சார்வார். (2)

அனைய மாதவர் சூதனை யலர்முக நோக்கி
முனைவ நீதருப் பாரணி யத்திசை மொழிய
வினைய மோடுமுன் கேட்டன மின்னமும் வினவ
நினைவு மிக்கன முரையெனத் துதிமொழி நிரைத்தார். (3)

வேத நான்கிற்கும் நால்வரை விதித்துமேற் புராண
மோத வோதிய பாராசரன் புதல்வனை யுன்னி
நாதன் மேதகு பாதமு ணினைந்துகைக் குருவிச்
சூத மாமுனி யவசமுற் றுணர்ந்திது சொல்வான். (4)

அண்டர் தோற்றிய காலையி லாதியாம் பிரமன்
மண்ட லத்தவன் படைத்தமுற் பதியினை மருவிக்
கண்ட கண்களி கூர்தரத் தருப்பையங் கானில்
வெண்ட லைத்தொடை யரன்பதம் நினைந்துமே வினனால். (5)

வெவ்வி டத்தர வெயிற்றெனு முனைச்சர மிடைந்த
தவ்வி டத்திரு வெள்ளையன் னத்தொடு மடைந்து
வவ்வி டத்திலும் புலஞ்செலாத் தவஞ்செய மகிழ்ந்தே
யெவ்வி டத்தினு நிறைந்தவ னிலிங்கமா யெழுந்தான். (6)

எழுந்த காலையின் மெய்யெலாம் புளகெழ வெழுந்தே
பழுத்து பேரின்ப வெள்ளமீ தார்தர வாடிச்



செழுந்த விர்க்கரங் குவித்தனன் வலம்வந்து திருமுன்
விழுந்தெ ழுந்துநா மங்களா யிரஞ்சொல விமலன். (7)

ஐந்து நற்றிரு முகங்களு மவிரொளிப் பேத
மைந்து நாட்டமு மைந்தும்வெவ் வேறிய லமைந்த
வைந்து மைந்துமாங் கரங்களு முறவடி வமைய
வைந்தெ ழுத்தினால் வழுத்தின னெடியமா லளித்தான். (8)

அருள்செ யெம்பிரான் பிரணவ மாரண மங்க
மருள்செ யாப்பர நூல்களும் வாம்பிலா விரண்டு
பொருள்செ யும்படைப் புந்தெளி தரவருள் பூப்பத்
தெருள்செய் நான்முகக் கடவுளு மனக்குறை தீர்ந்தான். (9)

நந்தி யாவத்தச் சிகரமீ சனுக்குநா யகிக்குத்
தந்தி மாமுக னுதியர்க் குள்ளன தளியு
முந்து மாகம மாயினற் பொன்மணி முரண
சிந்தை யாலய மொருகணப் பொழுதினிற் செய்தான். (10)

சோதி முன்னர்கீழ்த் திசைசர பதத்தினிற் சுரர்சூழ்
போதி யுண்டதன் மருங்கினிற் பொருந்துகைத் தண்டா
லாதி நான்முகன் றீர்த்தமுண் டாக்கின னதன்பின்
காதல் வாணியுந் தென்புறத் தொருதடங் கண்டாள். (11)

குடக்கி னிற்றொடுத் தெம்பிரா னுறைதரு கோயில்
வடக்கின் காறுமோர் தடம்பிர ணவத்தியல் வயங்கும்
தடத்துச் செய்யதாள் வெண்சிறைப் பைஞ்சிகைத்தளிர்பொன்
னிடத்த தூவியி னேதிமம் படைத்ததா லிலிங்கம். (12)

தீர்த்த மாடியே யூர்திகா தலியொடுந் தேவன்
கூத்த னூர்பதத் தருச்சனை புரிந்தனன் குலத்தில்
மாத்த போதன மறைஞரால் மகுடவா கமத்தா
லேத்த ரும்படி பூசனை செய்வதை யிழைத்தான். (13)

[வேறு.]

வேண்டுநல் வரங்கள் பெற்றே வேதனு மகன்ற பின்னர்
தூண்டுவெங் களிற்றி லேறுஞ் சுரர்முத லாய வெண்ம
ராண்டுவந் தொப்பி லானை யருச்சனை புரிந்தே யன்பு
பூண்டோர் திசையிற் றீர்த்தம் பிரானுமே பொருந்தக் கண்டார். (14)

பிரமனு மிந்தி ராதி பேசிரு நால்வர் தாமும்
பரமனை வணங்கி மேலாம் பதமடைந் துய்த்தா ரென்னின்
வரன்முறை முனிவ ராதித் தருப்பைமா வனத்தின் மிக்க
திறமுறு பெருமை முற்றுஞ் சேடனு முரைக்க லாமோ. (15)

அத்தலங் குபேரன் போற்ற வாய்தமி ழாக்கு கும்பன்
கைத்தலக் கமண்ட லத்துப் பெருகுகா விரியின் றென்பால்
நத்தணி முத்த மீனு நாட்டின்போ சனையில் வேலை
யெத்துரீக் கரைக்கு மேத வெல்லையில் விளங்கு மன்றே. (16)

ஆதியா முகத்தி லாதி புரியிரண் டாமு கத்திற்
கோதிலாத் தருப்பை யங்கான் கூறுமுன் றும்வி டங்க
மோதிய கடையு கத்தி னளேச்சுர மூரைப்பர் நல்லோர்
வேதமோ தறியா ருர்க்கு மேவுவோர்க் கெல்லை யுண்டோ.

நாடக மாடு மெங்க ணம்பர்நள் ளாற்றைச் சூழக்
கூடரு மைங்கு ரோசங் கூடிய சராச ரங்கள்
வீடடைந் திருந்த பேறு மேவுமோர் காவி ருப்பி
னீடரும் பிறவி தீர்வர் நினைக்கிலெப் பலமும் போமால். (18)

விளிந்தவர் பிறந்து ளோர்கள் மேதகு மறம்பு ரிந்தோ
ரளிந்தவன் பினர்கள் பேற்றி னளவையா ருரைக்க வல்லார்
முனிந்தவெங் காட்டுத் தீப்போல் மும்மல முருக்க லாலே
தெளிந்தவர் தமக்கு மேலைச் சிவபுரந் திருநள் ளாறே. (19)

என்றிவை சருக்கிக் கூறுஞ் சூதனை யிறைஞ்சி யாண்டுப்
பொன்றிகழ் சடையோ ரெல்லாம் புளகமே பூப்ப மேலும்
நன்றுநள் ளெனவி யந்து நடந்ததார் சரிதை யென்னக்
கொன்றைவே ணியனை யுன்னி யன்னது கூறு கின்றான். (20)

திருச்சிற்றம்பலம்.

இலிங்கோற்பவச்சருக்கம் முற்றிற்று.

ஆகச் சருக்கம் இரண்டிற்குத் திருவிருத்தம் 38.

மூன்றாவது

## கலிங்காதிபதிச் சருக்கம்.

கலிங்கமே யங்க வங்கங் கோசல மராட்ட மோட்ட
மலிந்தசீர்த் துளுவம் கொல்ல மகதமே கவுடஞ் சீனம்
பொலிந்தசீர் மன்ன ரெல்லாம் புனைமுடி சூட்டுந் தாளான்
கலிங்கர்கோன் பாண்டு னேந்திக் காசினி முழுதுங் காப்பான். (1)

குன்றெனும் வயிரத் தோளான் குருதிசொப் புளிக்கும் வேலா
னின்றெழு கடலும் பொங்கி நிலவுமிழ் கவிகை யுள்ளான்
கன்றிய தூம கேதுக் கண்டொளி காலும் வெள்ளி
தென்றிசை யடைந்த தென்னச் செய்யகோல் வளையா மன்னன்.

வளைகடல் ஞால மெல்லாம் வயிற்றிடைக் குழவி போலக்
களைகண னாய்ப்பு ரக்குங் கந்துக வேள்வி செய்வான்.
கிளைமறை யுழவர்க் கெல்லாங் கேடில்சீர் முடங்கல் போக்க
விளைபுக ழனைவோ ரெல்லாம் விரும்பியே புகுத லுற்றார். (3)

புலகனத் திமிம ரீசி பொருவில்பா ரத்து வாச
னிலவிய குணக்கி ராகி சநாநந்த னெடுமே தாவி
குலவுயிர்க் கருள்சு னாபி காவலன் குழுக்க ளானோர்
பலரொடு மேனை யோரும் வந்தனர் பழிப்பி லாதார். (4)

விருப்பொடு வந்தோர்க் கெல்லாம் வேந்தனு மெதிரி றைஞ்சி
யருக்கிய முதல நல்கி யவரவர்க் கிடமு நல்கி
யிருப்புழிச் சுருதி பார்க்க னென்னுமோ ரிருபி றப்போன்
றருக்கிய சிறுவன் றேவி சார்புற வந்தா னன்றே. (5)

ஆயவன் மன்னர் மன்னன் கடைத்தலை யயலே நின்று
வாயிலோ யுங்கோ மாற்கெம் வரவுநீ யுரைத்தி யென்ன
வேயவன் கஞ்சு கிக்கங் கிசைத்தன னவனுங் கோயிற்
போயிசை யமைய மின்றி யிருந்தனன் புறப்ப டாதான். (6)

மாற்றமொன் றுரைப்பா ரின்றி மறையெலாம் வரம்பு கண்டோ
னேற்றதோர் முகூர்த்த நின்றே யெரியெழ வெய்ய கோப

சிற்றமீ தூரச் சொல்வான் செம்மையே நமைவி ளித்துக்
கூற்றுறழ் வெவ்வேன் மன்னன் கோயிலு ளிருந்தா னன்றே (7)

இன்னவர்க் கின்ன செய்த லியல்பென விடுத்துக் கூறு
மன்னதே கடனாக் கொண்டே யறஞ்செய்வித் தல்ல னீக்கு
முன்னவ ரொருவ ரின்றி மூர்க்கர்வாய்த் திருக்குந் தீய
மன்னவர் வாயி னீண்டன் மயானமென் றுரைப்பர் மேலோர். (8)

சுந்தர மீகா னில்லாத் தொடுகடற் கலமும் வென்றித்
தந்திரத் தலைவ ரில்லாத் தானையுந் தக்கா ரோடும்
புந்தியின் மனுநூ லாய்ந்து புவிப்பொறை தாமே தாங்கு
மந்திரக் கிழவ ரில்லா மன்னரும் வாழ்வ துண்டோ. (9)

வித்தநூல் பயின்ற டங்கு மேன்மையாற் றுணை மாகும்
பத்திவீழ் செல்வ மெய்திற் பண்டையில் வேறாய் மாய்வ
ரெய்த்தவேள் வியினான் வான மெய்தியன் புடனே செல்வோன்
மத்தினா லன்றோ யாம்பாய் மண்ணிடை வீழ்ந்தான் முன்னாள். (10)

சந்தன மகிலி னோடு தடமலைச் சாரல் வீட்டிற்
கிந்தனம் படுக்கு மாபோ லிவனுழைத் திடமுன் னாலோர்
வந்தனர் பலரு மென்னு மனச்செருக் குடைமை யாலே
யந்தணர் பெருமை தன்னை யறிந்தில னரச னம்மா. (11)

வேறு.

என்று கூறி யிவன்மத மெய்தலாற்
றுன்று காதலி யோடுஞ் சுதனொடும்
வென்றி யானையின் மெய்யடைந் தெய்துக
துன்று கானெனச் சொற்கொடுத் தேகினான். (12)

அக்க ணத்தி லரசனுந் தேவியு
மிக்க மைந்தனும் வேழ வுருக்கொளீஇத்
தொக்க யாரையுஞ் சீறித் துரந்தரோ
மைக்க வின்பெறு மாவனத் தெய்தினார். (13)

நெடிய மாலய னீடிய பல்விழி
வடிவ னாதிய வானவ ராயினும்
படியி னான்மறைப் பண்ணவ ரோதிய
கடிய சாபங் கடக்கப் படுவரோ. (14)



கடுத்த கோபமுண் டாக்கின காலறக்
கெடுப்பர் நண்பு கிளர்ந்தவர் நோயெலாந்
தடுப்ப ரெப்பெரு வாழ்வுந் தமதெனக்
கொடுப்ப ரந்தணர் கூற்றுக் கெளியரோ. (15)

இருந்த வேதிய ரியாவரு முன்னையிற்
பொருந்து தீவினை பூத்ததென் றுன்னியே
வருந்தி மன்னனை வாழ்கவென் றேத்தியே
திருந்து தத்த மிடங்களிற் சென்றனர். (16)

தீங்கு முன்னர் விலக்குதல் செய்கலாப்
பாங்கி னைங்குழுப் பான்மைய ரியாவரு
மேங்கி யேங்கி யிருவிழி நீருக
வோங்கு கண்ணிழந் தாரென வொல்கினார். (17)

மறைஞ ரோதிய வாழ்த்தினுஞ் செய்யகோ
விறைவ னாரு மிழைக்கு மறத்தினு
நறைவ னத்தினு நல்லுரு வெய்தியீண்
டுறைவ னென்ன வுலகளித் தாரரோ. (18)

துடிய டிக்கள பத்தொடுஞ் சூழ்மயிர்ப்
பிடியி னோடும் பெருகிய வெம்மதக்
கடிய குஞ்சர மாகிய காவல
னெடிய கானி னெடும்பகல் வைகுநாள். (19)

தண்ணந் தாமரை யான்பெறு தாபதன்
வண்ண மாலை மகதிநல் வீணையான்
வெண்ணந் தாமெனு மேனியன் மூவரு
மெண்ண வெங்கு மியங்குஞ் செயலினான். (20)

அலகிற் கீத வமுதெழு நாவினான்
கலக மேமகிழ் வாக்குங் கருத்தினா
னிலகு நாரத னென்னும் பெயரினா
னுலக மேத்து மொருவன்வந் தெய்தினான். (21)

பிளிறு வானுரு மேய்க்கும் பெருங்குரற்
களிறு கண்டு துரத்தலுங் கண்ணுறீஇ

யொளிரு வேற்கலிங் கேசனென் றுன்னியே
வெளிறு சேர்கிலா வேதிய னின்றனன். (22)

நின்று தன்பணி யாளனை நீகசிக்
குன்றை யீண்டு கொணர்கென வேவலுஞ்
சென்ற ழைக்கத் திரும்பிய பான்மையால்
வென்றி கல்லறி வீந்தனன் மேன்மையான். (23)

வெய்ய தீக்குண நீங்கிய வேழமுஞ்
செய்ய மாதவன் சேவடி தாழ்ந்தது
துய்யர் தங்க டுணையடிக் காட்சிபோல்
வைய மீதில் வரும்பல னியாவதே. (24)

தாளி றைஞ்சிய யானையைத் தாபத
னீரு நின்செய லியாவு நினைந்தன
மாளி மொய்ம்பி னரசவித் தீவினை
கோளி னின்னறி யாமையிற் கூடிற்றால். (25)

கறக்கும் பாலொடு நஞ்சு கலந்துண்டாற்
சிறக்கு மோநலந் தீங்கு பயக்குமாற்
பிறக்குந் தீவினை முன்செயிற் பின்னது
மறக்கு மோபெரி தாகிவந் தெய்துமே. (26)

வேறு.

இந்தப் பிறவி தனக்குமுன்ன மிருநான் காய பிறப்பி டத்திற், சந்தப் புவியி லொருமறையோன் றழல்கூர் வேள்வி யொன்றுற்றச், சிந்தித் தனைத்துந் திரட்டுநாட் டிங்கு விளைத்து நீவிலக்க, வந்தப் பனவன் றுயர்க்கடலி லாழ்ந்து வேள்வி தடைப்புண்டான். (27)

பருதி காயும் வெவ்வரையிற் பசிய புழுப்போற் பதைந்த, மிருதி யுழவன் மகமுன்னாள் விலக்குன் முன்னை வினையாலே, கருது முனது மகம்பழுதாய்க் கலக்க முற்றாய் சாப மிடுஞ், சுருதி பார்க்கன் றனையொன்றும் வெறுப்பா யல்லை சுடர்வேலாய். (28)



இன்ன பிரம சாபமகன் றின்னுமயமே தம்புரிய, வுன்னி யுனக்கொன் றுரைக்கின்றே முழவர் காலால் மடைதள்ள, கன்னற் கமுகிற் செஞ்சாலிக் கதிர்போய்ச் சாயுங் கருங்கழனிப், பொன்னிச் சென்னித் திருநாட்டிற் புனிதப் பதியொன் றுளதாமால். (29)

பரம சிவன்முன் படைத்தபதி பகருந் தருப்பா ரணியம்போய், பிரம னங்கோர் தண்டத்தாற் பெருகுந் தடாக மொன்றகழ்ந்து, விரவு மதற்கு மேன்மைவரம் விமல னிடத்திற் பெற்றமைத்தா, னுரவு நீரி லொருதிவலை யுன்மேற் படிவித் துயர்போமால். (30)

கும்ப மதியின் நிறைமதியிற் கூறு மன்ன சிவபுரத்திற்
செம்பொற் சபைநா டகமாடுந் தேவைப் பணிய வருதுநாம்
விம்ப விதழாம் பிடிகன்று மேவு நீயும் வருகெனச்சொற்
றும்பர் கருதும் வரமுனிவ னெல்லை யகன்று போயினனால்.

கருத்தி லறிவு புலப்பட்ட களிறுங் கலிங்கர் பெருமானும், பொருத்து முனிவ னடிபணிந்து போந்து காதம் பலகடந்து, குருத்திற் கதலி குலைசாயக் கொழுஞ்செங் கரும்பின் முத்தனத்தை, வருத்தும் வயல்சூழ் நள்ளாற்றில் மாசி மகத்தில் வந்தனனே. (32)

வந்து பிரம தீர்த்தத்தின் மூழ்கு மவர்கள் வளர்சிகையிற், சிந்து புனல்மேற் றெறித்தலுமே தேவி புதல்வ னுடனரசன், முந்தை வடிவ மெடுத்தேத்தி மூழ்கக் கண்ட சுராசுரரு, மெந்தை பெருமான் றிருவிளையாட் டென்னே யென்ன வதிசயித்தார். (33)

சொல்லு மன்ன வேலையினிற் றோடு கிழிக்குங் காவியங்கண், வல்லி மலைபங் காளனடி வணங்க மறையோருடன்விரைவிற், புல்லு மகண கின்னரம்பின் போத வீணை நரம்புளராக், கல்லு மாமு முருக்குமிசைக் கடவுண் முனியும் வந்தனனால். (34)

மிளிருஞ் சகிர்வார் புரிநரம்பின் வீணைக் கிழவன் வரனோக்கி, யொளிரு முடிமன் னவனிறைஞ்சி யுவகை பூப்ப

வருமுனியுங், கிளரு மாசி பேசிமனைக் கிழத்தி புதல்வ
னுடன்கொண்டு, தளிரும் புனலு மிளிர் சடையார் தடம்
பொற் கோயி லிடைச்சார்ந்தான். (35)

விண்ணோர் மண்ணோ ரியர்பணியும் வேதச் சுடரைப்
பிரணவப்பேர், பெண்ணோர் பாகப் பவளத்தைப் பிறவிப்
பிணிபோக் கியமருந்தைத, தண்ணார் தாளஞ் சொரிந்துசங்
கந் தவழும் நள்ளாற் றொருபொருளைக், கண்ணா ரமுதைக்
கற்பகத்தைக் கருணைக் கடலைக் கண்ணுற்றான். (36)

வேதப் பொருளைத் தத்துவத்தை விரிந்தா கீதம் விளங்
கும்விந்து, நாதப் பொருளை நடம்பயின்று நவிலு மடியார்
பிறப்பகற்றும், சீதக் கமலத் தடம்புடைசூழ் தொர்ப்பை
வனத்திற் றேனைமுக்கட், காதற் கனியை கைலைமலைக் கரு
ணைக் கடலைக் கைதொழுதான். (37)

முறையிற் சேவை புரிந்தந்த முறையே மன்னர் முடி
யுழுதா, ளிறையைப் பணிவித் தவ்வயினி லிருத்தி னெனமா
தவனகன்றான், மறையிற் கேள்வித் துறைபோய மன்னன்
குறைதீர்ந் தமைகேட்டுக், குறைவற் றிடுமா நிதிகொண்
டைங் குழுக்க ளரச ரிடனடைந்தார். (38)

பொறிமைச் சுரும்புண் டாற்றநறும் பொழியு மலங்
கற் புரவலனுஞ், சிறுமைத் துயர மகன்றுநள்ளாற் றிடை
யே செல்வ மூற்றிருந்தான், நெறியைத் தருமம் புரிந்தாற்கு
நீடு முன்னை விதிவயத்தால், வறுமைத் துயர்வந் தடைந்
தாலு மறிந்து மெய்தும் பெருவாழ்வே. (39)

பிரிந்த திருவந் துறச்சேற்றிற் பிறவா வரம்பற் கொடி
யரசும், விரிந்த மறையோ ருடனியன்ற வேள்வித் தருப்பா
ரணியத்திற், புரிந்து கனக மழைபொழிந்து பூமேற் கடவுட்
புரண்டுவிழ, வரிந்த வாடற் தலைக்காரத்தார்க் களப்பி லாத
சிறப்பமைத்தான். (40)

விடங்கொப் புளிக்கும் பணியணியும் விடங்கப் பெரு
மா னருள்பெற்று, சடங்க முனிவர் தமையெல்லார் தத்தம்



பதியி னிடைபோக்கிக், குடங்கர் நெற்கூ டொடுகமுகின்
குலைக்கி ழிருப்பக் குவளைமலர்க், கிடக்கும் வயலுஞ் செறி
பொன்னிக் கேதி லாநாட் டினுமகன்றான். (41)

காடு நாடுந் திரைபுரட்டிக் கடல்கீண் டொழுகு நதி
பலவும், கூடுஞ் சேனை யொடுகடந்து கொற்ற வேந்த ரெதிரி
றைஞ்ச, நீடு குன்ற நடைகற்று நின்ற தெனுங்குஞ் சர
நிறைந்த, பீடு கெழுதன் கலிங்கநா டடைந்தான் பின்னைப்
பிறப்பில்லான். (42)

கற்றைக் கவரி புடையிரட்டக் கனக வரியா சனத்தி
ருந், தொற்றைத் திகிரி யுருட்டியெழு வுலக முழுதும்
பொதுநீக்கிப், பொற்றைக் குவவு திணிதோளான் புனித
வேள்விப் பலன்முற்றிப், பற்றைத் தவிர்ந்து நள்ளாற்றிற்
பரமர் நளின பதமடைந்தான். (43)

என்ன மொழிந்த சூதனுரை யேற்றுத் தவத்தின் முனி
வரெலாம், சொன்ன கதையி னதிசயத்தைத் துதித்து
வேணி முடிதுளக்கி, யன்ன முறங்கு தண்பணைசூ ழன்ன
பதியி னமலனருள், பின்ன ரெவர்பெற் றாரதனைப் பேச
வேண்டு மெனச்சொல்வான். (44)

திருச்சிற்றம்பலம்.

கலிங்காதிபதிச்சருக்கம் முற்றிற்று.

ஆகச் சருக்கம் மூன்றுக்குத் திருவிருத்தம் 82.

## நான்காவது

# நளபதிச்சருக்கம்.

வளங்கெழுநன் னிடதநாட் டதிபதிமா விந்தரவர்
வணங்குந் தாளான்
விளங்கியவெள் வாளுழவன் வீரசெனன் புதல்வனிரை
வேலை யீண்டா
மிளம்பருதி யெனவுலகி னிருள்சீக்கு நளனென்பா
னெறிநீர் வைப்பிற்
றுளங்குமணி முடியரசர்க் கொருதிலக மெனப்பர்ந்தட்
சுமைதீர் நாளில். (1)

விதர்ப்பனருள் குலக்கொம்பு தமையந்தி யயன்படைப்பில்
வீறு பெற்றாள்
மதற்குவணங் கணங்கிளமை வளமெல்லா மோரன்னம்
வகுத்துக் கூற
மூகத்தினோர் கண்டவன்போற் கையற்றுக் காமத்தீ
மூளச் சோர்ந்து
பதந்தருண வெகினத்தைத் தூதுவிட வதுவவட்குப்
பகர்ந்த தன்றே. (2)

மற்றவனு மம்முறையே மாலுழந்து வெண்குருகை
மறித்து மேவக்
கொற்றவனு மகிழ்ந்துமனக் குறைதீர்ந்த காலையிற்செங்
கோல்வி தர்ப்பன்
பெற்றகொடி விகாரத்தாற் சுயம்வரமுண் டாக்கவே
பெருநீர் வேலை
யுற்றநில வரசரெலாம் பழுமரஞ்சேர் பறவையென
வுவந்து சூழ்ந்தார். (3)

செங்கையினிற் கருங்கோட்டு வீணைபயில் வெண்முனிவன்
றேவர்க் கோதப்
பொங்குடலிற் கண்ணன்வன் னி யமனிருதி யிவணீண்டு
போந்து போந்த



ஆங்கநளன் செய்தியறிந் தவனையே தூதமைக்கச்
சுடர்வேன் மன்ன
னங்கவர்சொன் மறுதுரைக்க வவண்மறுத்தா ளம்மாற்ற
மவர்க்குஞ் சொற்றான். (4)

மறுப்புண்ட தேவரெலா மாலைநளன் வடிவாகி
மணச்சா லைக்கே
சிறப்புண்டாங் கிருந்தனரத் தமையந்தி யுளந்திருப்பத்
தேந்தா ரேந்தி
நிறப்புண்செவ் வேலரசர் முன்வந்து நளரைவர்
நேரி னோக்கி
விறற்பொன்னங் கொடிகற்பால் விளங்குகென நளன்வேறாய்
விளங்கி னானால். (5)

அம்மாலை நளற்கணிய வண்டர்வரந் தந்தகன்றா
ரணங்கைப் புல்லிச்
செம்மாலை நளன்போதுங் காலையினில் வான்போதுந்
தேவர் முன்னர்
வெம்மாலைக் கலியணைந்து வினவவவ ரிவையுரைப்ப
வெகுண்டு நோக்கி
யிம்மாலை புனையணங்கை யான்பிரிப்ப னெனப்புவியி
னெய்தி னானால். (6)

ஈராறாண் டரசனிடத் தெய்தவரும் பிழையின்றி
யிருந்து பின்னர்
நீராரக் கால்பெய்யா தந்தியின்வந் தனைபுரிய
நினைந்து சேர்ந்து
போராடற் கலியினைய புட்கரன்பாற் புகலவவன்
பொருத சூதாற்
காராழி யுலகனைத்து மெய்பொருளுந் தோற்றெழுந்தான்
கருணை வள்ளல். (7)

மைந்தனையும் புதல்வியையு மாமன்பாற் போகவிட்டு
மலரி னீங்குஞ்
செந்திருவொப் பாளிறைவன் பின்னடந்து வெங்கானஞ்
சேருங் காலை

யந்தவனத் திரணியப்புள் ளாகிவந்து கொடுங்கலியோ
ராடை கொள்ள
நிந்தனையில் லாண்மனைவி யுடனாடை யொன்றுடுத்து
நெடுங்கா டுற்றான். (8)

தூங்கிருளிற் பாழிடத்திற் றுகளிலவன் கண்டுபினா
டொடர்ந்த வெய்யோ
னாங்கவனெஞ் சத்தடைய விழித்தணங்கை விடுத்தேகற்
கமைந்து கையாற்
பாங்கினுறத் தடவலுமே வெங்கலிவா ளாய்க்கிடப்பப்
பற்றி யொற்றைப்
பூங்கனகத் துகிலீர்ந்து கண்ணுழையாக் கானிருள்வாய்ப்
போனா னன்றே. (9)

எழுவுறழுந் திணிதோளா னேகுங்காற் கார்க்கோட
னெரிவாய்ப் பட்டே
யழுகுரல்கேட் டவ்வனலி லஞ்சாது புறத்தேந்தி
யயலிற் போக்கக்
கழுவுமணிப் பூணானைக் கடித்துருவம் வேறாகக்
கண்டு நீயிப்
பழுதிழைத்த தென்னெனலும் பாம்பரசன் துகிலீர்ந்து
பகர்வ தானான். (10)

இந்நிலைமைக் கிவ்வுருவே யிருத்தனன்று வடிவம்வர
வெண்ணி லந்த
மென்னிலைமைத் துகில்போர்த்தி பரியுள்ள நீகொடுக்கில்
விறல யோத்தி
மன்னனுனக் கவ்வுள்ளம் வழங்குவனத் தாலுனது
வாழ்வு வாங்கிக்
கன்னிமதி னிடதநா டாள்வையென நளற்குறுதி
கழறிப் போனான். (11)

நன்றெனவுட் கொண்டுவன நாடொடுகோ டகன்றுபோய்
நயந்த யோத்திக்
குன்றெனுந்தோ ளிருதுபன்னர்க் கண்டுபரித் தொழில்விஞ்
கூறக் கேளா
[ளை



வன்றுமுதற் பரியாளர்க் கதிபனெனச் சிறப்பளிக்க
வமர்ந்தா னிப்பாற்
றன்றிருள்வாய் விட்டொழிந்த விதர்ப்பர்கோன் மகள்செய்தி
சொல்வா மன்னோ. (12)

பாரற்ற மன்னவனோர் பற்றற்று விடுத்தேகப்
பார்த்துக் காணாள்
வேரற்ற கொடிபோல மெய்யுலர்ந்து கண்ணீரும்
வீழ்த்தி நீண்ட
சீரற்ற கூந்தலுமாய்ப் புறப்பட்டுப் புலம்பியே
தேறுங் காலை
நீரற்ற காட்டிலொரு நெடும்பாம்புண் டதுமதியாய்
நினைந்து மாதோ. (13)

அப்போதங் கொருவேட னம்பினாற் பாம்பகற்றி
யமுதம் வார்த்த
செப்போது முலையாளைக் கண்டுமனத் தெழுங்காமத்
தீயால் நொந்து
தப்போது மளவிலவள் கற்பதனால் மரித்தும்வெஞ்
சாம்ப ரானா
னெப்போது நிலைகலங்காக் கற்புடையா ளருமையையா
ரிசைக்க வல்லார். (14)

வாளரவின் வாயகன்ற மதியமெனப் பொற்கோதை
மம்மர் நீங்க
நீளுமறை முனிவரங்கோர் நிலைபிடத்தார் போற்பாலை
நிலத்திற் றோன்றிக்
கேளுறவே பலவுமொழிந் தாற்றியவ ரகலுறநீர்க்
கெண்டை யங்கண்
தாளறுநீர் பால்பொதுக்குங் குருதியலத் தகமாகத்
தளர்ந்து போனாள். (15)

மெல்லமெல்ல நடக்குங்கால் வெவ்வதர்க்கே வணிகர்சிலர்
மேவக் கண்டு
மல்லவிள முலைசுமக்க மாட்டாத மருங்குன்மயில்
வருந்திச் சென்றே

றல்விடையோ ரயலிருப்ப வடலானை வந்தடைந்தோ
ரடையக் கொன்றுங்
கொல்லென்ன வெதிர்நின்ற கொடியையஞ்சி விடுத்ததந்தக்
கொடிய வேழம். (16)

காலையினிற் புறப்பட்டுக் கானகன்று வளநாடு
கண்டு போந்த
வேலையினிற் சுவாகுவெனுஞ் சேதுபதி தாய்கண்டு
விளித்தா ரென்னப்
பாலையினிற் போயடைந்த தமயந்தி தோழியெனப்
பகர்ந்தா ளன்னாள்
மாலைமுடி யவன்வெளியா மட்டுமிங்கே யிருத்தியென
வதிந்தா ளன்றே. (17)

அக்காலை விதர்ப்பன்விடு மருமறையோர் பலருள்ளு
மறிசு வேதன்,
மைக்காவி விழிநுதலின் மறுக்கண்டே யறிந்தந்த
வண்ண மெல்லாந்
திக்காளுஞ் சேதுபதி தாய்க்குரைப்ப வவளுறவு
செப்பிப் புல்லி
மிக்காய சிவிகையினில் விதர்ப்பர்கோன் பதியடைய
விடுத்தா ளன்றே. (18)

தாதையிலின் மக்களொடுந் தமயந்தி சேர்ந்துமலைத்
தடந்தோள் வேந்தைப்
பூதலத்தி னெல்லையெலாந் துருவிவர மறையோரைப்
போக்கி நாடச்
சீதமலர்த் தாரானைக் கண்டிலரா லயோத்தியின்மெய்ச்
செயல்வே றாகி
யோதலவன் போலிருக்கும் வாகுகனைக் கண்டுவந்தங்
கொருவன் சொன்னான். (19)

ஐயப்பட் டவனையும் பொருட்டெனது சுயம்வரமென்
றயோத்தி யானுந்
துய்யற்கு விரைவில்வர வுரைத்தியெனத் தூதுவிடச்
சொற்ற காலை



மெய்யுற்ற வாகுகனை விரைவிற்றேர் விடுத்தியென்றான்
விடுக்குங் காலை
மையுற்ற தோர்தான்றி யிலையாதி தொகைசொன்னான்
மன்னர் மன்னன். (20)

வேறு.

கூந்தன்மாத் தூண்டுவான் கொற்ற வேந்தனை
யேந்திலிவ் விஞ்சைநீ யியம்பி னியான்பரி
யோர்ந்துள மறிவிஞ்சை யுணர்த்து வேனெனச்
சாந்தணி புயத்தினாற் கறிந்து சாற்றினான். (21)

உன்னரும் விஞ்சைமே லுணர்த்து வாயென
மன்னவ னுரைப்புழி மற்றத் தான்றிவாய்த்
துன்னருங் கலியுடன் சோர்ந்து நீங்கினான்
முன்னவ னன்னதேர் முடுக்கித் தூண்டினான். (22)

காவதம் பற்பல கணத்தி லேசெலக்
கோவிடு தேர்வலைக் குரலைக் கேட்டது
மோவமா சடைந்தென வுணங்குங் கோமகள்
மேவரும் நளன்பரி விஞ்சை யேயென்றாள். (23)

மணிமுடி விதர்ப்பர்கோன் பதியில் வந்திழிந்
தணிமண வினையொன்று மாங்குக் கண்டிலான்
பிணிபடு மனத்தனவ் வேந்தைப் பெட்பொடு
பணியவந் தேனெனப் பகர்ந்து வைகினான். (24)

சிறப்பொடு மவற்கொரு செம்பொன் மாளிகை
மறக்கொடு வேலினான் வழங்க மன்னினா
னறற்கன லன்றிச்சோ றடுமச் செம்மல்சீ
ருறற்கரு மொற்றரா லுவந்து நாடினாள். (25)

மேலுந்தன் மக்களை விடுத்து நாடியே
போலுநம் மிறையெனப் புந்தி கொண்டுரு
வேலும்வேற் றுமையென வெண்ணித் தாதைக்குப்
பாலுறு விளவியிப் பரிசு கூறினாள். (26)

மற்றது நன்றென வாகு கன்றனை
கொற்றவ மனையிடைக் கொணர்ந்து நாடெனச்
சொற்றனு மம்முறை துலங்க நாடுழி
யுற்றவ னளன்பழ வுருவு காட்டினன். (27)

மாமனு மக்களு மனைவி யும்பதித்
தோமறு மியாவருந் துயர நீங்கியே
யேமமுற் றிடுதலு மிருது பன்னனுங்
கோமகற் பணிந்திது கூறு வானரோ. (28)

உனைப்பணி கொண்டன னுணர்வி லென்பிழை
தனைப்பொறுப் பாயெனச் சாற்ற வேனள
னெனைப்புரந் தனையிது விசைப்ப தோவெனு
முனைப்பகர் விஞ்சையு மொழிந்து போக்கினன். (29)

கட்கமழ் மலர்வப னிடதங் காக்குறும்
புட்கரன் றன்னுழைப் போந்து சூதவன்
வெட்குறப் பொருதுபோர் வென்று மேவல
ருட்குற வளகட லுலகந் தாங்கினன். (30)

தீதணி சூதினிற் சிந்தை செய்ததுங்
காதலி வனத்திரா விடுத்த வன்மமு
மேதக வறப்பரி வினைசெய் கேண்மையு
மேதவெஞ் சனிவிடா தியைந்த தீமையும். (31)

பிறங்கிய மனத்தினிற் பெரிது முன்னியே
யறங்கிளர் செயற்கிது வடாதெ னக்கடை
மறங்கிளர் மன்னவர் மலர்க்கை சென்னிவைத்
துறங்கிட வுறங்கிடா வொளிம ழுங்கினன். (32)

உண்டியிற் கருத்தில னுணங்கு வானெதிர்
குண்டிகைக் காத்திசை விளைக் கோமுனி
மண்டலத் தீர்த்தநீர் மருவி யாடுறத்
தெண்டிசைப் போதெனச் செப்பிப் போயினன். (33)

காளிந்திக் கரையிமக் கானந் துர்க்கைசேர்
நீளுமோர் வனங்கய னிலம்பொற் பற்பதங்



கோளறு சந்திர கோம னப்புனல்
நீளுஞ்சோ ணக்கரை விசாலை நீள்புரம். (34)

கருதுகா ளாஞ்சனங் காமற் காய்தல
மருள்கலிங் கேச்சர மனந்த வீச்சரந்
துரிசறு பாவிலாய்ச் சுரக்கண் டீச்சரம்
பொருகுக வனம்விதி பூசை செய்தலம். (35)

எண்டகு கழுக்குன்ற மருணை யிறில்சீர்
கண்டகோப் பருப்பதங் கவுத மேச்சரம்
விண்டமுத் தாநதி விருத்த வெற்புமேற்
கொண்டதீர்த் தக்கிரி குறிமுக் கூடமே. (36)

அரும்பொருள் வெளியினின் றாடு மம்பலம்
விரும்பின ரணியும்பேர் மேவு மோர்தலம்
பெரும்பிர மாபுரம் பேசும் புட்பதி
கருதுங்காஞ் சனம்பயில் கான்வெண் காடரோ. (37)

முக்குள நாமமே மொழியு மீச்சர
மிக்கதோர் கன்னியீச் சரமு மேவியே
தக்கதோர் கூவிள வனத்திற் சண்டனை
யொக்கவீழ்த் தினர்பத மூவர்து கும்பிட்டான். (38)

அங்கொரு மதியிருந் தளப்பி லாப்பதிச்
சங்கரற் களித்தபூண் டனினும் வீறுறப்
பொங்குசீர் மணிக்கலம் புனைந்து கோகன்னந்
தங்குமீச் சரனடி தாழ்ந்து வாழ்த்தினன். (39)

வேறு.

அவ்வயிற் பாத்து வாச னடிமல ரிறைஞ்சி மாலை
வெவ்வயி லிறைவ னுற்ற தன்மையை விரும்பி நோக்கிக்
கவ்வையில் முனிவன் பூமேற் கடவுள்கண் களிப்ப வெம்மான்
செவ்வையிற் றருப்பை மூலத் தெழுமிடஞ் சோதி யென்றான். (40)

தாபத னுரைத்த வாறே தடம்பனை கழிந்து மன்னன்
தீபகற் குடும்பத் தோடுஞ் சேர்ந்துநற் றிருநள் ளாற்றிற்

கோபவாய் வாணி வேதன் கூறனை முன்ன மைத்த
சோபத்தீர் தடத்தி லாடும் விதியொடுந் தோய்ந்தெ ழுந்தான். (41)

முப்பதிற் றிரட்டி யாய வாயிர முனிவர் சேவைக்
கப்பொழு தெய்திச் செங்கோ லரசனைக் கண்டங் கீரிற்
செப்புமந் திரத்தி னோடு தெளிப்பவெப் பவமுந் தீர்ந்தே
யொப்பிலாப் பெருமான் கோயி லொளிமணி வாயில் புக்கான். (42)

கொடிக்கொடி யானன் றந்தக் கோபுரத் திடப்பு றத்தே
யிடிக்கருங் கொண்ட லென்ன வேகலு மரசன் ளேகிப்
படிக்கருள் மூத்த பிள்ளை பதமுறை பணிந்து போற்றி
கடித்தடங் கமலக் கண்ணாற் கண்டுகை குவித்து நின்றே. (43)

ஆயிர நாமஞ் சொல்லி யருந்துதி புரிந்து கண்ணீர்
பாயிரும் புளகம் பூப்பப் பன்மணிக் கலம்பூம் பட்டோ
டேயின விரண்டு கோடி கனகமு மீந்தா னங்கே
ராயிறு தோன்றிற் றென்ன நம்பிரான் றோன்றிச் சொல்வான். (44)

மன்னவ நினக்கு வேண்டும் வரமெவை கூறு கென்ன
வென்னது நாம மில்லூ ரெய்திட வேண்டு மியார்க்கு
முன்னவ வெளிதிற் போக முத்திதந் தருள வேண்டும்
நன்னரியா னிழைக்குங் கோயிற் பணிசயந் தருள வேண்டும். (45)

தீர்த்தமொன் றமைக்க வேண்டுந் திருவிழா நடத்த வேண்டு
மேத்தியிவ் வழியான் சென்று விருந்தலும் வேண்டு மென்றான்
கூத்தனு மன்ன தெல்லாம் நன்றெனக் கூற வின்பம்
பூத்தவன் வலங்கொண் டேகிப் புறத்தன் றீர்த்தஞ் சார்ந்தான். (46)

அத்தடங் கரையி லோரில் லமைத்திருந் தணிகோ டீர்ந்த
நித்தமு மாடி வேத நியமர்க்குத் தானம் நல்கிக்
கைத்தல மழுவி னானைக் கடவுள ரெண்மர் செய்த
சுத்தலிங் கத்தி னோடு தொழுதவ ணிருக்கு நாளில். (47)

நிறைகொடு மன்ன ரெல்லாந் திருந்தடி பணிய நோக்கி
முறைமையின் வரிசை நல்கி முற்பதி கத்தி னூலிற்
குறைவில்கம் மியரைக் கூவிக் கோதிலாத் தேற லார்க்கின்
குறைதரு கோயில் யாவு முறச்செய வேவி னானே. (48)



கல்விய லறிந்த தச்சர் கனகமு மணியுங் கொண்டு
சொல்லிய சிகர மாதி தொடருமண் டபங்கள் சுற்று
நல்லமா ளிகையி னோடு நகைமணி மதில்க டங்கட்
புல்லுகோ புரங்க ளோம் பொலிபலமண்ட பங்கள். (49)

பொலங்குடி போக மார்த்த பூண்முலை கனகக் கோயில்
விலங்கிவில் லுமிழச் செய்து விதிகள்பற் பலவு மாற்று
நலங்கிளர் சமயத் தோரு மறைஞரும் நணுகச் செய்து
தலங்கிளர் மடங்க ளன்ன சத்திரத் தோட மைத்தான். (50)

சாலையும் வாவி கூப தடாகமுந் தளிர்க்கும் பைம்பூஞ்
சோலையுங் கிராம தேவர் துலங்குமா லயமுஞ் செய்து
மேலயன் றனக்கு நாடி விதித்திட லரிய தாய
காலையெய் தியதேர் வல்ல கம்மியர் பொன்னாற் செய்தார்.

தொழில்புரி கம்மி யர்க்குத் தொடுகட லுடுத்த வைய
முழுதரு ளிறைவ னாற்றுஞ் சிறப்பினை முடித்தெம் மாற்குப்
பழுதிலா மகுட நூலிற் பயில்பெரும் பூசை செய்வித்
தொழுதுநா டிருவி ழாச்செய் வண்ணமா முரைக்க லுற்றாம். (52)

திருச்சிற்றம்பலம்.

நளபதிச் சருக்கம் முற்றிற்று.

ஆகச் சருக்கம் நான்கிற்குத் திருவிருத்தம் 134.

உ

## ஐந்தாவது

# திருவிழாச்சருக்கம்.

நேசர்க் கருளும் நிமலன் விடையுறல்போ
லாசற் றொளிரு மருக்கன் விடையடையப்
பூசற் சுரும்பரற்றும் பூம்பொதியில் வாயுயிர்த்த
வாசப் பசுந்தென்றல் வண்ண நனிவிளங்க. (1)

திங்க ளமுதொழுகுந் தெண்ணிலவு வாய்மடுத்துத்
துங்கச் சகோரந் துதையுங் களிசிறப்ப
வெங்கட் டுளிதுலற்றும் வெம்மலரின் றூதூதி
யங்கட் சிறையறுகா லேழிசையு மார்க்கவே. (2)

அம்மார்ந்த சோலை யணிபூ மழைபொழியப்
பம்மா ரலரிற் படும்பொற் றுகளாம்பல்
வெம்மா கனகமழை வெண்க லெனவிளங்கச்
செம்மாந்து செங்கட் கருங்கோ குலஞ்சிலம்ப. (3)

கண்டார் மனங்கவருங் கமுகப் பழங்கனிந்து
விண்டாங் கடைந்தார்க்கு வெம்மைகெடத் தார்தூற்ற
வண்டாடல் கண்டு மகிழ்ந்துமலர் வாய்திறக்குந்
தண்டா மரைத்தேனு முத்துந் தடநிரப்ப. (4)

தாமத் தலர்பன்னீர் சந்தக் குழம்பணிந்து
வாமத் திளைஞர் மகளி ருடனுட
ஏமக் கரும்பு மெழின்மலரும் கைக்கொண்டு
காமக் கடவுள் விழாவயருங் காலத்தே. (5)

மின்னு மகுட விடங்கப் பெருமாட்குத்
துன்னும் விழாப்புரியும் வேட்கைத் துணிவுற்று
னுன்னு மணியொன் றுறங்க விருபோது
மன்னு மயிற்கண் முரசறங்கா வாயிலான். (6)

எவ்வெத் திசையி லெவரும்வரத் தூதேவப்
பவ்வத் திரையேழு போதும் படிவாவுஞ்



சைவத் திறன்மறையோர் சார்கடவு ணள்ளாற்றைத்
தெய்வப் பதியிறங்கிற் றென்னச் சிறப்பித்தான். (7)

மாடத் திரள்வயிர மண்டபங்கள் கோபுரங்கள்
கூடத் திடையமைத்த வான்பொற் கொடியீட்ட
நாடற் கரியவிழா நாடிப் பலவாகி
யாடற் புரவி யிரவிவந்த தாமென்பார். (8)

நாடாளும் வென்றி நளன்கோ புரத்தணிந்த
பீடா ருரக மணிச்சோதி பெய்மதியங்
கோடாத செங்கதிர்போற் கோலங் கொளநோக்கி
வாடாத மாலை யிமையோர் மயக்குற்றார். (9)

மாலை நெடுமாடத் தணிந்த மரகதத்தின்
வேலையொளி விண்ணோர்த நாட்டில் விளங்குதலும்
பாலை மருட்டுமொழிச் செந்தாட் கிளிப்படியுஞ்
சோலை யெனவிண்ணோர் சோலை விளங்கியதால். (10)

வேறு.

அந்த ணாளரை யாதியோர்
நந்து லாவுநள் ளாற்றினில்
வந்து கூடலும் வண்டமிழ்
தந்த மாமுனி சாம்பினான். (11)

அணிகொ ளண்ட மனைத்தையும்
தணிவு கொண்டவண் டாங்கிய
பணிவி ளங்கு பணைப்பணா
மணிசி தைந்தும றைந்ததே. (12)

பயில்வி ழாவொலிப் பம்மலா
லயிலுந் தேனளி யன்றியே
யியலு மாவுட னெய்துபுட்
டுயில்ம றந்துது ளங்குமால். (13)

இளரு மெண்டிசைக் கேடிலா
வளவ ரும்பொரு ளல்கலாற்

றள்ளில் வானகர் தன்னுட
னளகை யொத்துள தாவணம். (14)

சாற்றி னாரியந் தாழ்வற
வாற்றி னார்விதி யாவையும்
போற்றி னார்புனர் பூசனை
ளேற்றி னார்கொடி யேற்றினார். (15)

அல்லி லோடை மாடுவார்
மல்லல் வீதியில் வாழ்வுறச்
சொல்லு நூலுரை தொன்மையால்
நல்ல யாக நடாத்தினார். (16)

சொன்ன தானமுந் தாயசி
ரன்ன மேழுத லானவு
மின்ன ரென்றிக ழாகன
மன்னன் சாலவ ழங்கினான். (17)

வெள்ளி பொன்மணி வீதியி
லள்ளி யீயுநள் ளாற்றினில்
நள்ளி யோர்வா நாடியே
வள்ளி யோனுளம் வாழ்ந்தனன். (18)

வேறு.

காட்டு ளங்கொளி காய்மணிப் பூண்மதக்
காட்டு தாரவை காதிக் கலந்தக
காட்டு பச்சைக் கதலிநள் ளாற்றினிற்
காட்டு நீக்குவர் காலையில் வீதியே. (19)

மைக்க ருங்குழல் மங்கையர் பாடல்கேட்
டொக்க விஞ்சைய ரொப்பறு கின்னரர்
தக்க கோடு தளிர்க்குமென் றுன்னியே
மிக்க பாடற் கருவியின் போக்கினார். (20)

சொன்ன கைப்பெயர் நாளிற் சுரர்தொழ
மின்னு மேருவும் வெள்கிய தேரிடை



மன்னு பாலர் மனைவி யுடன்புவிக்
கின்னல் போக்கும் பிரானையு மேத்தினார். (21)

விண்ணு மண்ணும் விழிகளிந் தேத்தவே
மன்னுந் தேரை மரபி னடாத்தியே
கண்ணு நெஞ்சுங் கவர்மணிக் கோயில்வாய்
நண்ணு மாறமைத் தார்பணி நாட்டினார். (22)

மற்றுஞ் செய்விழா முற்ற வயக்கியே
கற்றை வேணியைக் காமர் விசாகநாட்
பற்றை யாவரு நீங்கப் பனித்தட
மெற்ற வாட்டின ரேழுல குய்யவே. (23)

காவி யங்கட் கவுரிம ணாளர்க்கு
மேவு மின்ன விழாமுடித் தேத்தியே
கோவி தர்ப்பன் கொடிபுணர் மன்னவ
னாவி யும்பொரு ளுந்தின தாமென்றான். (24)

வள்ள லைப்பணிந் தேகவந் தோர்க்கெலா
மெள்ள ருஞ்சிறப் பீந்து விடுத்தரோ
புள்ள லம்பும் புனல்வய லப்பதி
நள்ளி யாண்டுமுன் னான்கிருந் தானளன். (25)

அனைய காலை யனிலன் றிசையினி
னினையு மம்பிடு தூரத்து நீடடம்
புனையும் பூணிறை தொட்டுப் புனிதனை
வினையி னீங்க வடபால் விதித்தனன். (26)

ஆதி பாத மருச்சனை செய்துநற்
சோதி பூசனை செய்யச் சுரநதிக்
கோதி லாப்புனல் நாளுங் கொணர்தலுந்
தீதி லாப்பெரு மானரு டேக்கியே. (27)

கங்கை யிந்நற் கருதரு தீர்த்தம்பா
லிங்க மைப்பசீ யீதறி வாயெனச்
செங்கை யாழி திருமாற் களித்தகோ
னங்கை மூவிலை வேலளித் தானரோ. (28)

Q23:38-21193TN
N35

முத்தலைப்படை முன்னர சேவனு
நத்தலைக் கங்கை கொண்டு நடந்துபூங்
கொத்தலைத்தண் டடவன்னி கோணத்தில்
மெத்தலைப்புனல் காட்டிற்றவ வேலுமே. (29)

கண்டு சிந்தை களித்த படையெடுத்
தண்டர் கோன்கரத் தீந்தணி கும்பவாய்
கொண்டந் நீரிற் குறைவற நாடொறும்
மண்ட லத்திறை யாட்டி மகிழ்ந்தனன். (30)

இன்ன நற்புன லீசனுக் கன்றியே
பின்ன ரியாவரு மாடப் பெறாரென
வன்ன வாணை யமைத்தரு ளெய்தியே
மன்னன் றன்பதி மாண்பொடு மெய்தினான். (31)

வைய மொற்றை மதிக்குடைக் கீழ்வைக
செய்ய கோலை நடாத்தித் திசைதொழ
வெய்ய வேனளன் வீற்றிருந் தெண்புயத்
தையன் சேவடி யம்புய மெய்தினான். (32)

துரிசி லீரெனக் கூறிய சூதனை
விரிச டைத்தலை வேதிய ரியாவரும்
பரிவி னேத்திப் பழுதறு காதைமே
லுரிய தெக்கதை கூறென வோதுவான். (33)

திருச்சிற்றம்பலம்.

திருவிழாச் சருக்கம் முற்றிற்று.

ஆகச் சருக்கம் ஐந்திற்குத் திருவிருத்தம் 167.

## ஆறாவது
# கோக்கொலை தீர்ந்த சருக்கம்.

நீதகலும் புனற்கோதா விரிதீ ரத்திற்
றெளிக்குமறை யவர்த்தனப்பேர் செப்பு மோரூர்
காதலொடு புரக்குமன்னன் றாய கண்டன்
கதிகாட்டு மகச்சுட்டிக் கடவுள் வேள்வி
வேதவிதி பயில்மேதா விதியைக் கொண்டு
வேட்டலுமத் தீயெழுந்த மிக்க பூத
மேதமகல் பாலடிசி லளிக்கக் கொண்டே
யின்பமுறு மனைவிதனக் கீந்தா னன்றே. (1)

அப்பருவந் தவள்கருப்பந் தாங்கி வையத்
தரசுரிமைக் குமரனைமே லளிப்பதானா
ளொப்பருமவ் வேள்விகுருக் கம்பொற் பூணு
மொருநூறு பசுவும்பொன் னோரி லக்கந்
தப்பறவே யருளிமறை வாணர்க் கெல்லாந்
தானங்கள் பலகொடுத்தான் றானங் கொண்டா
ரொப்புவமை யாற்பெரிய பசுவை நாடி
யோரிருவ ரெனதென்றே யுடன்று நொந்தார். (2)

பிரமகொலை வருமெனவே யிருவ ராங்குப்
பிடித்திருக்கும் பசுவினைக்கைத் தண்டத் தாலே
வரமறையோ னொருவனடித் தெனதென் றோட்ட
வருகாக தாலியெனும் வழக்கால் வீழ்ந்து
சருமமுறு பசுவின்றோ னைய வெம்மை
சாதிமறை யோர்கண்டார் சண்டா ளன்போற்
காமருவு தண்டத்தான் வடிவங் கொண்டான்
கருமத்தின் விளைவினையார் காண வல்லார். (3)

முந்நூலோ ருறைபதியிற் போதல் செல்லான்
முடிவிலாப் பவந்தொலைப்ப முன்னிச் செல்ல
வெந்நூலுந் தெரியுரோ மசனென் றோது
மிசைமறையோன் மார்க்கத்தி னெதிர்வந் தெய்த

வென்னாலும் வேறாகும் பவத்தோன் கண்டு
மெல்லடிமுன் வணங்கவவ னுருகி நோக்கி
யுன்னூழின் வரும்பாவ மறிந்தோ முன்னே
டுரைக்கவொணா தானாலு முரைப்பங் கேண்மோ.

ஈங்குனக்குத் தீர்த்தயாத் திரைநன் றென்ன
வேதென்னி லதனைவகுத் திசைப்போங் கங்கை
பாங்குமைகா ளிந்திநதி சோணை துங்க
பத்திரைகோ தாவிரியே பாலி பெண்ணை
தீங்கறுகா விரியனந்தை சரயு பம்பை
சிந்துகம்பை முதற்பலவாந் தெய்வ வுந்தி
யோங்குகுண கடற்போத லன்றி மேல்பா
லுறுந்தலத்திற் சிலதொகுத்தே யுரைப்பா மன்னே.

அம்புசைவேத் திரவதிசி ரடையே கன்னி
யருள்கபிலை காளிந்தை யரும்பா ருந்தை
பம்புமணி வாகினியே நேம கன்மப்
பற்றறுக்கு மாறுமுதற் பலவாந் தீர்த்தஞ்
செம்பதுமத் தடம்பலவா மெங்கு நீதான்
சென்றுழலா தொருதீர்த்தம் பொன்னித் தென்பால்
நம்பர்தருப் பாரணியத் தன்ன தீர்த்தம்
நண்ணுகவென் றுரைத்ததன்சீர் நவில்வ தானான்.

வேறு.

அன்னத் தடத்தி னனிலன் றிசையாழி யுண்டான்
மின்னொத்த சோதி யொருலிங்கம் விதித்து நாளுந்
தன்னொத்த மேன்மைச் சனகாதிய ரோடு சார்வான்
மன்னர்க்கு மன்னன் முசுகுந்தனும் வந்து போற்றி. (7)

வானத் தடைந்த விடங்கேசனை மன்னு மிந்தத்
தானத் தமைத்துச் சிறப்பெண்ணில தான மைத்தா
னீனத் தகன்றநா ளிங்கிருந் தன்ன மந்தன்
ஞானக் கடலி னருள்பெற் றவனண்ணி னானல். (8)

மாகோ புரத்தோர் பாலுள மந்தற் கண்டாற்
கேகாத வன்றுய ரியாவுமங் கில்லை யாமால்



போகா யவனென்று விடுத்தயல் போயி னானல்
சாகாத வரத்தின ரியாரினுந் தக்க மேலோன். (9)

அறியா மையினாற் பவமெய்திய வந்த ணாள
னெறியாது மகன்றுய்ய வந்நாளி னீடு பொன்னி
யெறியார் வயற்புன னாட்டினி லெய்தி முன்பு
பிறியாத துயர்க்கட லியாவையும் பின்னிட் டானல். (10)

ஞாலத்து ளோர்கள் வினைதீர் நலத்த ருப்பை
மூலத் தெழுந்த சுடர்மேவிய முற்ப திக்கே
சீலத்தர் போற்றுஞ் சிவாத்திரி சேர்ந்து மேற்கின்
பாலுற்ற தீர்த்தத் திடைபோ யொருபாலி னின்றான். (11)

அத்தீர்த்த மாடு மவர்கேச மலைப்பச் சிந்து
நத்தீர்த்த மெய்பாற் படலு முருநன் கடைந்தான்
மெய்த்திணி தோளரு மம்புவி யோரும்வின் னுளோரு
மித்தீர்த்த மேன்மை பெரிதா மெனவின்ப முற்றார். (12)

செற்றார் வணங்குஞ் சிவவீறு தெதீச னென்பான்
மற்றொரு மொப்பில னாயினன் மற்றை யோர்க்கா
வுற்றாங் கிழைக்கு முபகாரத்தின ரோங்கு சீர்மை
முற்றா ரெனினு முடனேநல முன்னு வாரே. (13)

வீறும் வடிவெய் தியவன் விண்ட கஞ்ச
நாறுந் தடமூழ்கி யெழுந்து நயந்து விண்ணோர்
கூறும் பெருமா னடிதாழ்ந்து குழைந்து மாயை
பாறும் படிமா மறைகொண்டு பாடி னானல். (14)

நங்கோனை நள்ளாறனை மாதிர நண்ணுந் தேவர்
தங்கோனை யென்னாவினி லூறிய தண்ணந் தேனை
வெங்கோ தறுகன்னலை யேத்தியுண் மெய்வி திர்ப்ப
வங்கோ வறுதண்ணளி யெய்தின னந்த ணாளன். (15)

தாரத் தொடுமக்கள் முன்னாகிய தக்க பாசஞ்
சேரத்தகு மியாரையு நீத்துளந் தேறி வன்னி
நாரத் துடன்வேணி யணிந்துநள் ளாற்றில் வாழ்வை
யாரத் தனையே யுறவாக வடைந் திருந்தான். (16)

கோயிற்பணி வேண்டுவ யாதுங் குயிற்றி மிக்க
வாயிற்சிவ தோத்திர மாமறை மல்க வோதிச்
சேயிற் பரிவாய்க் கலந்து செறிந்த வர்க்கே
தாயிற்சிறந் தானடித் தாமரை சார்ந்து ளானே. (17)

ஆனின்பழி போக்கிய திம்முறை யாகு மென்றே
தேனின்பொழி வாமென வோதிய செம்மை யானை
மானின்னுரி யாடையர் வாழ்த்தி மகிழ்வுற் றைய
மேனின்ற சரித்திர மியாதென வேறு சொல்வான். (18)

திருச்சிற்றம்பலம்.

கோக்கொலைதீர்ந்த சருக்கம் முற்றிற்று.

ஆகச் சருக்கம் ஆறுக்குத் திருவிருத்தம் 185.

ஏழாவது

## உருசிராசச் சருக்கம்.

எழுபெருந் திக்கு மேலா மிசைதிசை போம வந்திக்
குழுமணி மகுட மன்னன் கோதைவே லுருசி யென்பா
னெழுகுவெவ் விடப்பற் பாந்த ளொன்றடர் பிரானைத் தாங்கப்
பழுதறு முலகை யெல்லாம் பாழியந் திணிதோள் வைத்தான்.

வாய்மையுங் கற்பு மேய வனமுலை மனைவி யோடுந்
தீமகம் பலவு மாற்றி செய்யகோல் நடாத்து நாளி
லாய்மதிப் பரத்து வாச னருமறைக் குழாங்கள் சூழக்
காயமதி நிலவு வீறு காட்டவந் தணைந்தா னன்றே. (2)

முனிவரன் வருக நோக்கி முடியடி தோயத் தாழ்ந்தே
யினியன பலவுங் கூறி யாசனத் திருத்தித் தானுங்
கனிவுட னிருந்து மேவுங் கருத்தறிந் தறங்க டம்மிற்
றனியுய ரறமியா தென்னப் பரத்துவன் சாற்ற லுற்றான். (3)

தானமே யறமா மந்தத் தானந்தாம் பலவ வற்று
ளானதோ ரன்ன தான மதிகமவ் வனத்தி னூடே
மானவ ராகி வந்து மண்ணிடைப் பிறந்த லாலே
யேனவாந் தான மெல்லா மிதற்கிணை யாகா தன்றே. (4)

அன்னது கொள்வோன் கால மாயிடத் ததிக மாகு
முன்னவை யிரண்டு மீண்டின் மொழியிடத் தால்விறெய்தல்
தென்னிலம் தன்னி லீசன் திருப்பதி யொன்றி லுண்டால்
மன்னவ கேட்டி யென்ன மறையவ னுரைப்ப தானான். (5)

எறிதிரைப் பொன்னித் தென்பா லிருமுக்காற் காவ தத்திற்
செறிதரு தருப்பை யங்கான் சிவன்பிரி யாத தானன்
னெறியவ பொருந்தி யெய்ந்தால் கிரையுகள் கவலைமாறி
மறியுகள் வளலா மந்த மாண்டல மிலங்கு மாங்கே. (6)

துய்யவாச் சிரமே தன்றிச் சுரர்தொழும் பதியக் கானிற்
செய்யவாற் றினினன் னாகிச் செறிதலாற் றிருநள் ளாறாய்

வையக மிகுபேர் பெற்று வயங்குநா ளங்கோர் கள்வன்
வெய்யவா றலைத்துண் டாங்கே மேவினன் மேவு நாளில். (7)

பாற்றிரைக் குணாது வேலைப் பதிநின்றோர் வணிகன் போக
வாற்றுணாக் கொண்டு மேல்பா லடைகுவான்புகுதத் தீயோன்
கூற்றென வளைந்து பற்றக் கொள்பொரு ளொன்று மின்றி
யேற்றுமச்சோற்றைக்கொண்டேயிரும்பசிக்கிரந்துவிட்டான்.

வல்லியம் விடுப்ப நீங்கு மழவிடை போல நாய்கன்
புல்லிய துயர நீங்கிப் போந்துதன் பதிய டைந்து
கொல்லியல் வறுமை யாலே கோதுகள் புரிந்து மேலைச்
சொல்லிய வாயு நீங்கத் துயருழந் திறந்த காலை. (9)

காட்டில்முன் கள்வன் கொள்ளக் கட்டமு தளித்தா னென்றே
கோட்டிமி லேற்றோ னண்ணல் கொணர்கவெம் முலகத் தென்னச்
சேட்டிளம் பருதி போலுஞ் சேணுலா விமான மேற்றி
வாட்டமில் சிவக ணத்தோர் மல்கிய சிறப்புச் செய்தார். (10)

அரன்வடி வடைந்து வானத் தளப்பில்பல் லியங்க ளார்ப்பப்
பரனுல கடைந்தெங் கோனைப் பணிந்தவனிருந்தானென்றே
வரமறை முனிவ னோத மன்னவன் செங்கை கூப்பிப்
புரகரன் பாதம் போற்றிப் புனிதவப் பதியிற் செல்வான்.

வேதிய னருளாற் கூறும் விடைமொழி பெற்று வேந்த
னோதிய நெறியாற் காத்த லொருப்படு மமைச்சர்க் காக்கி
வேதிய தானை சூழ விருஞ்சுரம் பலவு நீக்கித்
தாதிவர் சோலை வேலித் தருப்பையங் கானில் வந்தான்.

பண்ணமர் சுரும்பு பாடப் படுமது வருவி பாய்ந்து
தண்ணறுந் தடமாய் வெய்ய தானைகா லாழத் தேக்கு
மண்ணலங் கானில் வேந்த னனைநறு மாரி நீத்தங்
கண்ணக னூடு முற்றுங் கருவிவான் பொழிந்த தம்மா. (13)

வெள்ளிதன் முனிவால் போய விரிவன தண்ட கக்கா
னள்ளிய தமிழ்தேர் வேந்தன் னன்குற வமைத்த தேபோற்
புள்ளிமா னுடை யீசன் புரத்தொடு நாடு முற்று
மள்ளிலைப் பூணி னுன்வர் தனிவள மளித்தான் மன்னே.



வானவ ரியக்கர் சித்தர் வரமறை முனிவ ரோடு
தானவர் பணிநள் ளாற்றிற் சங்கரன் றளிமுன் னாகத்
தேனலர் கடவுட் கோயில் செய்நளன் பணிபோல் மேவ
வினமி லுருசி மன்ன னிரணிய மணியிற் செய்தான். (15)

வேறு.

நள்ளா றுடையார் நவில்பூ சனையு
மெள்ளா நெறியி னியலும் விழவுந்
தள்ளா மறையோர் மகமுந் தடைதான்
கொள்ளா முறையிற் குலவுற் றிடவே. (16)

மலையிற் பொலியு மடையும் வருபா
லலையிற் பொலியு மதுபோ லமுதுங்
குலையிற் கனியும் பிறவுங் குழுமுந்
தொலைவற் றிடுமா னிடர்துய்த் திடவே. (17)

கல்லா மணியுங் கனகத் திரளும்
பல்லா னினமும் பகரும் பிறவும்
வல்லார் மறையோர் மகிழக் கொளுமா
றெல்லா வறமு மிகவுற் றிடவே. (18)

மெய்வைத் திடுசீர் வேளாண் மரபோர்
வைவைத் திடுவே லரசர் வணிகர்
தெய்வத் திருநான் மறையோர் திகழுஞ்
சைவத் திரளும் மிகவுந் தழைய. (19)

பூசைச் சிவவே தியரும் புனித
னேசப் பணிசெய் நிறைதா னிகரும்
வாசக் குழலார் மலிதா ரியரு
மேசற் றளகைக் கிணைபோன் மலிய. (20)

செங்கோ லரசன் திகழ்வித் தனிலத்
தங்கோர் திசையி னமலத் துருவார்
தங்கோன் வடிவர் தாபித் தியலாற்
பொங்கா நாளிற் பூசித் தனனே. (21)

சரவா ரணியந் தங்கிச் சடைமே
லரவா டிடநின் றாடும் பெருமான்
கரவா மனனெக் காலுஞ் சிறிதும்
விரவா னிறைமுன் வெளிநின் றனனே. (22)

கண்டான் வடியாக் கருணைக் கடலை
விண்டான் விழிநீர் மெய்மூழ் றவசங்
கொண்டான் பிரமக் கூத்தும் பொலியத்
தண்டா மரபிற் றுறா டினனே. (23)

வேலா வலயத் தவுணன் மிடல்தீர்
சூலா யுதனே சுரர்நா யகனே
மாலா யெதிரு மறலிப் பழிகொள்
காலா விமலா கருணை நிதியே. (24)

நாரா யணனோ டயனும் நணுகா
வேராய் முடியாய் மிளிருஞ் சுடரே
தாராத் தமியே தமிழோர் பொருளே
யாரா வமுதே யடியே னுயிரே. (25)

எந்தச் சமயத் தெவருற் றிடினு
மந்தச் சமயத் தருளுஞ் சுடரே
சந்தப் புளகத் தருணக் கமலக்
கந்தக் கொடிசேர் கதிர்கற் பகமே. (26)

என்றே பரவுற் றனனல் லிறையை
நன்றே புரியும் நள்ளா றுடையான்
குன்றா வரநல் குவம்யாங் கொளுமுன்
னொன்றா தரவே துரையென் றனுமே. (27)

வேறு.

பேசுமண்ணி வின்னமும் பிறக்கும்வண்ண நேரிலோ
ராசிலாத நின்னிடத்தி லன்புவைக்க வேண்டுமித்
தேசிடத் திருந்துநின் றிருப்பணித் திறஞ்செயாப்
பாசநீக்க வேண்டுமென்னப் பாணிவேணி நல்கினன். (28)



மீனவுத்தி ரத்துநாள் விரிந்ததிங்கட் காலையில்
மானவேலின் மன்னவன் வாய்த்துணர்ந்து நீங்கியே
யானநா டகன்றுபோ யவந்தியிற் புகுந்துநற்
றானமன்னம் நல்கிமெய்த் தவம்புரிந் திருந்தனன். (29)

பின்னர்காய நீங்கியே பிறங்குசீர்நள் ளாற்றினில்
மன்னன்முன்ன ரூழுடன் வந்துதோன்றி வாழ்வுறீஇ
யன்னதான நல்கியே யடைந்தபற் றகன்றபின்
பன்னவேணி யீசனற் பதத்தகத் தடைந்தனன். (30)

அந்தணீரிவ் வண்ணமென் றுய்ந்தசூத னோதவே
சந்தநீ றணிந்திடுஞ் சவுனகாதி யோரெலாம்
பந்தநீங்கி மன்னவன் பரனிடத் தடைந்தபின்
வந்தகாதை யேதென மகிழ்ந்துவேறு கூறுவான். (31)

திருச்சிற்றம்பலம்.

உரிசிராசச் சருக்கம் முற்றிற்று.

ஆகச் சருக்கம் ஏழுக்குத் திருவிருத்தம் 216.

உ

## எட்டாவது

# அக்கினிவண்ணச் சருக்கம்

கன்னல்வேலி நீர்வயற் காம்பிலித் தலத்தினான்
மன்னர்மேவு செல்வத்தான் மாறில்வேத வாணிக
னின்னல்தீர்க்கு மீகையா னியக்கர்வேந்த னென்னவே
பன்னரும் பெரும்பொருட் பழிப்பிலாம லீட்டுவான். (1)

தெண்டியென்னு நாமத்தான் சிறந்துவாழு மெல்லையில்
வண்டுகிண்டு கொண்டலோதி மனைவிதன் வயிற்றின்வாய்
கொண்டிடுங் கருப்பமாகக் கூறுமோகை கூரவே
திண்டிறற் படைத்தசீர்த் தீவணனு தித்தனன். (2)

மற்றையாண்டி னெல்லையில் மருவுமன்னன் போல்வனென்
றுற்றவ னொருத்தனு முதித்தன னிருவரும்
பெற்றதெண்டி நெஞ்சகம் பெறுங்களிப்பு றுத்தியே
கொற்றமன்னர் பாலரிற் குணங்கொள் விஞ்சை கற்றனர். (3)

விஞ்சைகற்ற விருவரும் விளங்குகாளை யாகுநாள்
மஞ்சையொத்த தாதையு மவிந்தவா னடைந்தனன்
நெஞ்சையுற்ற துன்பநோய் நிரம்பமண்ணில் வீழ்ந்தெழுந்
தெஞ்சலற் றிரங்கிமெய் யிளைப்புறப் புலம்பினார். (4)

கிளைஞர்வந்து தேற்றலுங் கிளர்ந்ததுன்ப நீங்கியே
களைகணான தாதைதன் கடன்கள்செய்து முற்றியே
வளைகடற் புவிக்குண்முந்து வளருமல்கும் வாணிபம்
விளைபொருட் குயிற்றியே விளங்கவீற் றிருந்தனர். (5)

வேறு.

எள்ளரு மங்கையர் மாமணம் வேட்டன ரின்புற்ற
வுள்ளமோ டேயவர் வாழ்வுறு நாளி லிடரெய்தக்
கள்ள மனக்கொடி யார்கல விச்செயல் கற்பித்தா
ரள்ளல் விழுங்கரி போலவர் பாலே யாழ்வுற்றார். (6)



கற்புடை மாத ரிடத்துறு மன்பது கைவிட்டா
ரற்புடை யோருறு திச்சொ லுரைப்பன வவைகொள்ளார்
பற்பல விச்சை பயிற்றிய தேசிகர் பாற்செல்லார்
நற்பொருள் கொள்நடை யாங்குல நீர்மையி னடையற்றார்.

பன்னிய வேத முதற்பெரு நூல்கள் பயன்றேரா
ரின்னிலை யேபிறர் சீசீ யெனும்பழி யிசைநாணார்
பொன்னினை வின்மொழி செய்கை நிறீஇ நகைவை புரிசேரிக்
கன்னிய ராகிய மாய்கையை யாவர் கடப்பாரே. (8)

நடரொடு பாணரே யாதியர் வந்து நயந்தாங்கே
மிடல்பட வாடலும் பாடலும் நாளும் விளைத்தெய்தி
யடல்விழி சேர்பொது மாதர்க ளம்மல ரடியாராம்
விடரவர் தம்மிடை நற்பொரு ளியாவு மிகக்கொண்டார். (9)

உருள்கவ றுதிய சூதினில் வல்லவ ருறவாய்வந்
திருள்புரி யத்தொழில் வென்றியில் வைத்தவு ளிசைவாலே
பொருள்பல கொண்டனர் நல்லவ ரோடும் பொருந்தாத
வருளறு மூடர் பெருந்தன மிப்படி யழியாதோ. (10)

நஞ்சுண லாமென நண்புறு தீவிடர் நடருள்ள
வஞ்சனை மாதர் வருத்துறு சூதினர் வடிவாய
வெஞ்சின ஞாளி தொடர்ந்து கடித்தலு மெலிவுற்றே
யஞ்சி யகன்றது செந்திரு வாகிய வணிமானே. (11)

ஓசை யுறுங்கடல் பெற்றமின் னேகலு முடன்மூத்தாள்
தேசக லும்படி வந்தன ளன்னெறி செறிவானோர்
மாசை யடைந்த பிணத்தி னருந்தசை வாங்கியபி
னாசை யகன்றொழி யுங்கழு காமென வயல்போனார். (12)

கரையறு மேரியி னீரென முற்பொருள் கடிதேகத்
தரையினி லியாரு மவர்க்கு வழங்கிலர் தளர்வுற்றார்
வரைபுறு மீம வனத்திடை கள்ளிகள் வாடுற்றால்
நுரைபயி லும்புனல் யாவ ரளிப்பவர் நுவல்வீரே. (13)

நீணிதி முற்கன வுற்றுணர் வாரென நிலையற்றா
ரூணு முடுக்கையு மற்றனர் வேற்றுமை யுருவானார்

மாணு மிருட்பொழு திற்கள வேகொடு வயிறுய
சாணும் வளர்த்தனர் நீள்வினை யாவர் தடுப்பாரே. (14)

பாவ நெறித்தொழி லிந்நிலை யேயவர் பயில்காலை
காவலர் கண்டு பிடித்தனர் மன்னவர் கடையுய்த்தார்
மேவுறு தண்டம் விளக்கவு மாய்ந்திது வேலைக்கே
தாவுறு வெஞ்சிறை சாலையில் வைக்க தளைத்தென்றான். (15)

அரச னுரைத்தலு மம்முறை வைத்தன ரமர்காலை
யிரைசிறி தற்றுளம் வாடினர் காப்பவ ரில்வேளை
புரைசெய் விலங்கு முறித்தில் விடுத்தயல் போகுஞ்சீ
ருரைசெய் தவத்தினர் நேரென வோடின ருயர்கானம். (16)

தூறடர் கானி லடைந்தனர் வேறொரு தொழில் செய்யா
ராறலை கள்வர்க ளாயினர் சேர்பவ ராரேனு
மாறது செய்து வளைந்து கொடும்படை வாளாலே
யூறடல் செய்து பறித்து நுகர்ந்தவ ணுறைநாளில். (17)

காமலி குண்டிகை தண்டு தருப்பை கவின்கொள்ள
வரமறை யோருரு வாகிய தவமெனும் வடிவாளன்
பரமன்வெண் ணீறணி மேனியன் மெய்ம்மொழி பகர்தான
விரத னெனும்பெய ரந்தண னவ்வழி மேவுற்றான். (18)

வேதிய னெய்தலும் வந்து பிடித்தனர் வினைசெய்வார்
நீதிய றிந்தவ னிப்பெருந் தீங்குகொல் நீர்செய்வீர்
பூதல மேல்நர ராதல் கிடைத்தனிர் பொறியற்றீர்
தீதிவை யாகமுன் னீரென வேயுரை செய்கின்றான். (19)

இப்படி யேகள வெய்தினி ரெட்டட னிருபானுந்
தப்பறு கோடிய தாகிர யத்திடை சார்வீர்பின்
றைப்பறு வேசரி காக முதற்படு மொருநூறு
செப்பிய சன்மமு மெய்து விரக்நெறி தீர்காலை. (20)

வேறு.

இழிகுல மருவிய கடையரா யெய்துவி ரெய்தினு மாடைபொன், மொழிதரு மனைபத மின்றியே முடுகிய பசியுட னெடியநாள், பழிதரு தொழில்பல புரிந்துடல் பற்றறு

காலையில் வேடராய், வழுவுறு புன்பவம் நூறுநீஇ மண் ணிடை மாய்குவி ருண்மையே. (21)

பின்பு பிறப்பி னிடும்பையே பெய்கல னுமுட லெய்துவீ, ரன்புறு சுற்றமு மைந்தரு மறவு மிருந்தலை வாரோர், முன்புகண் ணற்றவ ரெய்திறல் மொழிகுவர் நன்னெறி மூடர்க்கு, மின்ப முறுங்கதி யோதுவா ரென்பத னுலற மோதினோம். (22)

முற்பகல் வெய்ய வொருத்தர்பால் முன்னுற வேசெயி லன்னநோய், பிற்பக லேபெரி தாய்வரும் பின்ன ரகற்றவு மாகுமோ, மற்பயி லும்புய வீரர்நீர் மற்றினி யாவர் மொழிந்திட, ரற்புநும் பாலுள னென்றலு மன்னவன் முன்னரி தோதுவார். (23)

நான்மறை யாளநின் மெய்யினி னண்ணும்வெண் ணீறு மெய் நண்ணியும், நூன்முறை நின்மொழி கேட்டுமியா நுண்ணறி வெய்தின மென்றவன், கான்மலர் முன்னர்ப் பணிந்தனர் காணவொ ணுநெடுந் தீயர்க்கு, மேன்முறை யாளர் கண் ணோர்கண மேவிடில் நன்னெறி மேவுமே. (24)

வந்து பணிந்தெழு மக்கினி வண்ணனுந் தம்பியு மாலற, மூந்து சரித்திர மியாவையு முற்ற மொழிந்திட வேதிய, னிந்த வினைத்திற மியாவையு மிக்கண மேயறு மெய்தினுற், செந்தமி ழூட்டினி லோர்தலஞ் செப்புவ மென்றது செப்புவான். (25)

கோன்மதி யன்பதோ டாறெனுங் கோடி விளங்கிய தீர்த்தமு, மேன்மதி யாலினி தாடவே வெவ்வினை போக்கிய பொன்னியின், சேன்மதி மீனெதிர் தாவுறுந் தென்கரை யோசனை யொற்றையில், நூன்மதி யாளர் விரும்புமூர் நுவல்பெய ராதிர ளேச்சரம். (26)

மாயவ னெண்டிசை வானவர் மண்ணவர் தாம்பலர் வந்தவண், சால வருந்துயர் நீங்கியே தாவறு மின்ப மடைந்தனர், மேலவ ரோதிய வத்தல மேவி யயன்றட மாதியிற்,

சிலம் வரும்புன லாடுநீர் செல்லுழி யாமுமங் கெய்துவோம். (27)

என்று விளம்பி மறைப்பொரு ளியாவு முணர்ந்தவனேகின, னன்று கடுந்தொழில் நீங்கியே யக்கினி வண்ணனுந் தம்பியுந், துன்றிய பித்தொழிற் தாரெனத் தோமுறு மாயை யகன்றுமாக், கன்று நினைந்துபா லான்சொரி காவிரி காட்டி லணைந்தனர். (28)

எங்கணும் வானவ ராலய மெம்மருங் கும்மகச் சாலைகள், சங்கு நிரம்பு வரம்புநீர்ச் சாலிக ளெத்திசை யாவையும், பொங்கலர் வாழையுந் தாழையும் பூகமு மேபுறச் சோலைகள், தங்கி நிரம்புவர் வானவர் தந்திரு நாடெனவோதினர். (29)

மின்மணி மாமுடிச் சோழர்கோன் விண்ணினும் மண்ணினும் வாங்கிய், பன்மணி யூடு விளங்கிய பைம்பொனெடும்படி சேர்துறை, கன்மணி சேர்மதி லின்புறங் காயுதிருங்கமு குச்சிமேற், பொன்மணி மூதலை வீசிய பொன்னியின்னதி யாடினர். (30)

வேறு.

தென்புற மகன்று கன்னல் தெறித்துவீழ் முத்த ராசி
வன்புறப் பரல்சேர் பூங்கா வழிவெயி லறியார் போந்து
பொன்புறச்சாலியீட்டுப்பொற்புபொன்மலையென்றெண்ணி
மின்புற முகில்ப டுக்கு மேன்மைகள் ளாறு கண்டார். (31)

முத்தலை நீரில் வாழு மொய்யடைக் கயல்கள் மாவின்
கொத்தலை கனியைத் தாழ்ந்த கோட்டிடை யுண்ண வன்ன
நத்தலை வாவி மேவு நளினவள் ளப்பூர் தேனைத்
துய்த்திட மந்தி பாயுஞ் சோலைகள் பலவுங் கண்டார். (32)

ஒருவாற் கிழிக்க வொண்ணு வுறைமுகில் கிழிந்து தேயத்
தருவறு மலர்த்தேன் சிந்தத் தடங்கயற் கண்ணி மைத்து
வெருவரா வமரர் மாதர் மெல்விர னெரித்தொ துங்கப்
பருவரால் வாளை பாயும் பனித்தடம் பலவுங் கண்டார். (33)



வல்லெனப் பணைத்த கொங்கைக் கடைசியர் மருதம் பாடி
யொல்லென நட்ட செய்யி னுறுகதிர் போர டித்து
வில்லெறி கமல முற்றும் விரிந்தகன் முத்துந் தூற்றிக்
கல்லெனக்கழித்தசெந்நெற்களங்கள்பற்பலவுங்கண்டார். (34)

ஆதவ னுதயஞ் செய்ய வாழநீர் மங்கை யாடன்
றாதவிழ் வதன மன்ன தாமரை விழியா நீலங்
காதமர் வள்ளை கண்டக் கவின்வளை யென்ப வற்றான்
மாதர்மென் வடிவங் காட்டும் வாவிகள் பலவுங் கண்டார்.

ஈறிபசுஞ் சாறு முற்று மிடந்தொறுந் தெறிப்ப வாட்டிப்
பிறிதரு சாற்றை மட்ட பெரும்புகை திரண்ட காவின்
மறிவிழி யமரர் மாதர் மணிமிட றெனப்பொன் பூட்டுஞ்
செறிபசுங் கமுகந் தாற்றிற் றேனிறால் பலவுங் கண்டார்.

கோழரை வாழைச் செம்பொற் கொடுங்கனி கிள்ளை யுண்ண
வீழருந் தேனை வானின் விரிமழை யென்ன வஞ்சி
தாழக டணைத்த பிள்ளை தன்னொடு மிகுந்த மந்தி
தாழையின் மடல்க விழ்த்தே சரேலெனப் போதல் கண்டார். (37)

கீதமு மடவார் காலிற் கிண்கிணி சிலம்புங் கற்றோர்
வாதமும் நல்லோர் தேவை வழுத்தலும் மாவுந் தேருங்
காதமு மணக்கு மாலை மணிகளுங் கணக்கில் நாலும்
வேதமு முழக்க றாத வீதிகள் பலவுங் கண்டார். (38)

நஞ்சொடு கூற்றை வென்று நலிவுசெய் விழிகள் கற்றோர்
நெஞ்சையுங் கிழித்து லாவ நீணிலத் திருந்த மாதர்
விஞ்சையர் வியப்பப் பாடும் வீணைகேட் டாங்கு நின்ற
மஞ்ஞையின்வண்ணமாகுமணித்திரள்மாடங்கண்டார். (39)

ஆடக மலையுஞ் சோதி யவிருமந் தாரமும் வெள்ளி
நீடக வெற்புந் தேவர் நிறைபெருங் கயிலை தானுஞ்
சேடக வான்மேல் வைப்புஞ் சேர்ந்ததாந் திருநள் ளாற்றி
னாடக மாடுந் தேவ நாயகன் கோயில் கண்டார். (40)

முன்னிவர்க் குறுதி கூறு முனிவனு மாங்கே யெய்தச்
சென்னியிலவன்றாள்சேர்த்திச்செறிதுதிபகர்ந்தானன்னோன்

மன்னிய தீர்த்த மூன்றும் மற்றுள தடமு மாட்டப்
பின்னிவ ரவாவா னுடிப் பிறப்பிலான் கோயில் புக்கார். (41)

அங்கவ ரிறைஞ்சிப் பாவத் தழுந்திடா தெம்மை யாண்ட
சங்கர போற்றி யெல்லாச் சமையமு மாவாய் போற்றி
பங்கயற் கரியாய் போற்றி பாடலுக் கெளியாய் போற்றி
செங்கண்வெள் விடையாய் போற்றி திருநள்ளா றுடையாய்போற்றி.

காவிலா றமுதே போற்றி நாடகம் பயில்வாய் போற்றி
ஆவியுள் ளுணர்வே போற்றி யாயிர முடியாய் போற்றி
தாவில்சீர் விடங்கா போற்றி தருப்பையா ரணியாய் போற்றி
காவியங் கண்ணி பாகக் கருணைவா ரிதியே போற்றி. (43)

என்றுகை குவித்துள் ளேகி யெம்பெரு மானைக் கண்டு
துன்றுகண் ணருவி பாயத் துளங்கியே யவச மாகி
நின்றுபின் றெளிந்து வாங்கு நீறணிந் தந்த ணன்பின்
சென்றுமா தனிகள் முற்றுஞ் சேவித்து வலம்பு ரிந்தார். (44)

அம்முறை மாத மூன்றங் கடைந்தன ரயன்வி திக்க
தம்முறைக் காலம் வந்து சார்தலுந் தென்பால் வீதிச்
செம்முறை மடத்திற் காயந் திர்ந்தனர் திருங் காலைக்
கம்முறை கரந்தான் வந்து காதில்மந் திரமு ரைத்தான். (45)

ஆதியான் போல மேனி யடைந்துவா னூர்தி யூர்ந்து
கோதறு சிவபு ரத்திற் குடிபுக்கா ரென்று சூத
னோதலு மகிழ்ந்து தீர்த்த மூர்ப்பெருந் தன்மை யெல்லாம்
வேதியர் விளங்கக் கூற வேண்டுமென் றுரைப்பச் சொல்வான்.

திருச்சிற்றம்பலம்.

அக்கினிவண்ணச் சருக்கம் முற்றிற்று.

ஆகச் சருக்கம் எட்டுக்குத் திருவிருத்தம் 262.

ஒன்பதாவது
# தீர்த்தச் சருக்கம்.

இந்திரன் முதலா மெண்ம ரிலிங்கமுந் தீர்த்தந் தானுந்
தந்திசை யிடத்த மைத்தார் சதுர்முக னிலிங்கந் தீர்த்த
முந்திய கடவுட் கீழ்பால் மொழியுமம் பிகைது ரத்திற்
சுந்தர மாவ குத்தான் சுராசுரர் வணங்கி யேத்த. (1)

செங்கண்மால் வன்னி திக்கிற் சிவலிங்கம் வகுத்தான் றென்பாற்
றங்குகா சிபனி லிங்கந் தாபித்தான் வாயு திக்கிற்
றுங்கமா நளனன் றூகச் சொல்லருங் கூபந் தொட்டே
யங்கணுந் தாத்தி லிங்க மழகுற வமைத்தா னன்றே. (2)

அகத்திய னுருசி மன்ன னத்திசை யிலிங்கங் கண்டார்
மிருத்தசீர் வடக்கி லிங்கம் விசையனுன் றமைத்தான் போசன்
நகப்புயப் பெரும்பாஞ் சால னவினும்ஈ சான திக்கில்
வகுத்தன ரிலிங்க மெல்லா மன்னுபத் துடனே டேழ.

வாணிதென் புறத்து மன்ன வடபுறந் தொடர்ந்து மேற்குங்
காணுற வகுத்த தீர்த்த மிரண்டெனக் கருதி முன்சொல்
பாணிசேர் தீர்த்த மெல்லாம் பத்துட னொருமூன் றுகுஞ்
சேணிலப் புனல்க ரத்துத் தீண்டினும் பாவம் போமால். (4)

சொல்லிய பிரம தீர்த்தந் தோய்ந்திடும் பிரம மெய்தும்
வில்வினு யிற்றில் மூழ்கில் வெம்முயல் கன்ம முன்னுப்
புல்லிய பிணிக ளெல்லாம் பொங்கிய காட்டுத் தீமேல்
மெல்லிய பஞ்சி யென்ன வக்கணம் விளிந்து போமே. (5)

வேறு.

மேதி னிக்கு விபரீத மெய்துநாள்
சீத வப்புனல் செம்மை நிறம்படும்
ஏத மொவ்வொரு திங்களி னெய்துமுன்
நாதன் பூசை மிகச்செயி னன்றரோ. (6)

தாம ரைத்தா ளத்தொளி தங்கிய
காமர் வாணி கயத்தினி லாடினு

லேம வானத் திறங்கு மழுதென
ஆம ருங்கவி பாடுவ ருண்மையே. (7)

மின்னு நூபுர வாணி விரிதடந்
துன்னு நீரிடைத் தோய்ந்து மருந்தியு
மன்னு மப்பதி யோர்கலை வல்லர்தா
மென்னு மேன்மை யிசைக்கவும் வேண்டுமோ. (8)

ஓதி மத்தட மாடின ரொப்பிலா
நாதன் போலுரு வெய்துவர் நற்பசு
வேத முற்ற கொலைக ளியற்றிய
பாத கர்க்கு மினிமை பயக்குமே. (9)

சிங்கத் திங்களிற் றிங்கள் நிறைந்தநா
ளங்க ணத்தட மாடி யகத்தியன்
றங்க லிங்கந் தொழுபவ ரியாவரும்
பங்க நீங்கிப் பரகதி சேர்வரே. (10)

அகத்தி யன்சன காதிய ரியாவரு
மகத்த சாலையின் வைகுவ ரக்கரை
தகப்ப டும்பரத் தன்றித் தவத்தினீ
ரிகத்தி னிற்பல னியாவையு நல்குமே. (11)

எண்ணு மாதப் பிறப்புக ளியாவினு
மண்ண லியானை யரச னளன்றடந்
தண்ணந் தீம்புன லாடினர் சங்கரன்
வண்ண மெய்துவ ரிம்மையும் வாய்க்குமே. (12)

காவல் வேனளன் கண்ணுதற் சூலத்தை
யாவ லாற்கொணர்ந் தேவ வதுதருந்
தேவ கங்கைச் செழும்புனற் பொங்குபூங்
கூவல் காணிலெக் குற்றமு நீங்குமே. (13)

ஈரு வாழுத லெத்தினத் தும்பிராற்
கார வாட்டி னரனுரு வெய்துவார்
தீர நற்கொண்ட யோமஞ் செபமெலாங்
கூர வொன்றனந் தம்பலன் கூட்டுமே. (14)



தீய காலையிற் சேரும் பிறநிற
மேய செந்து வெழுமெழின் மற்றதற்
காய சாந்திசெய் தாட்டுக வெம்பிராற்
கேய தில்லெனின் மன்னர்க் கிடருறும். (15)

மொழியுங் கூவலை முன்னினும் பார்க்கினுங்
கழியு மெய்ப்பிணி யுந்தரு நற்கதி
வழியு மப்புனல் மண்ணவ ராடினாற்
பழியு நீங்கலர் பாவமு மெய்துவார். (16)

வச்சி ரன்றட மாதிய வான்றட
நச்சி யாவர் நயந்தினி தாடினு
மூச்சி ரப்படை யான்முடி யாப்பத
மச்ச மற்றுறை யத்தரு மந்தநீர். (17)

பிரம னாதியர் பெட்டோ டமைத்தசீர்ப்
பரம லிங்கம் பணியினும் பார்க்கினுங்
காமு கிழ்ப்பினுங் காணினுங் கேட்கினும்
வரம ளிக்குங் கருத்தின் வழியினே. (18)

கன்னித் திங்கள் பிதிர்கணற் காலமா
மன்ன காலத்தில் முத்தட மாடியே
நன்னர் தான மியன்றன நல்கினாற்
பின்னர் தங்குலம் பெட்பொடும் வீறுமே. (19)

வந்த மேடமுன் மாதப் பிறப்பினு
நந்தி மாகண நாதனன் னாளினு
முந்து மீருவா வாதியு முத்தடத்
தந்த நீர்பரந் தாடுத னன்றரோ. (20)

### வேறு.

ஐந்து கொடும்பா தகம்புரிந்தோ ரறத்தைக் காட்டித்
தாமுண்பார், தந்தை தாய்புத் திரர்பசிப்பத் தாமே யுண்
ணுஞ் சமக்காள, ரெந்தை பெருமான் றிருப்பணிக்கு
மிடல்பூ சைக்கும் பழுதிழைப்பார், முந்து மறையோர் நில
னாதி மொழியும் பொருள்கொண் முழுமூர்க்கர். (21)

ஒருவன் செய்த நன்றிகொன்று றுறவு போன்றுட்
பகையாவார், வெருவந் தமர்க்கே தமைப்புரந்த வேந்தை
விடுத்துப் புறங்கொடுப்பார், கருவங் கழிப்பார் பசுக்காவார்
கன்றுக் கூட்டார் கறந்துண்பார், தருவ மென்று கடன்
கொண்டு தவறிக் கூறித் தாராதார். (22)

ஒழுகு செந்தீப் பாவைபுணர்ப் புறுவ மென்று வொ
ருவன்மனை, யழகு நோக்கித் தோய்ந்துழல்வா ரளிப்ப மெ
னச்சொற் றளியாதார், குழவ மகவை வதைபுரிவார் கூடாச்
சாட்சி யுரைத்துநிற்பார், கழுகு போல விடக்குண்பார்
கல்லாக் கல்வி பயின்றிடுவார். (23)

தமக்கு நன்னூற் பொருளுரைப்போர் தம்மைப்
பின்பு பழித்துரைப்பார், நமக்கோப் பொருவ ரில்லையென
நடலை வாழ்விற் செருக்குற்றார், சுமக்கும் பணிமுன் னாட்
பணித்துத் தளங்கக் கொண்டு கூலிகொடா, தமர்க்குள் வஞ்
சம் புரிந்துகொல்வா ரற்றார்க் குண்டி யருளாதார். (24)

தண்ணீர் சோறு நீறுலிங்கந் தக்க வக்க மணிவிற்
பார், கண்ணீர் சோர வழும்பிறர்தங் கையிற் பொருளைக்
கவர்கிற்போ, ருண்ணீ றுறல் குளனிகட் கூறு விளைப்பா
ரப்பாவ, மண்ணீ ரில்லை யெனவேண்டும் வாறே புரியு மதி
யில்லார். (25)

குடிகள் முறையோ வெனப்புலம்பக் கொடுங்கோல்
புரிவார் தண்டங்கள், நெடிய மனுநூன் முறைபுரியார் நில
த்தைத் தம்வி டெனக்காவார், கடிய மனையி லெரியிடுவார்
கடையர் மடவார் நலந்துய்ப்பார், படியிற் பங்கு வியன்
கொள்வார் பழித்துத் திரியும் பயனற்றார். (26)

நாழி குறைப்பார் நிறையில்வஞ்ச கடையே புரிவார்
கவில்வழக்கை, யூழி யுரையா ரோரவழக் குரைப்பார் தே
வர்க் குறைவிடமாம், வாழி யரசு முதலாம்வாழ் மரங்கள்
குறைப்பார் மனமறுகி, யாழி யுலகோ ரிடுக்கணுற வறஞ்
செய் வார்போல் மறஞ்செய்வார். (27)



தேவர்க் கெனவே நேர்ந்துவைத்துத் திரும்ப வந்தப்
பொருள்கொள்வார், கோயிற் சனத்தை யேவல்கொள்வார்
குடைவெண் கவரி சிவிகைமுதல், மேவப் படும்பல் கருவி
கூடம் வீட்டிற் பணிக்குத் தாங்கொள்வார், பாவத் துறு
மென் னுன்குநுற்றம் பரமன் கோயி லிடைப்புரிவார். (28)

உடலம் வீட்டி யூண்விற்பா ருற்றோர் திரும்பாச் சூதி
ழைப்பார், மடல்சேர் நற்பூ நல்லுணவு வானோர்க் களியார்
தான்விழைவார், கடல்சூ ழுலகி லடைக்கலங்கள் காவார்
மனைவி மக்கள்முதல், விடலா காரை நிமித்தமின்றி விடுவா
ரீனத் தொழில்விளைப்பார். (29)

தன்னை நம்பி யொருபொருட்குத் தலைமை செய்தான்
றனக்குவஞ்சம், பின்னர் புரியுந் தீயோர்கள் பெற்ற பொ
ருளான் றெனவுவப்பார், முன்ன மவன்கைக் கொடுத்தவன்
போல் மோகத் திகழு மிரவாளர், பொன்னி னிகராய்த் தம்
பதியைப் போற்றி வணங்காப் புன்கொடியார். (30)

வேறு மனந்தம் பேதமுறும் வெய்ய பவங்கள் புரிந்
தோர்கள், சீறு மறலி பாசத்தாற் சேர்த்துக் கொடுபோய்க்
கொலைபுரியக், கூறு மிருப துடனெட்டாங் கொடிய நரகிற்
குடியிருந்தே, யேறு நெடுங்கா லத்துமவ ரிழிவும் பிணியு
நேர்ந்தெழுவார். (31)

இவ்வா றுள்ள வதிபாவ மிழைத்து ளோரும் நல்வினை
யாற், செவ்வான் சடையான் நள்ளாற்றிற் சேர்ந்து மூன்று
திருத்தடத்துஞ், சைவா கமநூ லுரைத்தநான் மூழ்கித்
தானஞ் சிறிதளித்துக், கைமான் மழுவே னடிபணியிற்
கடவுள் வடிவம் பெறுவாரே. (32)

எல்லா மாதப் பிறப்பதிலு மிரண்டு மாத மிசைநா
ளும், வில்லார் மதியிற் காலையினும் வெய்யோன் மதிபாம்
புறும்பொழுதுஞ், சொல்லா றெட்டாந் திதிமுதலாய்ச்
சொல்லு மேன்மைப் போதிடத்து, மல்லார் களத்தா ரபி
டேக மாட்டி லவர்தா மாவாரே. (33)

ஊனே யுயிரே யுயிர்க்குணவே யொன்றே பலவே யொளிபவளக், கானே யோரெண் குணக்குன்றே கதியே நிதியே கற்பகமே, வானே நிலனே நிறைபொருளே மதியே கருணை வாரிதியே, தேனே கனியே தருப்பைவனத் தேவே தெய்வ சிகாமணியே. (34)

உள்ளாய்ப் புறம்பாய்த் திகழ்ஞான வொளியே வெளியே யுணக்குறையாத், தெள்ளா ரமுதே சிவக்கொழுந்தே தேவர்க் கரசே திருநீங்கா, வள்ளால் வேதா கமப்பொருளே மணியே முத்தே வச்சிரமே, நள்ளா றுடையா யெனக்கூறி நாத னவன்முன் நண்ணியுமே. (35)

பாராய்க் கனலாய் நீராகிப் பகருங் காலாய் வானாகிச், சீரார் தருப்பை வனமூலஞ் சிறந்த மூலையாய்ச் செழுங் கனியாய், வேராய் வித்தா யடங்காத வெவ்வே றுருவா யருவாகிப், பேரா யென்று வினிலூறும் பெம்மா னெனவும் பிறப்பறுமே. (36)

வேறு.

இடப நிறைந்த மதிற்பெரி தெங்கும் விளங்குங் கோபுரம், விடமமர் கண்டனைக் கைதொழும் வித்தகர் நற் கதி மேவுவார், வடநிழல் வைகிய தேவன்முன் வஞ்சமற் றஞ்செழுத் தோதினூற், கடவுதென் றென்றொரு கோடிய கண்ணிய யாவையு நண்ணுவார். (37)

ஆய்மலர்த் தும்பையின் மாலிகை யண்ணற்கு நண்பகற் சாத்தினூற், றாய்மல ரொன்றிற்குக் கோடியாஞ் சொல்வருடஞ்சிவ லோகமே, வேய்மலர்ப் பந்தருள் வாழ்குவார் வேறுள மாலைக்கு மன்னதே, தீமலர் தூபங்கள் செய்த நாட் சேர்த்துவிப் பார்கதி சேர்வரே. (38)

காமரு பூந்துகிற் சங்கரன் கங்குலிற் சாத்தினர்க் கோரிழைக், காமொரு கோடி யுகஞ்சிவ னப்பத மேதரு மக்கமுந், தாம முறுந்துகிர் முத்தமுஞ் சாத்திவை காசியிற் பூரணை, யேம முறும்படி கைதொழி னிம்மையு மும்மையு மெய்துவார். (39)



ஆனியிற் பூரணை பைங்கரும் பாடிய சாறு கலங்கொடு, கூனிய திங்களங் கண்ணியெங் கோதறு தேறலுக் காட்டினூல், மேனியின் முன்ன ரடைந்தொரு மெய்பெறத் தோன்றுமவ் வேளையில், மானிடர். யாவர் வணங்கினும் வானவ ராகுவ ருண்மையே. (40)

கொந்தவி ழுங்குழல் மாதரைக் கோள்கள வென்றிவை போல்வதா, மெந்த விதத்தினொன் றுயினு மெண்ணிமுன் னொளொரு நாளவ்வூர், வந்திருக் கப்பெறி னியாவரும் வான்பத மெய்துவர் கோயிலு, ளைந்து வலம்புரி வார்தமக் கைந்து பெரும்பல னேருமே. (41)

ஏறு பொறித்து விடின்மயிர்க் கெண்ணுமோர் கோடி யுகஞ்சிவன் வீறு பதத்தினின் மேவுவார் மேய்பசு விற்குமவ் வண்ணமே யாறு தரித்தநள் ளாறனுக் காம்பணி யெய்துவை யாயினப் பேறு பெறப்புரி வார்புகழ் பேசவவ் வாசுகி நாணுமே. (42)

பாடக மெல்லடிப் பாகனூர் பவனி விழாவுள்ள நாளெலா மாடக வீதியிற் சோறிடு மன்பர் கதித்திற மோதலென் பீடக லாவவி யொன்றிற்கே பேறுகந் தாமொரு கோடியே நாடக மாடுமெம் மான்பதம் நண்ணுவ ருண்மையி துண்மையே.

என்று சுருக்கி முடித்துமே லின்ப நிறைந்துள சூதனை குன்றுத லின்றி விளங்கநீ கூறினை யென்று துதித்தரோ துன்று மயிர்ப்புள கத்தொடுஞ் சோதிநள் ளாற்றினை நோக்கியே யன்றுகரங்கள்குவித்தெழுந் தாடினர் பாடின ரந்தணர். (44)

சீரெழுத் திற்பிழை யின்றியே தீட்டினர் கற்றவர் செப்புவா, ரேரெழுத் தக்குமை சாத்துவா ரின்ப முறச்செவிக் கூட்டுவா, ராரெழுத் தைந்துணின் றுடிய வாதிநள் ளாற்றுப் புராணநூ, லோரெழுத் திற்கொரு கோடிநா ளொப்பில் சிவன்பதி சேர்வரே. (45)

திருச்சிற்றம்பலம்.

தீர்த்தச் சருக்கம் முற்றிற்று.

ஆகச் சருக்கம் ஒன்பதுக்குத் திருவிருத்தம் 307.

திருநள்ளாற்றுப் புராணம் முற்றிற்று.

உ


சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருநள்ளாற்றுப் புராணச் சுருக்கம்

## இலிங்கோற்பவச் சருக்கம்.

கடல் புடைபரந்த நெடிய இந்நிலவுலகத்தைப்படைத்த பிரம்மதேவனை மாதவக் குமாரர்களனைவரும் வந்தித்து, வாணி மணவாளா! சரணஞ் சரணம்! யாங்களோர் மகமியற்றுங் கருத்துடன் நின்றிருவடி யடைந்தோம். அதற்கிடையூறின்றி நிறைவேறுமாறு ஏற்ற ஸ்தலமொன்று ஈதெனத்திருவாய்மலர்தர வேண்டுமென யாசித்தனர். அதுபோது மலர் மகன், முனிவோர்க்காசிகூறி, இருடிகாள்! யாகத்தினுக் கேற்றபடி எண்ணியவாறு புண்ணியபலனைத் திண்ணமாய ளிப்பது மண்ணுலகில் நைமிசாரணியமெனும் புண்ணிய ஸ்தலமொன்றுமேயன்றி என்படைப்பிற் பிறிதில்லையெனப் புகன்றான். அம்மொழியேற்ற சௌனகாதியர், மலர்மகன் மலரடிவணங்கி விடைபெற்று, அத்தலமருவி வேதவிதி முறைஞர் நெடும்பகலிடையறாது வேள்வியை மந்திரபூர்வோக்தமாக நடாத்தியும் இடையிடையே பதினெண் புராண படனங்களைச் சூதமுனிவனால் சிரவணஞ்செய்தும் நீர்வள நிலவளம் பொருந்திய நிலவுலகில் இத்திருப்பதியே பிரம்மபதமாகிய சத்தியவுலகமாகுமெனக் கருதிக் களித்திருந்தார்கள். ஓர்நாள் அனைவரும் சூதமுனிவரை நோக்கி ஆரியோத்தம! தருப்பாரணிய ஸ்தல விசேடத்தை முன்னமே கேட்டிருப்பினும் இன்னமும் அதன்பெற்றியைக் கேட்கவிரும்பும் எங்களவாவைப் பூர்த்திசெய்விக்க வேண்டுமெனப் பிரார்த்திக்க, புராணிகர், திருவுளமிரங்கி குருவையும் அரனையும் வணங்கி அவசமுற்றுரைக்க ஆரம்பித்தனர். கேளுமுனிவர்காள்! அண்டாண்டங்களையு முன்



டாக்கின புண்டரீகன் பண்டோர்காலம் மண்டலத்தைச் சுற்றிவரும்போது தருப்பாரணியத் துள்ளிருந்த அருவுருவாஞ் சிவலிங்கத்தைக் கண்ணுற்றுப் பரவசத்தனாய், தலைமாலையையும் அலைமகளையுமணிந்த சங்கரன்றிருவடி தங்கியவுளத்தனாய் சிவானந்தவாரியுட்டிளைத்து சிரமேற் கரங்குவித்து வலம் வந்து விழுந்தெழுந்து வேதசார சகஸ்திர நாமங்களால் அர்ச்சித்து படைப்பினாலுற்ற மனக்குறை யாவுமொருங்கே தீர்ந்த பின்னர், ஆகமவிதி வழுவாது நவரத்தின கசிதமான தூபிகளமைந்த ஆலயத்தை மானசமாகவும் காத்துறு பருத்த பிர்ம்மதண்டத்தாற் பிர்ம்மதீர்த்தத்தைக் காயகமாகவும் சிருஷ்டித்து வதிந்தான். அப்போது இந்திரன் முதலியவர்களும் அவரவர் திசையில் அவரவர் நாமம் விளங்குமாறு தடாகமும் இலிங்கமுமியற்றித் தனித்தனி வேண்டும்வரங்களைப்பெற்று மேன்மையடைந்ததன்றி, அயனரி யுருத்திரன் முதலானவர்களும் இச்சுயம்பு லிங்கமூர்த்தத்தை வழிபட்டு தத்தம்பதமடைந்தாரெனில், சகஸ்திர நாவைப் படைத்த சேடனாலும் இத்தலப்பெருமையினை அளந்துரைத்திடவுங்கூடுமோ? கேளுமுனிவர்களே! முதல் யுகத்தில் ஆதிபுரியெனவும், இரண்டாம் யுகத்தில் தருப்பாரணியமெனவும், மூன்றாம் யுகத்தில் விடங்கபுரமெனவும், நான்காம் யுகத்தில் நளேச்சுரமெனவும் வேதமுடிவாலும் அறிதற்கிலாதெழுந்தருளிய திருப்பதிக்கு உரைக்கும் பேருக்கு அளவுமுண்டோ? இத்தகைய பெருமைவாய்ந்த திருநள்ளாறெனுந் திவ்ய ஸ்தலத்தைச்சுற்றி, ஐந்துநாழிகைவழியளவில் எங்கிருந்தபோதினும் சரவசர உயிர்களியாவும் பிறவிப்பிணி தீர்ந்துய்ந்தனவே யாகுமென்றும், மண்ணுலகிற் சிவபுரம் திருநள்ளாறேயென்றும் சூதபுராணிகர் சொலக்கேட்டுப், பரவசமடைந்த முனிவர்கள் வணங்கி, ஆரிய! அருமையினும் அருமைவாய்ந்த இத்தலத்தை யடைந்து இன்னு மியாவர்கள் நற்பதமடைந்தார்களோ. அதனையும் திருவுளமகிழ்ந் தருளவேண்டுமெனக் கேட்கப் பின்வருங் காதையினைப் பேசத்தொடங்கினர் சூதபுராணிகர்.

இலிங்கோற்பவச் சருக்கம் முற்றிற்று.

## கலிங்காதிபதிச் சருக்கம்.

திருவளரும் கலிங்கதேசத்தைச் செங்கோல்கோணாது அரசுரிமை நடாத்திவரும் அரசன், ஓர்நாள் தம் வருணாச்சிரமத்திற்கேற்ப யாகாதி கருமங்களிற் புத்திபோக்கி மதியூக மந்திரிகளால் ஆராய்ந்தறிந்து அஸ்வமேதயாகமொன்றியற்றக் கருதி, மற்றுள மன்னர் மாதவர் வேதவேதியர்களுக்குத் தூதனுப்பி வரித்தபோது, தவத்தின் முதிர்ந்த பார்க்கனெனும் ஓரந்தணர்வந்து அரண்மனைவாயிலையடுத்து, ஓ! வாயிற்காப்போய்! நாங்காவலர்க்கென்வரவை யறிவிப்பாயென்று ஆக்கியாபித்தார். உடனே அவன் அரசனுக்கறிவிக்க, அரசன், காலபேதத்தால் ஞாபகமிலாதிருக்க, வந்த வேதியர், முகூர்த்தகால மெதிர்நோக்கியும் மன்னவன் வழிபட்டழையாததால் வெகுண்டு நம்மை யழைப்பித்தும் மதியாமற் றனமதங்கொண்ட தார்வேந்தன் மதகரியுருக்கொண்டு மனைவி மைந்தனுடன் கானிற் சஞ்சரிக்கக் கடவனெனச் சபித்துச் சென்றனர். கேளும் முனிவர்களே! வரும் விதிவழித் தங்காதாதலால் உடனே அந்தப்புரத்திருந்த அரசியும், மந்திரிகள்சூழ விந்தையோடிருந்த அரசனும் மகனும் தந்தியுருக்கொண்டு கண்டவர் மருண்டு நடுங்கக் கானுழிச்சென்று திரிந்தலையுங்காலத்து, சிலநாட் பின்னர் அக்கானகத்தின் மார்க்கமாக நாரதர் வந்தார். அவரைக் கண்ட இம்மதகயங்கள் வெருட்டவும், அதற்கவரஞ்சாது கருணையுடன் நோக்கி, இவர்களது பூர்வோத்தரமுணர்ந்து சாயையொத் தருகினின்ற மாணவனால் அக்கரிகளைக் கொண்டுவரச்செய்து மன்னனாகிய மதகரிக்குப் பூர்வஞாபகம் வரும்படி திருவுளத்திற் சிந்தித்தார். உடனே மதயானை வேகமடங்கி துதிக்கையைச் சிரமேற்றூக்கி வந்தனை வழிபாடுகள் செய்யுங் குறிப்பைக் காட்டவும், மதகரியான மன்னனே! உன் நிலையெலாம் அறிவேன்! இத்தீயவினையுனையடுத்தது நினதுபுத்தி பூர்வகத்தால் அடைந்ததாகும். "முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்" என்றறியாது சென்மாந்தரத்தில் வேதியனிழைத்த வேள்வியைத்தவிர்த்த




தீவினையானது இப்போதுனது மகத்தையும் அகத்தையும் பெற்ற அரசுரிமையுமகற்றி, மிருக தேகத்தில் மெலிந்திடப் புரிந்தது. ஊழ்வலிமறுப்ப தெவராலாகும்? ஒள்ளிய வேற்படைதாங்கும் வேந்தனே! இந்த பிர்ம்மசாபமகன்று நீ யெண்ணியவாறு அஸ்வமேதயாகம் புரிந்து அதன் பலனடையவேண்டுமானால், நீர்வளமிகும் பொன்னிநதியாற் சிறப்புற்ற சோழநாட்டில் தருப்பாரணியத்தலத்தையடைக. அங்கு பிர்ம்மதண்டத்தாற்பிறப்பித்த தடாகமொன்றுளது; அத்தீர்த்தோதகத் திவலை யுன்மேற்படில் இச்சாபமுடனே அகன்றிடும். செல்வையேல் மாகமாசம் பௌர்ணமியில் நாமுமங்கு வருவோம். நின் பிடியுடனும் கன்றுடனும் வருவாயென்றருள்புரிந் தகன்றனர். அப்பால் யானை யுருக்கொண்ட கலிங்கனுக்கு நல்லறிவுச் சுடர்துலங்க, அவன் அம்முனிவ னடிதொழுது காடுமலைகளெல்லாங் கடந்து அதே தியானமாக மாசிமக விசேஷதினத்தில் திருநள்ளாறெனுந் திவ்ய திருப்பதியையடைந்து பிர்ம்ம தீர்த்தத் தருகுநின்றான். அப்போது அன்றதிற்படிந்து கரையிற் செல்வோர் கேசநுனியிற் சிந்தும் புனற்றிவலை இவர்கள் மேற் றெறித்தவுடனே அவரவர் சுயதேகமாகிய மானுட தேகம்பெற்று மூவரும் அத்திவ்ய தீர்த்தமாடினார்கள். அதனைக்கண்ட சுராசுரர் முதலியவர்களனைவரும் எந்தையார் திருவருளைச் சிந்தித்து பரவசமடைந்தனர். விலையில் வல்ல நாரதமுனிவரும் மறையவர்குழாத்துடன் அங்கவர் முன்றோன்றினர். உடனே அரசன், மக்கள் மனைவியுடன் திருவடியில் முடிசாத்திவணங்க, முனிவராசிகூறி, அனைவரையுமழைத்துக்கொண்டு திங்கள் செஞ்சடையார் திருச்சந்நிதியடைந்து சிவதெரிசனஞ் செய்வித்து மனுநெறி கோணா மன்னனே! இத்தலத்து கெற்பவாச நிருத்தியெனப் பணித்து, தம் பதியடையப்பெற்றனர். பிறகு, கலிங்காதிபதியை அடுத்த கலி யகன்றதைக் கேள்வியுற்ற அமைச்சர் முதலிய அனைவருங் குறைவிலா நிதிக்குவியலைக் குப்பல் குப்பலாய்க் கொணர்ந்து கொடுத்து நல்விழாவயர்த்துக் களித்து அளவிறந்த தானதருமங்களைச்செய்து பந்துத்

திங்களைப் போக்கிச் சதுரங்கசேனைகள் புடைசூழ ஆலவட்டந் தாலவட்டமிரட்டத் தனது கலிங்க நாடடைந்து முன்குறித்த யாகாதி கருமங்களைப் பூர்த்திசெய்து முடிவிற் சிவசாயுச்சிய மடைந்தான். கேளும்முனிவர்களே! எனச் சூதருரைக்க, சௌனகர் சிரக்கம்பங் கரக்கம்பஞ்செய்து அவாமிகுத்து இன்னும் இப்பதியடைந்துய்ந்தவர் சரிதம் கேட்க இச்சிக்கின்றோம் அருள்கவெனச் சூதபுராணிகர் உரைக்கலுற்றார்.

கலிங்காதிபதிச்சருக்கம் முற்றிற்று.

## நளபதிச் சருக்கம்.

சீர்வளமிகுத்த நிடதநாடாளும் நடுநிலைவழுவா நளபதியெனுஞ் சக்கிரவர்த்தி மன்னுயிரியாவுந் தன்னுயிரெனப் பாதுகாத்து உலகாண்டுவருநாளில், ஒருநாள் வசந்த காலத்தின் மாலைப்பொழுதிற் சிங்காரவனச் சிறப்பினை நோக்கி யுலாவினன். அப்போது அம்சக்கூட்டங்களைக் கண்டு அதிசயித்து அதிலொன்றைக் கைப்பற்றவெண்ணி கமலமலரினுறையும் அரசவன்னத்தைப் பிடித்தான். உடனே மற்றவையாவுஞ் சிறகையடித்துக்கொண்டு பறந்தோடியதையும், கைப்பற்றிய பறவையின் அழுகுகுன்றி மூர்ச்சையடைந்து இருப்பதையுங்கண்ட அரசன், ஜீவகாருண்ணியப் பெருக்கால் மனங்கசிந்துருகி, அன்னத்தின் பயத்தைப் போக்கினன். அவ்வன்னமும் பிராணபயத்தைப் போக்கிக் கொண்டு விதர்ப்பநாடாளுமிராசபுத்திரியின் வனப்பைச் சிறப்பித்து சந்திரகுலத்தோன்றலே! அப்பொற்பாவை தோட்சேராவிடில் உன் அருஞ்செல்வத்தினாலாய பயனென்ன? என்று சொல்லி அச்சக்கிரவர்த்தியின் செங்கையினின்றும் ஆகாயத்திற்கிளம்பித் தன்னினத்துடன் விரவி விதர்ப்பநாடணுகி, தமையந்தியின் முன்சென்று நடந்து அவள் தன்னைத் தொடர்ந்துவரச்செய்து தனியிடத்தோது




கலிங்கராஜன் யாகமியற்றிச் சாயுஜ்யம் பெறுதல்.



நளபதிக்கும் தமயந்திக்கும் அன்னம் தூது செல்லுதல்.



நளபதி தமயந்தியை திருமணமிடுதல். சூதாடுதல்.




[illegible]


[illegible]




90·A



கணபதி ஆலயப்பிரதிட்டைசெய்தல் பெயல்லீம் வரங்கோப் பொருகர்.




நளன் ரதோத்ஸவஞ்செய்து சித்தசுத்தியடைதல்.



கோகொலை செய்த பாதகம் தீர்தல்



உருசிராசன் அன்னதானஞ்செய்தது.



இந்திரன் முதலிய வண்மர்களால் தாபித்துப் பூசித்த மூர்த்திகளும் தீர்த்தங்களும்

க்கி, நளனது பேரழகு, குணம், இளமை, வலிமைகளை நங்கையினிதயத்திற் பசுமரத்தாணியெனப் பதியப்புகட்டி, அன்னவனையன்றி எம்மன்னவரையும் என்மனத்தினாலும் எண்ணுவதில்லையென உறுதிகொள்ளும்படிச்செய்து மீண்டும் அரசனிடத்தில் வந்து நடந்ததையுரைத்துச் செலவு பெற்றகன்றது.

பின்னர் விதர்ப்பர்கோன், தன் மகளுக்குச் சுயவரம் ஸ்தாபித்து மன்னர்களியாவருக்கு மணவோலைவிட்டனன். உடனே, மண்ணாளுஞ் சகல மன்னர்களும் வந்தார்கள். வானாட்டரசர்களும் வந்திறங்கி இவ்வணங்கினை யடைய வேண்டிப் பன்முயற்சிசெய்துங் கிட்டாது நளபதி வருகையை நோக்கி அன்னவனையே தூதனுப்பினர். இப்பெண்மணியைத் தங்களிலொருவருக்கு இசைவிக்கச் செய்வாயென வேண்டினர். நளனும் உடன்பட்டுச் சென்றான். ஆனால் இந்திராதியர் செய்த தந்திர யுக்தி யொன்றும் பலிக்கவில்லை. ஊழுருக்கொடுவந்த அன்னப்புள் முன்னுரைத்த ஆப்தவாக்கியத்தை மறவாத தமயந்தி நளபதியையே மணப்பேன் என்று துணிவுற்றிருத்தலைத் தெரிந்த அமரர்கள் நளனுருவெடுத்து நிடநாடனது இருபக்கங்களினும் நெருங்கி மணமண்டபத்தில்வீற்றிருந்தார்கள்.

அப்போது சேடியர்குழாங்கள் புடைசூழ மாலையிட வந்த தமயந்தி இந்த விசயத்தைக்கண்டு, திடுக்கிட்டு அறுதி முத்த சித்துருவைத் தியானித்து அன்னஞ் செப்பிய நுண்ணுரையையும் எண்ணினாள். விண்ணவர் நமக்குப் பிதாவென வணங்கிச்செல்வாள். "மாதவமிழைத்து வான்பதமெய்தியும் மங்கையராசையால் இங்கெழுந்தருளிய அமரர்களுக் கனந்தம் வந்தனம்" என்றுரைத்தாள். என் கற்பினிலை கெடாது காத்தருள்வது உனது கடனெனச் சிந்தையைச் சிவனிடத்தாக்கினாள். அதனால், இவளெண்ணிய நாயகனாகிய உண்மை நளனைமட்டும் நேரிற்றோன்றக் கண்டு தன் திருக்கரத்தேந்திய மாமாலையைச் சூட்டி வணங்கிச் சென்றாள். அமரர்கள் ஆச்சரியமடைந்து நளபதிக்குப் பல ஆசி

கள்கூறி, பலவரங்களையும் கொடுத்தருளி விடைபெற்று வானுலகம் சென்றார்கள்.

கேளும் முனிவர்களே! மற்றைநாள் விதர்ப்பர்கோன் மணவினையாவும் வழுவுறாதமைத்து உலாப்போதல் முதலிய விழாவயர்த்து, மன்னருக்கேற்ற வரிசையுடன் நளனையும் தமயந்தியையும் அனுப்பிவைத்தான். அவர்களும் ரதாரூடராய் மதனும் இரதியும்போற் புறப்பட்டுத் தம் வளமிகும் நிடதநாட்டை யணுகினார்கள். அமைச்சர்கள் எதிர்கொண்டழைக்க நகர்வலம்வந்து அரண்மனைபுகுந்து அரசு கூடத்தி லழுகுநாளில், தமயந்தியை மணம்புரியக் கருதி வந்த இரவிசுதனாகிய சனிபகவான், அமரர்கோனை நோக்கி, உங்களில் யாவரை மணந்தாள் தமயந்தி? என அவன் மண்ணுலகாளும் நிடதநாடனை மணந்தாள். நாங்கள் அவமான மடைந்தனமென்று அனைத்தையும் மறையாதுரைத்தனர். அதனைக் கேட்ட சனியன் சினங்கொண்டு சொல்வான். சசிமணாளா! "உங்களை அங்கு பங்கஞ்செய்த மங்கை மணாளனைக் கானகத்திற் காரிருளிற் காதலியைக் கைவிட்டுப்போகும்படி பிரித்து வருந்தி அவள் கற்பினுக்கழிவு செய்வதுபோல புணர்விலாகவெனப் பேருண்டாக்காது உங்களைப்பாரேன்" எனச் சபதங்கூறி, நிடதநாடணுகி, காலம் நோக்கிச் சாலகத் திருந்தனன்.

இவ்விதம் சனிபகவான், பன்னிரண்டு வருடங் காத்துறையவுந் தமயந்தி ஆசைக்கொரு பெண்ணும் ஆஸ்திக்கொருபிள்ளையும் பெற்று வாழ்ந்திருக்குங் காலத்து, நளபதியொருநாள் அந்தியிற் சந்திசெய்யக் கைகால் சுத்திசெய்து திரும்புகையிற் குதிகாற்பட்டில் அனுப்பிரமாணம் நீரில் நனையாதிருக்கக்கண்ட சனியன், அனுசாரத்துட்பட்டான் அரசனெனக்கொண்டு, மன்னனையலைத்துச் சோம்பல், அசதி, நெடுந்துயில் முதலிய தாமதகுணப் புன்செய்கையிற் புத்தி புகச்செய்து, தம்பிராசனாகிய புட்கரனோடு சூது சொக்கட்டானாடச் செய்தான். பின் அந்நளன் நாடு நகரம், சதுரங்க சைனியங்களுந் தோற்று, அர



சுரிமையுமிழந்து மக்களை மாதுலர்மனைக் கேகவிடுத்து, மனைவியுடன் அருங்கானகத்துக்குச் சென்றான். அங்கும் சனி அன்னபட்சியுருக்கொண்டு வந்தான். அவ்வன்னத்தைத் தானுடுத்திருந்த ஒற்றையாடையாற் பொத்திக் கைப்பற்ற அரசன் முயன்றபோது அது சனியின் அம்சமானதால் உடனே நழுவி அரசனுடையை அபகரித்துக்கொண்டு ஆகாயமார்க்கஞ் சென்றுவிட்டது. நளபதி உளந்தளர்ந்து மங்கையினுடையிற் கொஞ்சமுடுத்திக்கொண்டு மாலைப்போது வரையினும் வழிநடந்திளைத்துக்களைத்துப் பொதுச்சாவடியிற்றங்கி அன்றிரவு கழித்து வழிச்செல்வோமென அன்னமாகாரமிலாது மனையாளுடன் அலுத்து உறங்கினான்.

கொடுங்கோல்புரியாக் கொற்றவன், செல்வப்பெருக்கைத் துறந்து நித்திரைசெய்ய அவ்வுத்தமனுளத்திற் சனியன் புகுந்து மங்கையை விட்டகலச் சங்கற்பமுண்டாக்கினான். நளாதிபன் கண்விழித் தெழுந்து இருவருமொரு வஸ்திரம் உடுத்திருப்பதால் இவளை விட்டொழிப்பதெப்படி? அப்படிவிட்டும், மனமொப்பித் திகம்பரனாகத் திரிவதெப்படி? என மனந் தடுமாற்ற மடையும்போதிற சமய சஞ்சீவி யென்றுரைப்ப கலிவலியால் அருகிற்கிடக்கும் ஒரு சிறு கத்தியையெடுத்து கற்பிற்சிறந்தா ளிடையுடுத்திய பட்டாடையில் இருமுழம் அறுத்துடுத்திக்கொண்டு, கானகத்திற் காரிருளிற் காதலியைக் கைவிட்ட பாதகனெனப் பார்ப்போர் பகரப் பதுங்கி யொதுங்கிக் காட்டைநாடிச்சென்றான். சென்றவன் அங்குச் சனியனால் கார்க்கோடகன் தன்னைக் காப்பாரொருவருமிலாது நெருப்பிற்கிடந்து, தவிப்பதைக் கண்டு அப்பாந்தளைக் கோல்கொண்டெடுத் தப்புறம்விடுக்க அது சரேலெனச்சீறிக் கூரிய பற்களாற்றீண்டி அவனது உருவத்தை விகாரப்படுத்திவிட்டது. இதனைக்கண்ட அரசன் சர்ப்பமே! ஏனிவ்வடாதன புரிந்தாய்! உபகாரஞ்செய்தவர்க்கபகாரஞ் செய்யலாமோவென, என்னாபத்தைக்காத்த அரசே! யான்செய்தது அபகாரமன்று, உனக்குபகாரமேயாகும். நாட்டையிழந்து காட்டிற்றிரிவதற்கேற்ற வடிவமிதுவே தகுதியாகும். சில நாளில் உனக்கு நல்வளம்

நணுகும். அப்போது மூன்வடிவம் வேண்டில் இந்த மிருதுவாகிய பைந்துகிலுடுத்திச் சிந்தை செய்குவையேல், நீ கதிரொளிமிகும் பழைய வடிவம் பெறுவாய். உனக்கினியான அயோத்தியாபுரியாளும் அரசனிடஞ் சென்று குதிரைச் சேவகனாயமர்ந்து அவனுக்குனது அஸ்வமந்திரத்தையுமுபதேசிப்பாய், அவனாலுனக்கோர் அரியவிஞ்சையுங் கற்பிக்கப்படும். அதனால் அரசுரிமையும்பெற்று முன்னிலும் பதின்மடங்கதிகமாகப் புகழ்பெற்று அரசாள்வாய் என்று அளவிடாத்துயர்க் காழுங்காட்டிப் பைந்துகில் தந்து பாந்தளும் மறைந்தது.

கார்க்கோடகனுரைத்த மார்க்கத்தை மெய்யெனத் துணிந்து அயோத்தியையாளும் இருதுபர்ண அரசனையடைந்து, அஸ்வ தந்திரத்திற் சமர்த்தனென்றும், நளபதியின் றளபதியானவனென்றும், அவர் கலிவலியாற் கானகஞ்சென்றொளித்தனரென்றும், அவர் வெளியாகும் வரையிலுமிங்கு சேவகஞ்செய்ய விரும்புகிறேன் என்றும், ஆதரிக்காள்க வென்றும் வணங்க, இருதுபர்ணன் மகிழ்ந்து குதிரைச் சேவகர்களுக் கதிபதியாக்கி வாகுகனெனப் பெயர் அமைத்து வெகுமதியளித்து தனதரணமனையில் ஒருபுடை யிருக்கும்படி ஆக்கியாபித்தனன். அவ்வண்ணமே அம்மன்னர்க்குடனும் தன் மங்கைக்குளமுங் கொடுத்து கவலையுற்றிருந்தான் நளன்.

நிற்க, நித்திரையிலுங் கணவனைக் கைவிடா நிறையினளாகிய தமயந்தி தலைவனைக் காணாதெழுந்து, கானுழிப் புகுந்து, கூந்தல்முடி குலைய, அழுதகணாறுஞ் சிந்தியகாசியுமாக ஓ! வனதேவதைகாள்! என் மன்னனைக் கண்டீர்களோ! சோலைக்குயில்காள்! என் துணைவனைக் காணீர்களோ! அருங்கிள்ளைகாள்! என்னரசனைப் பார்த்தீர்களோவென்று இசைக்குயில்போல் கூசாது ஓயாது கூவிக்கொண்டு வனங்களெல்லாந் தேடியுங் காணாது ஓய்ந்து செல்லும் தருணத்தில், ஓர் பாம்பு நெடுநாள் இரையிலாது நகர்ந்துவந்து மங்கையின் வதனத்தை மதியெனவெண்ணி விழுங்க எத்



தனித்தது. அக்கானகத்தலையும் வனசரன் அதனைக்கண்டு, தன் கரத்திருந்த வில்லில் அம்பைப் பூட்டித் தமயந்தியின் றிருமேனியிற்படாது மலைப்பாம்பைச் சிதைத்து வேறுபடுத்தி அருகிலிருக்குஞ் சுனைநீர்கொணர்ந்து முகத்திற் றெளித்து சோகத்தைத் தெளிவித்து அவளழகிலீடுபட்டு அவளை மனைவியாக்கிக்கொள்ள ஆசைப்பட்டுப் பிடிக்கச் சென்றான். அதனால் அவ்வேடன் கற்புடையவளாகிய தமயந்தியின் கோபத்திற்காளாகிச் சாம்பலாக வெந்து வீழ்ந்துவிட்டான்.

அடாதுபுரிவோன் படாது படுவனென்ற ஆப்தவாக்கியத்திற்கிலக்காகக் காமுகனாகிய வேடன் வெந்தழற்படிந்து வெண்ணீறானதுகண்டு, ஐயோ! உபகாரஞ் செய்தவனுக் கபகாரம் விளைந்ததேயென்று, உளந்தளர்வுற்று, பதியைத் துறக்கச்சதிசெய்யுமூழொன்றிருந்ததேயெனக்கருதி அனல் படுமெழுகென மனமுருகித் திக்குணராது தத்தளிக்கும் போது, பகவான் மனமிளகி அக்கானகத்துறையும் வானப்பிரஸ்த ரிஷிபோலுருவேற்று, தமயந்தியின் முன்னர் தோன்றி உன் சஞ்சலமின்றுடன் அகன்றிடும், சமீபத்தில் உனக்குறவினர் நகரமிருக்கின்றது, அந்நகர் செல்வையேல் அதினின்று முன்தந்தை தாயாரைக் காணலாம். அவர்களால் உனது அபீஷ்டப்படி நாயகனைக்கண்டு முன்னினு மிகமேம்பாடாக வாழ்வடைவாய் என்று சொல்லி வழியையுங் காட்டிச்சென்றார்.

தமயந்தி, ஐயர் சொன்ன தடத்தைக்கண்டு நடந்து செல்லும்போது சூரியன் அஸ்தமனமாயினன்.

அத்தருணத்திற் சில வணிகர், அவ்வழி செல்லக் கண்டு தமயந்தி அவர்கள் பின்சென்று அவர்களிறங்கிய விடத்தில் ஓர்புறந் தானுந் தங்கியிருந்தாள். அன்றிரவு நடுயாமத்துக் கண்படு வணிகரனைவரையும் ஒரு மதகரிவந்து கொன்றுமிதித்துத் துவைத்தது. அதனைக்கண்ட தமயந்தி சடுக்கென்றெழுந்து வையத்திந்தத் துன்பத்தில் வருந்தி நைவதினு மிந்த மதகரிக்கிரையாகலாமென்று எதிரிற்

செல்லவும், அது இவளைக் கொல்லாமற் போய்விட்டது. தமயந்தியானவள் பின் இதுவு மீசன் செயலென வெண்ணித் துணிந்து தனியாகவே தடம்பற்றி நடந்துபோய் விடியுமுன் பலகாவதங்கடந்து சூரிய உதயத்திற்கு முன்னரே இருடிசொன்ன சுவாகுகனென்னும் அரசனாளும் நகரமடைந்து அரசமங்கையர் நீராடுந்துறைக்குச் சென்று அங்கு ஒருபுடை யொதுங்கி அப்பெண்கள் கண் பார்வைக்குப் புலப்படவிருந்தாள். அங்கு நீராடப்போந்த ஒவ்வொரு தாதிகளு மிப்பெண்ணரசியைக்கண்டு சமீபித்து "ஓ! அம்மணி! ஏனிங்கு தனியிருப்பது! வேறு துணை யொருவரையுங் காணோமே! இங்கு வந்த விபரமென்ன வென பலபேருங்கூடிக் கேட்க, தங்கைகாள்! உமதரசியின் பால் எனைக்கொண்டு விடுப்பிரேல் யாவுமொழிவேன்" என்று சொன்னாள். அவர்கள் இவள் நமதரசிக்குச் சொந்தமாகும்போலிருக்கிறது. முகச்சாயலுமப்படியே தோற்றுகிறதென்று பேசிக்கொண்டு தமயந்தியைத் தங்களரசியின் அந்தப்புரங்கொண்டு விடுத்துக் கண்டதைச் சொல்லி, அண்டையில் நின்றார்கள். அவ்வரசன் தாய்கண்டு திடுக்கிட்டு நமக்குநெருங்கிய பந்துபோலிருக்கிறது, விசாரிப்போமிருக்கட்டுமென்று, தங்கையே! இங்குவா உட்கார், ஏன் நீர்க்கடன் கழியாது வந்தனை! சேடிகாள வெந்நீர்கொடுத்து நீராட்டச்செய்யுங்களென்றுபசரிக்கவும், தமயந்தி, அன்னாய்! அதுவொன்றும் வேண்டிலன், நான் நிடதநாடாளும் அரசியின் பணிப்பெண், அவர்களிருவரும் கானகஞ்சென்றனர். அவர்கள் வெளியாகும்வரையில் இங்கிருக்க உத்தரவளித்து குட்சிபாதை கழித்தாற்போதும், வேறொன்றும் விரும்பிலேன், அவர்களைக் காணும்வரையில் அவிழ்ந்த கூந்தலை முடியேன், உடுத்திய ஆடையுங்கழியேன், குளியேன், தைலம், தாம்பூலம், மஞ்சள், மலர் தரித்திடேன் என்று தெரிவித்தாள். அதற்கவ்வரசியும் பிரியம்போலிருக்கலாம்; என்று தனியிடமளித்து பெருமையாகவே நடத்திவந்தாள். விதர்ப்பர்கோன் தேடவிட்ட தூதுவரிற் சிலரிவ்விடம் வந்து, கன்னிகைப் பருவத்திற்கண்ட சின்னங்களிருக்க, தமயந்



தியே இப்பெண்மணியென எண்ணி அரசனுக்குத் தெரிவித்தனர். பின் சுவாகுகன் நவரத்னகசிதமான மூடு பல்லக்கிலிருக்கச்செய்து காபந்துடன் பிறந்தவிடத்திற் கனுப்பினான். சேதிகேட்ட பெற்றோர் எதிர்கொண்டு அமிழ்தினு மினிய வாசகத்தால் அரிவையர் துயர்போக்கி அருமைப் புதல்வ ரிருவரையுந் தமயந்திமுன் அழைத்திருத்தி தலைவன் பிரிவை யொருவாறாற்றி, நாயகனைத்தேட நாடெங்குந் தூது விடுத்து, மங்கையைத் தங்களரண்மனையில் வைத்து எவ்வளவோ உபசரித்துவந்தார்கள். அவள் தன் மைந்தர் முகத்தைப் பார்த்துக் கண்ணீர் சோர்ந்து அன்றுடுத்திய ஆடையகற்றாது அவிழ்ந்த கூந்தலைமுடிக்கா திருப்பதைக்கண்ட தந்தை தாயர்கள் நீதியுணர்ந்த வேதியருக் கனந்தந் தானதருமங்களைச் செய்து நளபதியைக் கண்டுபிடித்தவர்களுக்கு வேண்டும் பொற்காசு அளிப்பதாகத் தெரிவித்து அனுப்பினார்கள். ஒவ்வொருவரும் பற்பல நாடுகளுக்குஞ் சென்று தேடினார்கள். அவர்களிற் கூரியதோ ரறிவுடைய வேதியன் அயோத்தியாபுரியில் ஊரும்பேரும் தெரியாத ஒருவன் மேசம் படர்ந்த மேனியாளன் குதிரைச் சேவகத்தமர்ந்து வாகுகனெனப் பேர்வகித்திருகின்றான் என்று தெரிந்து வந்து விதர்ப்ப நாடனுக்கறிவித்தான். அரசன் தமயந்திக்குணர்த்தினான். தமயந்தி "நளபதி தமயந்தியை விடுத்தகன்றதால் மறு விவாகம் நடத்தப்படும்" என்று அயோத்தியரசனுக்கு தெரிவிக்கும்படி தூதனுப்பினாள். தூதர்கள் சொல்லியதைக்கேட்ட அயோத்தியரசன் இரதத்தைக் கொணர்கெனப்பணித்திட, வாகுகன் அங்குள்ள புரவிகளில் வயதுமுதிர்ந்த குதிரைகளைப்பூட்டி யோட்டி வந்தான். அதைக்கண்ட அயோத்திபதி, "வாகுக! விதர்ப்ப நகர் செல்ல உனக்கு அபிப்பிராயமில்லைபோலும் என, அரசே! விரைவிற்செல்வது சாரதிவல்லபமன்றி வாசியினாலல்ல, காலதாமதஞ் செய்யாது ரதத்திலேறினால் சாரத்தியஞ்செய்து காட்டுவே னென்று அஸ்வங்களின் வலச்செவிகளில் அஸ்வமந்திரத்தை யுபதேசித்துக் கடிவாளத்தை இடக்கரத்தும், வலக்கரத்துக் கோலையுங் கொண்டோச்சி அரசு

னைத் திறமாயிருக்கப்பணித்து வாயுவேக மனோவே
கத்திலும் அதிவேகமாக செல்லும்படி தேரைச் செலுத்
தினான். அரசன் வாகுகனைப்பார்த்து உத்தரியம் நழுவிற்
றென்றான். சாரதி நூறுயோசனைகழிந்தது என்றான்.
அதனைக்கேட்டு அதியாச்சரிய மடைந்த அரசன் விதர்ப்ப
நகர் இன்னு மெவ்வளவுதூர மிருக்குமென, நேரிற் றெரி
கிறதென வாகுகனுரைத்தான். சற்றிளைப்பாறிப் போகக்
கருதி இரதத்தை நிறுத்திடப்பணித்து, அரசன் கீழிறங்கி
அஸ்வங்களைப்பார்க்கச் சிறிதாவது இளைப்பும் களைப்புமிலா
திருக்கக்கண்டு இப்படி சாரத்தியஞ்செய்யும் அற்புதத்
தைப் பார்த்ததில்லையெனச் சாரதியைமெச்சி, யுளக்களிப்
பால் ஒரு தான்றி விருக்ஷத்தைப்பார்த்து கணக்கிட்டதில்
இத்தனை யிலை இருக்கிறதென்று வாகுகனதிசயிக்கும்படி
தெரிவித்தான். அதுகேட்ட சாரதி மரத்திலேறிக்கணக்கிட,
அரசன் செப்பியபடியேயிருக்க இஃதுமோ ராச்சரியவித்தை
யென மனத்தெண்ணி விருக்ஷத்தினின்றிறங்கும்போது
வெங்கலி விடைகொண்டகன்றான். மன்னன் சாரதியை
இரதத்தை நடத்த உத்திரவளித்தான். வாகுகன், மீண்டும்
பரியை நடத்த எத்தனித்து அரசே! அஸ்வமந்திரத்தைப்
பெற்று உமது விஞ்ஞையை யளித்திடவேண்டுமென்றுரைத்
தான். நல்லது விரைவிற் செலுத்தெனவுரைக்குமுன் விதர்
ப்பநகர் அரண்மனையின் வாசலிற்கொணர்ந்து நிறுத்தப்
பட்டது இரதம். இறங்கிய அரசன் அங்கு மணக்கோல
மில்லாதிருப்பதைக்கண்டு விதர்ப்பர்கோனைப் பார்க்கவந்தது
போல் நடித்தான். விதர்ப்பனெழுந்து மன்னனிருகரங்
களையும்பற்றி ஆசனமளித்து உபசரித்தான். வாகுகன் இர
தத்தை அப்பால் விடுத்து விடுதிக்குச் சென்றிருந்தான்.
தமயந்தி ஒற்றரைவிடுத்து அவர் பின்சென்று அனலும் புன
லுமிலாது அடிசிலமைப்பதைப்பார்த்து வந்தறிவிப்பீர்களெ
ன்று ஆக்கியாபித்தனள். அவர்களும் வாகுகன்பின் மறைந்
திருந்து நோக்க தமயந்தி யுரைத்தபடி யிருக்கக்கண்டு ஓடி
வந்தறிவிக்க, தம்மிரு மக்களையுந் தாதியர் பின்னுடனனுப்பி
அந் நளபாகத்திற் கொஞ்சம் யாசித்திடச் செய்தாள்.



சென்றமக்களும் அங்கு உலாவவந்ததுபோல வாகுகனி
ருக்கும் விடுதிக்கருகிற்செல்லும்போது மக்களைநோக்கிய
மன்னன் மனங்கசிந்துருகி சமைத்திருந்த சாதத்தில்
தனித்தனியுருட்டிக் கொடுத்தனுப்பிக்கவும், தாதியர்கண்டு
ஏனிக்குழந்தைகளைக்கண்டழுதீரென்று வினவ என் குழந்
தைகளிப்படித்தானிருக்கும், விட்டுவந்து வெகுநாளாயது,
பார்த்தவுடன் அவர்கள் ஞாபகம்வந்து மனங்கசிந்து சோக
ப்பட்டேன், அழைத்துச் செல்லுங்களென்று உட்புகுந்
திருந்தான். சடுக்கெனத் தாதியர் குழந்தைகளை யெடுத்
துக்கொண்டு கண்ட அதிசயத்தை யறிவித்து அன்னத்தை
யுமறிகுறியாகத் தமயந்திக்குக் காண்பித்தார்கள். உடனே
தமயந்தி தந்தைக்கறிவித்து, சாரதியாக வந்த நளபதி
யைச் சபையிற் கூட்டுகவென்றோத, விதர்ப்பன், வந்திருக்
கும் அரசனைப்பார்த்து, நுமது சாரதியை இங்கு வரவழை
யும் பார்ப்போமென, அவனும் அங்ஙனே வாகுக நாமஞ்
சொல்லி யழைக்கவுங், கேட்ட சாரதி விரைந்துவந்து
பணிந்தான். பின் விதர்ப்பன் வேண்டுகோளுக்கிணங்கித்
தன் உருவத்தைக்காட்ட விரும்பி கார்க்கோடகன் கொடுத்த
உடையிரண்டினாலும் நளன் தன் வடிவந்தோன்ற நின்றான்.
மாமன் மனை மக்கள் யாவருங்கண்டு துயரம் நீங்கினர். இரு
துபன்னன் எழுந்து வணங்கி, எனைப் பணியாளனுய்க்கொ
ளும் உனைப்பணிகொண்ட குற்றத்தை மன்னிக்கவேண்டு
மென்று கேட்டுக்கொண்டான். எனை இந்நாள்காறும் புரந்
தனையே, அதற்கியான்செய் கைமாறென்ன? என்று அவன்
மனதைத்தேற்றி அவ்வரசன் விஞ்ஞையைப்பெற்று விடை
கொடுத்தனுப்பினன் நளன்.

இருதுபன்னனெழுந்திருவருக்கும் மீண்டும் பணிந்து
நளபதிவெளியாக வேண்டி இவ்வளவு புரிந்தார்களென
உணர்ந்தேனென்று நளனுபதேசித்த மந்திரபலத்தா லிரத
மேறித் தன் நகர்சேர்ந்தான். இப்பால் விதர்ப்பநகரிற் சில
நாளிருந்து மனைவிமக்களுடன் மாமனார் படைத் துணை
கொண்டு நிடதநாடணுகி, யுத்தமாசனையவும் சூதிழைத்த
புட்கரன் நாணமடைந்து ஓடிவிட்டான். பழைமைபோல்

யாவரும் அரண்மனைசென்றார்கள். அரசன் அரசுபுரிந்து வாழ்ந்துவந்தான்.

இப்பால் நளபதி அமைச்சர்பா லரசைவிடுத்து அந்தப்புரத்தே குந்திக்கொண்டிருந்தபடியே சித்தப்பிரமை பிடித்தவன்போல மக்களைவேண்டான், மனைவியைத் தீண்டான், ஒக்கலைச் சேரான், ஒன்னலரைச் செருக்கான், நங்கையரணுகி இங்கிதசங்கீத மெதுவிழைக்கினுங் களிப்புஞ் சலிப்புமிலாது பேயோடு உன்மத்த பசாச குணமெனப் பாவைபோலிருக்க யாவருங் கலக்கமுற்று, நீக்க வேறு மார்க்கந்தெரியாது தியங்கினர். அச்சமயத்து திரிலோக சஞ்சாரியான நாரதபகவான் நளனைக்காண வந்தவர் இதனைக்கேள்வியுற்று அரசனைக்கண்டு இது சனிபகவான் செயலேயாகும். இது மூர்த்தி தல தீர்த்த யாத்திரை செய்தாற் றீருமன்றி வேறெவ்வாற்றானுந் தீராதெனப் புகன்றகன்றனர்.

நாரதர் மொழிந்த வேதவுரையைக் கேட்டவுடன் அரசனுக்குச் சித்தங்கலவரமடங்கி மனைவியுடன் தீர்த்தயாத்திரை செய்யப்புறப்பட்டு தக்ஷணம் நோக்கி கங்கை, யமுனை, சரஸ்வதி, சரயு, சிந்து, நர்மதா, கோதாவிரி, கிஷ்ணை, துங்கபத்திரா, பிரமபுத்திரா, சந்திரா முதலிய நதிகளில் இறங்கி தீர்த்தமாடி ஆங்காங்குபுரிதருந் தான தருமங்களைச் செய்துகொண்டு காசி, கேதாரம், பருப்பதம், அரித்துவாரம், பதரிகாசிரமம், பண்டரிபுரம், வேங்கடம், அருணை, காஞ்சி, காளத்தி, கழுக்குன்றம், விருத்தகிரி முதலான இவ்ய க்ஷேத்திரங்களைப்பணிந்து சிவதரிசனஞ் செய்துகொண்டு வரும்போது பரத்வாசமகரிஷி எதிர்ப்பட்டு மன்னனுக்குற்ற மனக்குறையுணர்ந்து நளபதியே உன் னுள்ளக்குறிப்புணர்ந்தோம். இப்படி நெடுங்காலந் தேசயாத்திரை புரியினுங் குறைநிறையாது, கங்கையினும் மேன்மைவாய்ந்த பொன்னிநதித் தென்கரை ஒன்றரைக் காவதத்தில் திருநள்ளாறென்றொரு திவ்ய க்ஷேத்திரம் இருக்கின்றது. அதில் நான்முக னமைத்த தீர்த்தத்தையும் கானற்சோலையுள்ளிருக்குஞ் சிவலிங்க மூர்த்தியையுங் கண்டால் அன்றே சகல



பீடாபரிகாரங்களு மாகுமென்றுரைக்க, மன்னன் மகிழ்ந்து விடைபெற்றுத் தென்றிசை நோக்கிப் புறப்பட்டுச் சிதம்பரம், சீர்காழி, வேளூர், வெண்காடு, சங்கமம், சாயாவனம், மாயூரம், கடவூர், தில்லையாடி, திருவிடைக்கழி முதலிய சிவபதிகளிலும் புகுந்து விதிமுறைபணிந்து வதிந்து தர்ப்பாரண்யமெனுந் திருநள்ளாறடைந்து சேணிற்பணிந்து வீதிவலம்வந்து முப்பத்தீராயிரம் முனிவர்கள் மந்திர நீரிறைக்க பிர்மதீர்த்தத்திற் படிந்து திருச்சந்நிதியிற்சென்று பஞ்சாங்க அஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து எழுந்து சிரமேற்கரங்குவித்து கோபுரவாயிற்புகும்போது காகத்தைக் கொடியாகவும் வாகனமாகவும் கொண்டு கறுத்த திருமேனியோடு சூலாயுதத்தைக் கையிலேந்தி சனிபகவான் இனி, யாசனையலைப்பமேல், திரிபுரதகனன் றிருவுளப்பாங்கினுக்கு அபராதியாகுவோ மென்றஞ்சி, வானிற் றோன்றிமறையு மின்னற்கொடிபோல நளபதியிடத்திருந்து வெளிவந்து மறைந்தான். நளன் பாரச்சுமையிறக்கியவனைப்போலத் துன்பத்திருந்து விலகி கோவிலுட்புகுந்து சிவலிங்கச் செழுஞ்சுடர்முன் அணுகி அபிஷேக ஆராதனைகளும் புரிவித்து ஆடையாபரணங்களாலலங்கரித்து அருச்சனைபுரிவித்து அருந்தமிழ்ப்பாமாலைகளால் தோத்திரம் புரிந்து உழுவலன்புடையனாய் இருகண்களினின்று மானந்த பாஷ்பம் பெருக புளகாங்கிதனாய் மனமுருகி நின்றான். அப்பொழுது கோடிசூரியப் பிரகாசமாய்ச் சிவபெருமான் தோன்றி, மன்னனே! உனக்கென்னவரம் வேண்டுமென்றருள, நளபதி யடிபணிந்தெழுந்து, எந்தாய்! இவ்வூரிலென் நாமமென்றும் நிலைபெறவும், யானின்றடைந்த பேற்றை யாவருமெளிதிலடைந் துய்யவும், நளநாமங்கொண்ட தடாகம் விளங்கவும், அதிலிறங்கி ஸ்நானஞ்செய்பவர்களுக்கு எப்படிப்பட்ட நோயும் ஏவல் வைப்பு முதலியனவும் கிரகதோஷமு மகலவும் வரமருள வேண்டுமென்றும், அடியேனால் புரிதரும் திருப்பணியும் திருவிழாக்களும் அங்கீகரிக்கப்பட்டு அடியேனிப்பதியிற் சிலகாலம் வசித்திடவும் வரமருள வேண்டுமென்றும் கேட்டுக்கொ

ள்ள, சிவபெருமானும் அங்ஙனமேயாகுக என்று அருள் புரிந்தார். பின் அரசன் கோவிலைவலமாகச் சூழ்ந்துசென்று அம்சதீர்த்தக் கரையைச்சார்ந்து அரணமைத்து ஆங்குத் தம்பதி சமேதனாயிருந்து அநுதினமும் தீர்த்தமாடிச் சிவ தரிசனஞ் செய்துகொண்டும் அளவிறந்த திரவியங்களைச் செலவுசெய்து சிவாலய திருப்பணியைச் சீர்பெறத் தேவகம்மியருங்கண்டு பிரமிக்க வியற்றியும் இரண்டுகோடி செம்பொனீந்து கும்பாபிஷேகஞ் செய்வித்தும், அறச்சாலை, பாகச்சாலை, அக்கிரகாரம் முதலியவற்றை ஆங்காங்கு அமைப்பித்தும் தர்ப்பாரண்யத்தை கற்பகாரண்யமாகவும் திருநள்ளாறே அமராருள்ளூராகவு மாக்குவித்தும் பின்னர் சிறப்பொடு திருவிழாவை நடத்திவைக்கவும் தொடங்கினான். கேளும் முனிவர்களே! யென்று சூதபுராணிகர் சொல்வதாயினார்.

நளபதிச் சருக்கம் முற்றிற்று.

---

## திருவிழாச் சருக்கம்.

நைமிசாரண்ய முனிவர்களே! நளபதி வெகு சிரத்தையோடு சிவத்தொண்டு புரிந்து, மேன்மேலுமதிக தீவிரமுந் திடபக்தியுங்கொண்டு, சிற்றரசர்கள் அனைவருந் திறைகொணர்ந் தளக்கப்பெற்று, மிகுந்த பொருளனைத்தையும் திருநள்ளாறுடைய நண்பருடைய திருப்பணிக்கே உபயோகப்படுத்தி, இந்திரன்பதியே இங்கு வந்திருப்பதென விமையாநாட்டத்தருங் கண்டுமருளத், திருநகரைச் சிறப்பித்தான். பின் குடை கொடி ஆலவட்டந் தாலவட்டம் சுருட்டி வெண்சாமரங்கள் நெருங்கி வானையடர்ந்து நிழற்ற, வசந்தருதுவாகிய வைசாகமாதம் புனர்பூச நாளில் துவசாரோகணமும் விசாகத்திற்றீர்த்தப் பெருவிழாவும் இவ்வாறு ஆண்டாண்டு தோறு மியல்புறத்தவறாது புரிந்து பன்னிரண்டு வருடமித்



தலத்திருந்து சங்கரன் விடைகொடு தனது நிடதநாடடைந்து இன்புற்று வாழ்ந்துவந்தான். கேளும் முனிவர்களே! யென்று சூதபுராணிகர் சொல்ல முனிவர்கள்பணிந்து இன்னும் இத்தலத்தில் முக்தியடைந்தோர்களுண்டாகில் அச்சரிதையையும் உரைத்திடவேண்டு மென்றிரக்க, மீண்டும் சூதபுராணிகர் திருவாய்மலர்ந்தருளுவாராயினர்.

திருவிழாச் சருக்கம் முற்றிற்று.

---

## கோக்கொலை தீர்ந்த சருக்கம்.

மாசிலாத் தேசமிகுந்த கோதாவிரி நதிக்கரையருகிற் சிறப்புற்றோங்கி விளங்கும் வேதியர் வாழுமூதூர் புரக்கும் தூயகண்ட வர்மனென்னுமரசன் மகவிலாதருமகம் விளைக்கக் கருதி மறைமொழி முரணாது பெருந்தவமுனிவர்களாற் புத்திரகாமேஷ்டியாக மியற்றிட வச்செந்தழலினின்றெழுந்ததோர் பூதமானது பொற்கலத்தோடளித்த பாயசத்தைத் தன் பட்டமகிஷிக் களித்திட்டான். அவள் அதனால் கருப்பந் தாங்கிப் பட்டத்துக்குரிய புத்திரனைப் பெற்றெடுத்தாள். அச்சந்தோஷத்தால் அரசன் அவ்வேள்வி குருவுக்குப் பொன்னாபரணங்களும், நூறு பசுக்களும், இலக்ஷம் பொற்காசுகளும் கொடுத்து, மற்ற பிராமணர்களுக்கும் பல தானங்கள் கொடுத்தான். அப்போது பொறாமைவாய்ந்த இருவருள் ஒருவர் ஒருபெரும் பசுவைத் தனக்கென்றார். மற்றொருவ ரெனக்கென்றார். இருவரும் பசுவைப் பற்றி இழுத்தலைக்கும்போது கண்டவர் திடுக்கிட கையிலிருந்த தண்டத்தாலொருவர் அதைப் புடைத்தார். அது சருமங்கிழிந்து உதிரம்பெருகி பூமியில் விழுந்து உயிர்விட்டது. அதனால் அடித்தவனைக் கோஹத்திப்பற்றிக்கொண்டு பிராமணத் தன்மையை வேறுபடுத்திவிட்டது. அதனால் அவன் நகரத்திற்குட்செல்ல நாணமடைந்து ஆரணியம் புகுந்தலைந்து

திரியும்போது ரோமசர்மனென்னும் வேதியனை மார்க்கத்திற்கண்டு பூமியில் வீழ்ந்துவணங்கினான். அவர் ஆசீர்வதித்து, ஐயனே! உன் முன்னூழினால் வந்த பாவத்தை யறிந்தேன். அதைக் சொல்வோர்க்குக்கூடத் தோஷம் பற்றும். ஆனாலும் ஜீவகாருண்யம் வாதிக்கின்றது. ஆதலால் சொல்லுகிறேன். கோகத்தி நீக்குமார்க்கமொன்றிருக்கின்றது. அது தீர்த்தயாத்திரையேயாம். கங்கை, காளிந்தி, யமுனை, கலைமா, துங்கபத்திரை, கோதை, ஏமாலி, பெண்ணை, பனந்தை, சரயு, சிந்து, கம்பை, குணகடற் படுஞ்சேது, அம்புசை, வேகவதி, வேத்திரவதி, கன்னியாகுமரி, கபிலநதிகள் முதலியவற்றிற்கு ஓடி யலைந்துழல்வதிற் பயனில்லை; வீணில் வாணாள் போக்குவதாகும்; ஆகையால் யாதொரு தீர்த்தமும் க்ஷேத்திரமும் புகல்வேன் கேட்பாய், சண்டாளவுருவேற்ற அந்தணனே! அகத்தியன் கரத்துறு கமண்டலத்தினின் றெழுந்து குணகடற்றிரையிற் புணர்தரு நன்னதியாகிய பொன்னிநதிக்குத் தக்ஷணபாகத்தில் ஸ்ரீ கௌரி மாயூரத்திற்கு ஈசானதிக்கில் விளங்குந் தர்ப்பாரணியமெனுந் திருநள்ளாறடைந்து, திருநகர்தனிலே யொளிர்தரும் அகத்தியனால் பூசிக்கப்பெற்று, சனக சனந்தன சனாத்தன சனற்குமாரர்களாலு முசுகுந்தன் முதலிய சக்கிரவர்த்திகளாலும் பூசிக்கப்பட்டு அவரவர்கள் தீவினை யாவுமொருங்கே யொழித்தருளிய தியாகப்பெருமான் றிருமுன்னர் கோபுரவாயிலை யாசிரயித்திருக்கும் இரவிசுதனாகிய சனிபகவானைக்கண்டு தெரிசித்தால் உனக்குத் தீராத கோஹத்தி தோடமும் நீங்கிவிடும். அளவில்லா மக்களுக்கு அங்கு அனுக்கிரகமாயிருப்பதாலுடனே தாமதியாது விரைவிற்செல்வாயென் றுரைத்தார். விடைபெற்றகன்ற வேதியன் எங்குந்தங்காது தக்ஷணம் நோக்கித் தீவிரமாய்நடந்து அந்திரோத்தில் நந்திதீரப்பொன்னிநதிகண்டு புரிவனபுரிந்து மயிலாடுதுறையுளானை மகிழ்வொடு மனதார ஏத்திப் போற்றி வணங்கினான். பின் பற்றிய பெருந்துயரகன்றிட மறுநாள் சிவனிராத்திரியன்று திருநள்ளாற்றை யடைந்து மேற்பாலுள்ள தீர்த்தத் தருகிற்சென்று நின்றான். அப்



போது அன்று அத்தீர்த்தமாடித் திரும்புவோர்களது சிகையினின்றுஞ் சிதறிடு நீர்த்துளி யிவனது சண்டாள வுருவத்திற்பட்டவுடனே அவ்வுருவொழிந்து முன்னுருவமாகிய பிர்மதேஜஸ் துலங்கிற்று. இதனைக்கண்ட விண்ணவர் மண்ணவரியாவரு மிந்தத்தீர்த்தத்தின் பெருமையைக் கண்டதியற்புத மடைந்தார்கள். பின் அவ்வேதியன் விதிமுறைப்படி தீர்த்தமாடி சந்தி செபதவங்களை முடித்துச் சிவபிரான் றிருச்சந்நிதியடைந்து ஆறுகாலமுந் தவறாது தரிசித்து உபவாசமாயிருந்து மறுநாளுதயத்தில் பிர்ம தீர்த்தத்தில் படிந்தெழும்போது ஞானோதயமாயிற்று. உடனே மனைவி மக்களெனும் புறப்பற்றகப்பற்றுக்களை முற்றும் பற்றறவிடுத்து சடாமகுடதாரியாய் தர்ப்பாரணியத் தெந்தையார் ஆலயத்திருப்பணி இடையறா தியற்றிக்கொண்டிருந்து முடிவிற் சிவசாயுச்சிய மடைந்தனன். கேளும் முனிவர்களே! யென்று சூதபுராணிகர் மேலும் சொல்வதானார்.

கோக்கோலைதீர்ந்த சருக்கம் முற்றிற்று.

## உருசிராசச் சருக்கம்.

செந்திருவகலாத் திகழ்பெரும்புவனத்தில் அவந்திமாநகரையாளும் உருசிராஜனென்பவன் தன் க்ஷத்திரியகுலத்தினுக்கேற்ற அஸ்வமேத மிராஜசூய முதலிய யாகாதிகிருத்தியங்களையும் முப்பத்திரண்டறங்களையும் வழுவாதியற்றிச் செங்கோல் நடாத்திவருநாளில் செழும் புகழுடைய பாரத்துவாச மகரிஷியானவர், நீறுபூத்த நெருப்பென அநேக முனிவர் குழாத்துடன் அரசனையணுகி அவனால் பூசிக்கப்பெற்று உயராசனத்திருந்து மன்னனுக்கனேக நீதிகளையுந் தருமசாஸ்திர இரகசியங்களையும் போதித்து வந்தார். அப்போது முனிவரை வணங்கி அறத்தாறெழுகுந்திறத்த! முப்பத்திரண்டறங்களில் உயர்ந்தது யாது? என வினவ, முனி

வர் சற்றுநிதானித்து, அறங்கள் அளவிலவாயினும் அரசே! அறுவகை ருசியுடனளிக்கும் அன்னதானமே மிகவுன்னதமாகும். அதனினுமுயர்ந்தது காலமறிந் தூட்டல், அதனினுமுயர்வு பிதிர்த்தினித் தளித்தல், அதனினுமுயர்வு காவிரி தீரத்திலளித்திடல், அதனினுமுயர்வு சிவாலயமதனிலென்று மென்மேலும் பயனளிக்கும் விபரங்களையுணர்த்தினர். மன்னவன் மகிழ்ந்து அன்னதற்கேற்ற உன்னதத்தலமியாதோ அடியேற் கருள்புரிந்தருள்கவெனப் பணிந்திட்டான். பாத்துவாசரும் சொல்வாராயினர். பொன்னிநதித்தென்பாலிருமுக்காற்காவதத்தில் தருப்பையங்கானெனுந் திருநள்ளாறென்றதோர் சிவஸ்தலமிருக்கின்றது. அப்பதியையடுத்த வாரண்யத்தில் நெடுநாளாயொரு கள்வனிருந்து வழிபறித்துண்டு வந்தான். அவன் ஒருநாள் தனக்கொன்றுங் கிடைக்காது பசியினால் மெலிந்து இவ்வூர்க்கருகிலிருக்குந் தீர்த்தக்கரையி லொளிந்திருந்து மேனாட்டிலிருந்துவந்த வர்த்தகன் அங்கிறங்கி, யருகிருக்கும் பொதுச்சாவடியில் கட்டமுதைத் தலைப்புறம் வைத்துக்கொண்டு நித்திரைசெய்வதைக்கண்டு களவுசெய்ய எத்தனித்தான். அவன் வேறொன்றுமிலாது இம்மூட்டைமட்டுங் கிடைத்ததைக்கொண்டு தனதரும்பசி நீங்கவுண்டு களித்திருந்தான். விழித்த வணிகன் கட்டமுதைக் களவு செய்தவன் நங்கழுத்தையு மரிவானென்று துயருழந்த சிந்தையோடு தன்னகர்சென்று வறுமையடைந்து அடாதன்புரிந்து மரணமடைந்தான். கள்வனுக்குக் கட்டமுது சிவதலத்து அருந்திடக்கொடுத்த அபுத்திபூர்வகமான புண்ணியபலத்தால் அவனை சிவகணத்தவர் விமானத்தேற்றி வெள்ளியங்கிரிவாசரான சாம்பவமூர்த்தி சந்நிதி சேர்ப்பித்தனர் என்று முனிவர் கூறவும் அரசனிருகாங்களையுஞ் சிரமேற்குவித்து வணங்கி முனிவர்பால் யாத்திராதானமளித்து விடைபெற்று அரசை அமைச்சர்பால்விடுத்து மனைவியுடன் ரத கெஜ துரக பதாதிகள் தன்னைச்சூழ்ந்து வர மலை வனங்களையும் கடந்து வண்டுகள்பாடத் தேன் அருவியோடிப் பாய்ந்து நிரம்பிச் சேனைகளைச் சேற்றிற் படுக்கும்படி திங்கள் மும்மாரிபெய்து செழித்து வளமோ



ங்கிய சோழதேசத்தையடைந்து காவிரிதீரத்து வேண்டுந் தானதருமங்களையுஞ் செய்துகொண்டு வானவர், தானவர், இயக்கர், சித்தர், முனிவர், பண்ணவர்கள் பணிந்திடும் திருநள்ளாற்றை யடைந்து பிரமதேவன் நளன் முதலியவர்கள் புரிந்த திருப்பணியனைத்தையும் நவரத்தின மிழைத்த சித்திரப் பதுமைகள்போல முன்னினு மதிகச் சிறப்புறச்செய்தான். தனுர்மாதப் பௌர்ணிமையில் சதுர்விதவருணாச்சிரமதருமங்களில் வழுவாதிருக்கும் அனைவர்களையு மழைத்து நள்ளாறுடையநண்பனுக்கு அபிஷேக ஆராதனைகளும் புரிந்து அன்னக்கொடியேற்றி அளவிலா தமுதளித்தான். எம்பிரானுவப்ப சிவனடியார்கள் வேண்டியனைத்து மீந்து மகேசுர பூசையும் வழுவுறாது முடித்துத் திருக்கூட்டத்துடன் சந்நிதியடைந்து ஏத்திப் போற்றிக் கடன்மடை திறந்திடு மன்பிடை மூழ்கி நின்றபோது சிவபிரான் பிரசன்னராகி, வேண்டும் வரமியாதெனவும், திருவடிக்கன்பும் ஏற்பவர்க்கில்லையென்னாதளிக்குஞ் செல்வமும் வேண்டுமென்றடி பணிந்தான். சிவபெருமானும் அங்ஙனமேயளித்திட நெடுங்கால மத்தலத்திருந்து பின்னிறந்து மீண்டு மத்தலத்திலே செனித்து துறவடைந்து சிவசாயுச்சிய மடைந்தான் உருசிமகராசனென்றுரைத்துச் சூதபுராணிகர் பின்வருங்காதையைப் பேசத்தொடங்கினார்.

உருசிராசச் சருக்கம் முற்றிற்று.

---

## அக்கினிவண்ணச் சருக்கம்.

நீர்வளமிக்க காம்பிலி நகரத்திருக்கும் வைசியகுல திலகனும், ஏற்பவர்க்கில்லையென்னா தளிக்கு மீகையுடையவனும் இயக்கர் வேந்தனுக்கிணையான அழகு சௌந்தர்ய சம்பன்னனும் இழிதொழில் புரியாதீட்டுபவனுமாகிய தெண்டிகுப்தன், நெடுநாளாகச் சந்ததியில்லாது அருந்தவ தான தருமங்களை யிடையறாது புரிந்து ஆரியனனுக்கிரகத்தால் இரு குழந்தைகளைப் பெற்று அக்கினிவண்ணனெனப்

பெயரமைத்து வளர்த்துவந்தான். அந்நாளில் அக்குழந்தை
களிருவரும் அரசரிமைக் குரியவர்போல அங்கவிலக்ஷண
முற்றுக் கல்வி கேள்விகளில் வல்லவர்களாகி காளைப்பருவத்
தையடைந்தனர். அதனைக்கண்டு மகிழ்வடைந்த தந்தை
யிறுதிநாளணுகியதனால் தேகவியோக மடைந்தான். வாலிப
ரிருவரும்வருந்தி மண்ணிற்புரண்டழுதனர். அதனைக்கண்ட
பந்துக்கள் வந்து ஆற்றித் தேற்றப் பிதிர்க்கடன் யாவையும்
பிசகிலாது முடித்தனர். பின் தந்தைசெய்துவந்த முந்திய வர்
த்தகத்தில் முயன்று முன்னினும் பதின்மடங்கு பொருள்க
ளையீட்டி வருவதைக்கண்ட மாதுலன் முதலியோர் ஒருங்கு
சேர்ந்து நற்குலத்துதித்த பொற்கொடி யிருவரை மணம்
புரிவித்தார்கள். இல்லறதருமமும் வழுவாது நடந்துவந்
தது. மன்மதனையொத்த இவ்வாலிபர்களைக்கண்ட வஞ்சமங்
கையர்கள் தங்கள் வஞ்சகச் செயலால் இவர்கள் மனதைக்
கவர்ந்து அவர்களைக் கலவியில் வல்ல காமியர்களாக்கிக் கைப்
பொருளனைத்தையுங்கவர முயன்றுவந்தார்கள். அதனால் அ
வர்கள் கற்புடைய மனைவியரைச் சொர்ப்பனத்தும் நினையா
மற் கற்றோர் சொல்லை முற்றுமறந்து, உற்றநற்றேசிக னுயர்
மொழிதுறந்து, பொன்பொருள்தேடும் வர்த்தகந் தவிர்ந்து,
அற்பர்கள் உறவை யனுதினங்கொண்டு, குலநலமியாவுங் கு
றைவறவிடுத்து இகழ்ச்சிக்குச் சிறிதும் நாணாது திரிந்துவந்
தார்கள். வேசைய ராசை யறுப்பவர் இவ்வுலகில் யாவரோ
வென்று சொல்லும்படி பெருந்தனமியாவையு மவர்களுக்
களித்து வறியவராகிய இவண்ணர்கள், உண்ணப் பிடியன்ன
மும் உடுக்க முழவாடையும் கிடைக்கப்பெறாது இரப்பினுங்
கொடுப்பாரில்லாமையால் களவுசெய்வோர் குழுவிற்கூடி ஜீ
வித்தலைக்கண்டு காவலர் புடைத்துச் சிறைப்படுத்தி வருத்தி
னர். பின் அவர்கள் காராக்கிரகங் கடந்து விலங்கை முறித்
தெறிந்துகானகஞ்சென்று வழிமறித்தடித்துப்பறித்து வாழ்
நாள்கழித்து வருவாராயினர். அப்போது கோடையில் மேக
ங்குடைபிடிப்பதுபோல பொய்யாவிரதியெனு மெய்வேடம்
பூண்ட ஐயர் ஒருவர் அவ்வழிப்போதரத் தீக்குலமக்களிரு
வருங்கண்டு நெருங்கித் தொண்டையை நெரித்துத் தொந்



தரை புரிந்தார்கள். நொந்த வேதியர் அவர்களை நோக்கி,
ஐயோ! தன்மாதன்ம முணர்ந்தவர்கள் யாரையும் கொலை
செய்யத் துணியார். அதற்கிணையான வழிபறித்துண்ணவும்
நினையார். மானுடயாக்கையைப்பெற்றுமிந்த அடாதகிருத்தி
யத்திற்குடன்பட்டீர்களே! அப்பா! நீங்களெப்போது நற்
கதியடையப்போகிறீர்களென்று இவர்களைப் பார்த்து பச்சா
தாபப்படவே வாணிபராகையால் உள்ளம் நாணி சற்று நிதா
னித்தார்கள். அப்பொழுது அவர்களைப்பார்த்து முனிவர்
களவுபுரிவோர்கள் எரிவாய்த் தீநரக மிருபத்தெட்டுகோடி
யிலும் புகுந்து அழுந்தி நெடுநாளிருந்து பின் சென்மித்
தாலுமிழிகுல யாக்கைதான் கிடைக்கும். மேலும் பல பிறப்
பிலும் பிறந்து பசிநோயால் வருந்துவர் என்பது உண்மை
யன்றோ? என்று புன்னெறி மாக்களுக்கு நன்னெறி புகட்டி,
முற்பகலற்பமேபுரியினும் பிற்பகல் பெரிதாகவே அது விளை
யுமென்பது முதலிய உண்மைகளை யெடுத்துக்காட்டினர்.
நல்லோரின் நோக்காலும் வாக்காலும் சேர்க்கையாலும் நல்
லறிவுச்சுடர் சிறிது ஒளிர்தர அத்தீயவர் அம்முனிவ
ரடி பணிந்து தாயினுமினிய தயாளுவே! அடியேங்கள்
அறியாது செய்த தீங்கினை நினையாது காத்திடவேண்டு
மெனப் பரிந்துகூறி தாங்கள் பண்ணியதெல்லாம் பாப
மென்று தெரிந்து மனமுருகி தங்கள் சரிதங்களையெல்லாம்
அறிவித்து இனி யாங்கள் கடைத்தேறும் மார்க்கத்தைக்
காட்டியருளவேண்டுமெனக் கண்களில் நீர்பெருக்கி யரு
கில் நின்று கேட்டுக்கொண்டார்கள். கருணைக் கடலாய
முனிவர் கனிவுகூர்ந்து நீங்களிப்பிறப்பிலு முற்பிறப்பிலும்
புரிந்த தீங்குகள் அளப்பிலவாகும். நீங்கள் அவற்றை
யொழித்துப் பரிசுத்தராவதற்குரிய ஒரு தலத்தைச் சொல்
லுகிறேன் கேளுங்கள். அத்தலம் செழுந்தமிழுலவுறுஞ்
சோணாட்டில் ஐம்பத்தாறுகோடி தீர்த்தங்களும் புண்ணிய
க்ஷேத்திரங்களும் நிறைந்த காவிரிநதியின் நந்தி தீர்த்த
தென்கரையில்நின்று ஒன்றரைக்காவதத்தி லோங்கிவிளங்
குந் திருநள்ளாறெனுந் திவ்ய சிவக்ஷேத்திரமேயாகும்.
அதனை யடைந்து அயன்முதல் மூவரும் இந்திரன் முதலிய

ளன்மரும் பிறரும் துன்பமொழிந்து சித்திமுத்தியைப் பெற்றிருக்கின்றார்கள். நீவிரிருவருஞ் சென்று அங்குள தீர்த்தங்களில் படியுங்கள். யாமுமங்குறைகுவோமென்று கூறி ஐயோகன்றனர்.

உடனே இவ்விருவரும் இராப்பகலாகத் தென்னாடாகிய கன்னடபுக கடந்தார்கள். இடையில் காடு மலை யாவுங்கடந்து எங்குஞ் சிவதளியும் மகச்சாலைகளுஞ் சூழும் பொன்னிநதி தீரத்தையடைந்து புனிதரோடி கௌரிநாதன் திருவடி பணிந்தபின் இவ்விருவரும் தென்கீழ்த்திசைநோக்கிநடந்து தேன்மலர் வாவிகள் திகழ்தருஞ் சோலைகள் கன்னல் கமுகங் காடுகள் கடந்து திருநள்ளாறெனுந் திருப்பதியடைந்து மறையோர் வகுத்தபடி. வானவர் தீர்த்தமியாதிலும் விதிப்படியாடி திருநடஞ்செயுந் தியாகேசன் சந்நிதிக்கேகும்போது நீதிகூறிய வேதியர் போதரக்கண்டு வணங்கி, ஏத்திப்போற்றித் தோத்திரஞ் செய்ய அந்தணர் மகிழ்ந்து, மைந்தரே! சந்திரசேகரன் றனைப்புரிவாரென்று அழைத்துக்கொண்டுபோய் சிவபிரான் றரிசனை செய்வித்தார். மூவரும் பணிந்து கரஞ்சிரமேற்குவித்துச் "சங்கரா போற்றி யெல்லாச் சமையமு மானாய் போற்றி, அயன்மாலுக் கறியாய் போற்றி யடியருக் கெளியாய் போற்றி, விடைமே லழகாய் போறறி திருநள்ளா றுடையாய் போற்றி போற்றி" என்று துதிகள் பலவும் புரிந்து இருகண்களினு மானந்த பாஷ்பம் பெருகப் பரவசமாகித் தெளிந்து ஏனைய சிவலிங்கங்களையும் வணங்கி பிரதக்ஷிணமாகச்சென்று தென்பாலிருக்குந் திருமடத்திற்றங்கி திங்கள் மூன்றும் இனைந்தவாறு முப்போதுஞ் சிவதரிசனஞ்செய்துகொண்டு சிலநாளிருந்தனர். அப்போது இவினைகழிய ஆயுள் குறுகி தேகவியோக மடைந்தனர். அவர்களுக்கு திரிநேத்திர காளகண்ட சதுர்ப்புய சந்திர சடாதர கங்காதரன் பிரத்தியக்ஷராகி மிருத்திஞ்செய மந்திரத்தை யுபதேசித்து சாரூப பதத்தைத் தந்தருளினரென்று சூதபுராணிகருரைக்கவும் நைமிசாரணியரெழுந்து பணிந்து ஆரியோத்தம!



அத்தலஞ் சூழ்ந்த சுத்த தீர்த்தங்களின் மகத்துவங்களையும் அடியேங்களுக் கருள்கூர்ந் துரைத்தருளல் வேண்டுமெனப் பணிந்துகேட்க முனிவருரைக்க ஆரம்பித்தனர்.

அக்கினிவண்ணச்சருக்கம் முற்றிற்று.

## தீர்த்தச் சருக்கம்.

கேளும் நைமிசாரணியத்து ளண்ணிய முனிவர்களே, மூர்த்தி தலந் தீர்த்தங்கள் மூன்று தமைந்த திருநள்ளாறெனுந் திவ்யக்ஷேத்திரத்தில் இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் எனும் அஷ்டதிக்குப்பாலகர்களும் கிழக்குமுதற் பிரதக்ஷிணமாக அவரவர்கள் திக்கில் தனித்தனிப் பெயர் விளங்கிட சிவலிங்கமுந் தீர்த்தமு மமைத்துப் பூசித்தனர்கள். நான்முகக்கடவுளாம் பிரமதேவன் ஆலயத்தின் கீழ்பால் அம்பிடுதூரத்திற் றன்பெயர் துலங்கத் தீர்த்தமும் சிவமூர்த்தமும் பிரதிஷ்டை செய்தான். திருமகள்மார்பன் ஒருதனி லிங்கம் தென்கீழ்த்திசையிற் சமைத்தான். திக்குப்பாலகர்களமைத்ததே யல்லாமல், தென்றிசையிற் காசிபனொரு சிவலிங்கம் தேசுற அமைத்தான். வாயுதிக்கில் நளன் வழிபட ஒருதளியுங் குளமும் அமைத்தான். அகத்தியமுனியும் உருசியாசனும் ஆங்கிருலிங்கமு மமைத்தனர். அர்ச்சுனன் வடக்கிலும் பாஞ்சாலன் போசன் றனித்தனி ஈசானத்திக்கிலும் அருவுருவாஞ் சிவமூர்த்தமிருத்திப் பணிந்தேத்தினர். தருப்பாரணியத்தொளிருந் தாணுவலாது சிவலிங்கம் பதினேழும் திசைதொறும் விளங்குகின்றன.

கலைமகள் திருச்சந்நிதியில் வாணியும் வடபுறத்தவள் வாகனமாகிய அன்னமும் தீர்த்தந் தோன்றிடச் செய்தனர். முனிவர்களே! இச்சிவதலத்துட் சென்று காத்திறுற்

தீண்டினும் பஞ்சமா பாதகங்களையும் போக்கும்படியான திவ்ய தீர்த்தங்கள் பதின்மூன்றிருக்கின்றன. அவைகளில் முழுகுங்காலங்களில் மூழுகவேண்டும். மேற்செப்பிய பிர்ம்ம தீர்த்தத்தில் இடையறா தாடுவோர் பிரம்மபத மடைவார்கள். தனுர்மாசமாகிய மார்கழித்திங்களி லுதைய ஸ்நானஞ்செய்து நள்ளாறுடையான் நளினமலர்ப்பாதம் பணிவோர்க்கு காக்கைவலிப்பு முதலிய சகல பிணிகளும் அனலிற்படும் பஞ்சிபோல் அழிந்துவிடும்.

இத்தலத்திலிருக்கின்ற பிர்ம்ம தீர்த்தம், நளதீர்த்தம், அதனருகிலிருக்கும் கங்காகூபம் என்பவைகள் செங்கிறமாகுமானால் மூன்று மாசத்தில் தேசவாசிகளுக்குத் தீங்கு விளைந்திடும். ஆகையால் அதற்குள் சிவலிங்கத்தினுக்கு மகாபிஷேகமும் சம்புரோக்ஷணையும் முறைப்படி செய்து வருவார்களானால் குற்றம் நீங்கி நன்மையடைவார்கள். தென்பாலுள்ள சரஸ்வதி தீர்த்தத்தில் மண்டலம் விதி முறை பிசகாது ஸ்நானஞ்செய்து சிவதெரிசனஞ்செய்து வருவோர் ஊமையாகவிருந்தாலும் கவி செய்யும்படியான கல்வித் திறமை அடைவார்கள். மேற்றிசை தொடர்ந்திருக்கும் அம்சதீர்த்தத்தில் அனுதினம் படிந்து வருபவர்கள் குஷ்டரோக முதலியவற்றினின்றும் நீங்கிவிடுவார்கள். இந்த அம்சதீர்த்தத்தில் ஆவணிமாதம் பௌர்ணமியில் மூழ்கி அகத்தியன் பூசித்த சிவலிங்கத்தை அருச்சனை புரிபவர்களுக்கு சிவலோகபதவி கிடைக்கும். அகத்தியனும் சனகாதிகளும் படிந்து அவரவர் எண்ணியவாறு சிறந்த பயன் அடைந்திருக்கிறார்கள். இப்போதும் அதிலாடிவருபவர்கள் இம்மையிலேயும் பெரும் நன்மைகளையடைவார்கள். மாசப்பிரவேசங்களில் நளதீர்த்த மாடுவோர்கள் மேகரோகங்கள் முதலிய தீர்ந்து இஷ்டசித்திகளைத்து மெய்துவார்கள்.

நளபதிநிமித்தம் சிவபிரான் றன்சூலாயுதத்தா லுண்டாக்கின தீர்த்தமாகிய கேணியைக் கண்டு தெரிசித்தவர்களுக்குச் சகல பாவங்களு நீங்கிப்போகும். கங்கை கூப



மெனுங் கிணற்றுநீர் நிறம் வேறுபடுமாயின் அச்சலத்தையுடனே இறைத்துப் புண்யாசமனஞ்செய்து புனிதமாக்கியபிஷேகஞ் செய்யவேண்டும். இல்லையேல், அரசனுக் கிடர் தரும். அப்புனித நீரைப் பார்த்துத் தெரிசித்தால் சகல பிணியும் பீடையும் அகன்றிடும். அதில் மூழ்குவோர் அதிபாதகம் வந்தடையப்பெறுவார்கள்.

இந்திர தீர்த்த முதலிய அஷ்ட திக்குப்பாலகர்களின் தீர்த்தம் படிந்திடுவார்களாயின் சந்தேகமிலாது சங்கரன் வாழும் சாலோகபதமடைவார்கள். புரட்டாசிமாதம் மாளய பக்ஷத்தில் முக்குளதிரம்படிந்து பிதிர் சிரார்த்த முதலியன புரிபவர்களுடைய குலம் மேன்மேலும் தழைத்துச் செழித்தோங்கி விருத்தியடையும்.

கேளும் முனிவர்களே! கொலை, களவு, கள், காமம், பொய் என்று சொல்லும்படியான பஞ்சமாபாதகங்கள் செய்பவர், தருமஞ் செய்கிறேனென்று தன் வயிறு வளர்ப்பவர், தந்தை தாய் மைந்தர் பசித்திருக்க வுண்பவர், சிவபூசைத் திருப்பணிக்கு இடர் விளைப்பவர், வேதியர்கள் பொருள் நிலத்தை விரும்பிடுவோர், செய்நன்றி மறந்தோர், நயவஞ்சகர், அமர்க்களத்து அரசனைவிட்டு அப்புறம் போந்தவர், கருவழிப்பவர், கன்றுக்குப் பால் விடாது கறந்தவர், பசுவைக் காப்பாற்றாதவர், கடன்பட்டு முரண்பேசுவோர், பிறர் தாரம் விரும்புவோர், தருவதாய்ச் சொல்லி தாராதவர், சிசு முதலிய ஜீவவதை புரிவோர், பொய்சாக்ஷி யுரைப்போர், புலாலுண்போர், புகழை விரும்பிப் போற்றிய கல்வியோர், நுண்ணிய நூற்பொருளுரைப்பவரைக் கண்ணியங்குறைபடக் கூறுவோர், செல்வத்தாலுந் தேகபலத்தாலுந் தனக்கொப்பாரில்லையெனச் செருக்குற்றோர், சுமைகூலி கொடாதவர், கொடுஞ்சமரிற் கொல்வோர், யுத்தகளத்து மொத்துண்டார்க்குச் சித்தமிரங்காதார், திருநீறு உருத்திராக்ஷம், இலிங்கம் என்பவற்றைத் தானுமணியாது அணிந்தோர்களையும் இகழ்ந்து அவர் கைப்பொருளைக் கவருகின்றவர், உத்தமர்களுளங்கலங்க நிந்தை புரிந்தவர், கொடுங்கோல்

புரியும் வேந்தர், மனுமுறைமாறி மண்பறித் துண்போர், வாழுமனையிற் றீயிடுவோர், தாகுசெய்வோர், தானியங் குறைப்போர், வஞ்சகப்புரிவோர், வழக்கோரஞ் சொல்வோர், அரசுமுதலிய விருக்ஷங்களை யழிப்போர், அறத்தைக் காட்டி மறம்புரிவோர், தேவர்க்கிட்ட பொருளைத் திரும்பவுங் கொள்வோர், கோயில்மாக்களைத் தனக்காம் வேலையிடுவோர், கோயிலுக்குரிய குடை, கொடி சின்னங்களை தன் பணிக் குபயோகிப்போர்கள், ஆலயத்துள் ளாகாக்குற்றம் முப்பத்திரண்டினையும் அங்கு புரிபவர், வைன்விலைபகர்வோர், நிமித்தமின்றி மனைவி மக்களை விட்டகன்றோர், ஆபத்திற் காக்க அறிவில்லாதோர், நம்பிவைத்த பொருளுக்குக் களவு சொல்லுவோர் இவ்விதமாக அனேக பாதகங்களை இடையறாதியற்றி இருபத்தெட்டுகோடி நரகங்களிலுங்கிடந்து கரையேறக்கூடாத பெரும்பாதகர்களும் இந்தத் திருநள்ளாறெனுந் திவ்யக்ஷேத்திரத்தையடைந்து திருக்குளமூன்றிலுந் தீர்த்தமாடி ஆகமவிதிப்படித் தங்களாலியன்றவாறு தானதருமங்களைச் செய்து சிவபிரான் றிருவடிகள்தொழப் பெறின், சகல பாவங்களினின்றும் விடுபட்டுச் சாரூப பதமடைந்திடுவார்கள்.

ஒவ்வொரு மாதப்பிறப்பினும் அமாவாசை பௌர்ணமியிலும் மார்கழிமாத முதயத்திலும் கிரகணபுண்ய காலத்தும் அஷ்டமிதினத்தும் சிவபிரானுக்கபிஷேகஞ் செய்துவைப்போர்களும் இப்பதமடைவார்கள். சித்திரைமாத மாலை சிவதெரிசனம் விசேடபலனையளிக்கும். சிவபிரானுக்குத் தும்பைமாலை யணிவித்தால் மலரொன்றினுக்கு கோடி வருஷஞ் சிவலோகவாசஞ் சித்திக்கும். தாமரைநூலில் நெய்த்தீப மிடுவோர்கள் இழையொன்றுக்கு கோடி வருடம் சிவபதத்திருப்பார்கள். ஆனிமாதம் பௌர்ணமியில் அபிடேக ஆராதனை புரிபவர்கள் மனிதராயினுந் தேவர்களேயாவார்கள்.

எத்தொழில் நிமித்தமாயினுஞ்சென் றித்தலத்தொரு நாள் வாசஞ்செய்தால் தீயவினைத்துந் தீர்ந்து நல்லனவெல்



லாம் நணுகும். நள்ளாறுடைய நாதனுக்கு ஒரு பசுவாயினுமல்லது ரிஷபமாயினு மவர்பேர் பொறித்துவிடுவோர்கள் கோடியுகம் சிவலோகம் ஆள்வார்கள். திருவிழாக்காலத்து அன்னதானஞ் செய்வோர்கள் அவிசெனும் பருக்கையொன்றினுக்கு கோடியுகமாக நீடூழிகாலஞ் சிவபதத்தில் வாழ்வார்கள். கேளும் முனிபுங்கவர்களே! யென்று சூதபுராணிகர் கூறவும் முனிவர்களெலா மெழுந்து பணிந்து நள்ளாறுடைய நண்பனை யேத்திப் போற்றித் துதித்தனர்கள்.

யாதினுமுயர்ந்த நள்ளாற்றுத் தலப்புராணத்தைப் படித்தவர்களும், கேட்டவர்களும், அச்சிலிட்டவர்களும், அதற்குதவிபுரிந்தவர்களும், முயற்சித்தவர்களும், அக்ஷரத்தினுக்கொரு கோடியுகம் நச்சரவம்பூண்ட நாள்ளாற்று நாதனடிக்கீழ் நண்ணுவது சரதமேயாம்!! கேளும் முனிவர்களே! யென்று சூதபுராணிகர் சொல்லிமுடித்தனர்.

தீர்த்தச்சருக்கம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

Q23:38.21193TN
N35
78148

---

திருநள்ளாற்றுப்புராணம் விலை அணா 6.

ஆஸ்திகர் ஒவ்வொருவரும் அவசியம் படிக்கவேண்டியது. படிப்பவர் ஸ்ரீ சனிபகவானால் ஏற்படும் துன்பத்தினின்றும் தவறாது விடுபடுவர். வேண்டுவோர் திருநள்ளாறு தேவஸ்தானம் ஆபீஸில் பெற்றுக்கொள்ளலாம்.